விலை ரூபா 20.00


போர்க் குற்றவாளி
பக்கம் 09


ஆலய முகப்பு இடிப்பு
பக்கம் 13


சென்னையில் வியாழன் ஆர்ப்பாட்டம்
பக்கம் 17


பரபரப்பான கட்டத்தில்
பக்கம் 19

www.onlineuthayan.com

பக்கங்கள் : 30

# உதயன்

சுடர் 27
கதிர் 154

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 16 சனிக்கிழமை (28/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# தமிழீழக் கனவை நனவாக்க வாழ்வை அர்ப்பணியுங்கள்

## தி.மு.க. தொண்டர்களுக்கு கருணாநிதி அறைகூவல்

கொழும்பு, ஏப்.28
தமிழீழத்தை அடையும் ஈழத்தமிழர்களின் போராட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ளது தற்காலிக பின்னடைவே. காந்தி கூறிய அமைதி வழியில் தமிழீழக் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன்வாருங்கள்.

இவ்வாறு தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி.

கட்சிஉறுப்பினர்க 04



## எதிர்க்கட்சிகளின் மே தினம் குருநகரில்

யாழ்ப்பாணம், ஏப். 28
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் மேதினம் யாழ். குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

6 எதிர்க்கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் யாழ். நகரில் இம்முறை மேதின நிகழ்வை நடத்துவதாகவும் அந்த மேதின நிகழ்வு குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித் 04

## ஜனாதிபதி மஹிந்த நாடு திரும்பினார்

தென் கொரியாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் நாடு திரும்பினார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஜனாதிபதி குழுவினரை அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் வரவேற்றனர்.

## இலங்கை – இந்திய உறவு வலுவடைவது அவசியம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சிறந்த உறவு நிலவி வருவதாகவும் அந்த உறவை மேலும் வலுப்படுத்த வேண்டியது அவசியம் எனவும் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார். இலங்கையும் இந்தியாவும் உறுதியான ஒரு பொருளாதார அபிவிருத்தி இலக்கை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கொழும்பில் நடைபெறும் 2012 ஆம் ஆண்டின் இந்திய நிர்மாணத் துறைசார் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

## ஒழுக்காற்று குழுவின் முன்னால் மேர்வின்

பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவின் முன்னிலையில் விளக்கமளித்துள்ளார். சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி சம்பனி பத்மசேகர தலைமையிலான மூவர் அடங்கிய ஒழுக்காற்றுக் குழு முன்னிலையில் அமைச்சர் மேர்வின் சில்வா முன்னிலையானதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்திலுள்ள வரை தன்மீது யாரும் கைவைக்க முடியாது என அமைச்சர் மேர்வின் சில்வா கூறியமை மற்றும் களனி பிரதேச சபை அங்கத்தவர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு முன்னர் தெரிவித்திருந்தது.

## பரிந்துரைகளின் செயற்றிட்டம் குறித்து ஹிலாரிக்கு அறிக்கை

### அமைச்சர் பீரிஸ் சமர்ப்பிப்பார்

கொழும்பு, ஏப் 28
நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் செயற்திட்டமொன்றை, இலங்கை அரசு, அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளும் இலங்கையின் 04

## முல்லைத்தீவு சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டே அரங்கேற்றுகிறது அரசு

### இன்னொரு முள்ளிவாய்க்கால் அவலம்; வினோ எம்.பி.

கொழும்பு, ஏப் 28
மீனவர்கள் என்ற போர்வையைப் பயன்படுத்தி இலங்கை அரசு, முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட அடிப்படையில் சிங்களக் குடியேற்றங்களை அசுர வேகத்தில் அரங்கேற்றி வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழ் மக்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு காலத்தை இழுத்தடிக்கும் அரசு, சிங்களக் குடியேற்றங்களை அரங்கேற்றி தமிழர் தாயகப் பகுதியையும் சிங்களமயப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது 04

## ஜனாதிபதியின் குத்துக்கரணம் இந்திய எம்.பிக்கள் அதிர்ச்சி

புதுடில்லி, ஏப் 28
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழுவுக்கு 13ஆவது அரசிலயமைப்புத் திருத்தம் தொடர்பாக எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை என்று இலங்கை அரசு கூறியுள்ளமை குறித்து, இந்தியக் குழுவுக்குத் தலைமையேற்றிருந்த, இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கடும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

அண்மையில் 04

## தம்புள்ள பள்ளிவாசல் இடிப்பு யாழ். முஸ்லிம்களும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28
தம்புள்ள பள்ளி வாசலை அகற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

யாழ். நகர் மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முகைதீன் ஜும்மாப் பள்ளி வாசல் வளாகத்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இராணுவத்தினரும் பொலி 04

## போர் வீரர் மாதம் பிரகடனம்

கொழும்பு, ஏப்.28
ஏப்ரல் 30 ஆம் திகதியிலிருந்து மே 30 ஆம் திகதி வரையும் 'போர்வீரர்கள்' மாதமாக பாதுகாப்பு அமைச்சு நேற்று பிரகடனப்படுத்தி உள்ளது.

முப்பது வருட கால உள்நாட்டுப்போர் முடிவுக்குக் 04

# கொலை, ஆள்கடத்தலில் ஈ.பி.டி.பி. ஈடுபட்டது: செய்திக்காக ரூ.1,000 கோடி கேட்கிறார் டக்ளஸ்

## மேல்நீதிமன்றில் வழக்கு; உதயன் பதில் மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஏப். 28
வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சட்டவிரோதக் கொலைகள் மற்றும் ஆள் கடத்தல்களில் ஈ.பி.டி.பியும் கருணா குழுவும் ஈடுபட்டன என்று தெரிவிக்கும் அமெரிக்கத் தூதராக இருந்த பிளேக்கின் ஆவணத்தை வெளியிட்டது விக்கிலீக்ஸ் என உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டமைக்காகத் தனக்கு 1,000 கோடி ரூபா தருமாறு கேட்டு இலங்கை அரசின் பாரம்பரிய, சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை உதயன் சட்டப்படி எதிர்கொண்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷவின் வழிகாட்டலில் சட்டத்தரணி ரகுராஜ் நேற்று முன்தினம் பதில் மனுத் தாக்கல் செய்துள்ளார். ஜூலை மாதத்தில் விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் தவணை 04


Currently released so far... 251287 / 251,287

Viewing cable 07COLOMBO728, SRI LANKA: GSL COMPLICITY IN PARAMILITARY

If you are new to these pages, please read an introduction on the structure of a cable as well as how to discuss them with others. See also the FAQs

| Reference ID | Created | Released | Classification | Origin |
|---|---|---|---|---|
| 07COLOMBO728 | 2007-05-18 09:22 | 2011-08-30 01:44 | SECRET | Embassy Colombo |

VZCZCXRO9322
OO RUEHBI RUEHLMC
DE RUEHLM #0728/01 1380922
ZNY SSSSS ZZH

உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட

SINGER POWER ஜெனரேட்டர்கள்
இன்றே விரையுங்கள்.



Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக்

கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. 0774685771
சங்கானை 077 2208232
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர் கைதாவதை உடன் தடுத்து நிறுத்துங்கள்

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் அவசர கடிதம்

கொழும்பு, ஏப்.28

"கிழக்கில் இளைஞர், யுவதிகள் வகை தொகையின்றிப் படையினரால் கைது செய்யப்படுகின்றமை உடன் நிறுத்தப்பட வேண்டும். இனி வரும் நாள்களில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாத வகையில் நீங்கள் அவசர தலையீட்டை மேற்கொள்ள வேண்டும்.''

-இவ்வாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதி மஹிந்தவுக்கு அவசரமாக கடிதம் எழுதியுள்ளார்.

கிழக்கில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் எதுவித காரணமும் கூறாது தமிழ் இளைஞர்களைக் கைது செய்து முகாம்களுக்கு விசாரணை என்ற பெயரில் இழுத்துச் செல்கின்றனர்.

படையினரின் இந்தத் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையால் திருமலையில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளன. தொழிலுக்குச் செல்லாமல் இளைஞர்கள் அச்சத்தில் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்கின்றனர்.

இந்நிலையிலேயே இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதிக்கு இந்த விவகாரம் தொடர்பில் கடிதம் எழுதியுள்ளார்.

கிழக்கில் இவ்வாறு இளைஞர், யுவதிகள் எதுவித காரணங்களுமின்றிக் கைது செய்யப்படுவது சட்டவிரோதமான செயல் என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சம்பந்தன் எம்.பி., இந்த விடயத்தில் ஜனாதிபதி விரைந்து தலையிட்டு உடன் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

குறிப்பாக திருகோணமலையில் கடந்த 10 நாள்களாகப் பெருந்தொகையான இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அடிப்படைக் காரணங்கள் எதுவுமின்றி கைதுசெய்யப்படுகின்றனர். இது சட்டவிரோதமாகும். படையினர் இந்நடவடிக்கையை உடன் கைவிட வேண்டுமென பாதுகாப்புப் படைகளின் பிரதானி என்ற அடிப்படையில் ஜனாதிபதி தலையிட்டு வலியுறுத்த வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் சம்பந்தன் முக்கிய வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அத்துடன், நீண்டகாலமாகத் திருமண பந்தத்தில் இணைந்து பிள்ளைகளுடன் வாழ்பவர்கள் கூட புனர்வாழ்வு என்ற போர்வையில் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இது எந்த வகையில் நியாயம்? இந்தப் பிரச்சினைக்கு எமக்கு உடன் தீர்வு வேண்டும் எனவும் சம்பந்தன் அக்கடிதத்தில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் என அறியமுடிகின்றது.

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்




வவுனியா, ஏப்.28

தம்புள்ள பள்ளிவாசல் இடிக்கப்படுவதை எதிர்த்து நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டமும் கடையடைப்பும் இடம்பெற்றன.

வவுனியா பள்ளிவாசலில் இடம்பெற்ற தொழுகைக்குப்பின் தம்புள்ள பள்ளிவாசல் இடிப்பை எதிர்த்து முஸ்லிம்கள் சில மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் பேரணி ஒன்றை நடத்த இருந்தபோதும் அது பின்னர் கைவிடப்பட்டது.

இதேவேளை, வவுனியா நகரில் நேற்று கடையடைப்பும் இடம் பெற்றது. வணக்கஸ்தலங்கள் இடிக்கப்படுவதைக் கண்டித்து இந்தக் கடையடைப்பை மேற்கொள்ளுமாறு வவுனியா வர்த்தகர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது. இதனடிப்படையில் நேற்று வவுனியாவில் முஸ்லிம்களின் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

வவுனியா வர்த்தகர் சங்கம், வவுனியா உலமாக்கள் சபை ஆகியவற்றினால் ஜனாதிபதிக்கு மனுக்களும் அனுப்பி வைக்கப்பட்டன.(த-15-400)

## இலங்கை வந்த எம்.பிக்களுடன் சுஷ்மா சுவராஜ் ஆலோசனை



புதுடில்லி, ஏப் 28

இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பில் இந்தியக் குழுவில் இடம்பெற்றிருந்த அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவியும், இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கியவருமான சுஷ்மா சுவராஜ் சந்தித்துப் பேசவுள்ளார்.

இது தொடர்பில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு இந்தியக் குழுவில் இடம்பெற்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இலங்கை வந்த குழு இந்தியா திரும்பியதும் தமது இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கை ஒன்றை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் உடனடியாகக் கையளிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த அறிக்கை இதுவரை கையளிக்கப்படவில்லை.

இந்திய நாடாளுமன்ற அமைச்சகத்தின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை மத்திய அரசே அனுப்பியிருந்ததால், இந்தக் குழு தனது இலங்கைப் பயணம் தொடர்பிலான அறிக்கையை நாடாளுமன்றத்தில் கையளிக்க வேண்டிய அவசியமில்லை எனத் தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.,

இந்நிலையில் இந்த அறிக்கை குறித்துப் பேசவே இந்தியக் குழுவில் இடம்பெற்றிருந்த அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சுஷ்மா சுவராஜ் அழைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.(த)

## மதத் தலங்கள் இடிப்புக்கு எதிராக நீதிமன்றை நாடுகிறது கூட்டமைப்பு

### நாடாளுமன்றிலும் விவாதம் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.28

பௌத்த மத குருமார்களால் இராணுவத்தின் துணையுடன், அரசின் ஆசீர்வாதத்துடன் ஏனைய மத வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படுவதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் இது தொடர்பில் நாடாளுமன்றத்திலும் விவாதிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராசா உதயனுக் குத் தெரிவித்தார்.

தம்புள்ளவில் பள்ளிவாசல் இடிக்கப்பட்டமை மற்றும் திருகோணமலையில் இந்துக் கோயிலை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையை அடுத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாக மாவை மேலும் கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசின் ஆசீர்வாதத்துடனும் இராணுவத்தினரின் துணையுடனும் பௌத்த மத குருமார்களால் ஏனைய மதத்தவர்களைப் புண்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனைக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இந்தச் செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதற்கு எதிராக முஸ்லிம் சகோதரர்கள் மேற்கொள்ளும் போராட்டங்களுக்கு எமது முழு ஆதரவை வழங்குவோம். பௌத்தர்கள் வசிக்காத இடங்களில் எல்லாம் விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் செயல். இது பௌத்த மதத்துக்கு ஒவ்வாத இழிவான நடவடிக்கை. இதில் சிலர் திட்டமிட்டு ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு ஏனைய மதங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளைக் காண்பித்துப் போராட்டங்களை நடத்துவது குறித்து நாம் ஆலோசித்து வருகின்றோம். அத்துடன் நீதிமன்றத்தை நாடி இதற்கு ஒரு தீர்வு காண எத்தனிக்கும் அதே வேளையில் நாடாளுமன்றத்தில் இந்த விடயம் தொடர்பில் விவாதம் நடத்துமாறு கோரவுள்ளோம்.(த-5)

## லலித், குகன் வழக்கு மேல்நீதிமன்றில் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 28

மக்கள் போராட்ட அமைப்பின் ஏற்பாட்டாளர்கள் லலித் குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் காணாமற்போனமை தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த விசாரணையில் லலித், குகன் ஆகியோர் கடத்தப்பட்டதற்குப் பாதுகாப்புத் தரப்பினருக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென அரச சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அடுத்த தவணை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது காணாமற் போனவர்கள் தொடர்பில் யாழ். நீதிவான் நீதிமன்று விசாரணை நடத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கை காணாமற் போன இருவரின் உறவினர்கள் மேன்முறையீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## நாடு முழுவதும் முஸ்லிம்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்

தம்புள்ள நகரில் கடந்த வெள்ளிக்கிழமை பௌத்த மதக்குழு ஒன்றினால் பள்ளிவாசல் தாக்கப்பட்டதைக் கண்டித்து நாடு முழுவதிலும் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் ஹர்த்தால் மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் தொடர்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் முஸ்லிம் அமைப்புகள் ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஈடுபட்டு வருவதோடு தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் வேண்டுகோளின் பேரில் வழமையான ஜூம்மா தொழுகையின் பின்னர் சேதப்படுத்தப்பட்ட பள்ளிவாசல் முன்றல்களில் நடைபெற்ற விசேட பிரார்த்தனையில் பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

பிரார்த்தனைகளின் பின்பு அங்கு வருகை தந்த சிவில் அதிகாரிகளிடம் இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதிக்கான மனுக்கள் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன. தம்புள்ள பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த பள்ளிவாசலை வேறிடத்திற்கு இடமாற்றம் செய்யக் கூடாது போன்ற கோரிக்கைகளை உள்ளடக்கியதாக ஜனாதிபதிக்கான மனுக்கள் கையளிக்கப்பட்டன.

கண்டன ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் கைவிட்டு நேற்று பிரார்த்தனைகளில் ஈடுபட்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முன் வர வேண் டும் என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்திருந்தாலும் அநேகமான முஸ்லிம் பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடைபெற்றுள்ளன.

(10)

## இறுதிப்போரில் கொத்துக்குண்டு

### மற்றுமொரு சாட்சியம்

கொழும்பு, ஏப்.28

போரின் இறுதிக் கட்டத்தில் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதற்கான மருத்துவப் பணியாளரின் சாட்சியத்தை ஏ.பி செய்தி நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ளது. ஏற்கனவே இறுதிப்போரின் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக ஐ.நாவின் வெடிபொருள் நிபுணர் அலன் போஸ்ரன் வெளியிட்ட அறிக்கையை அடிப்படையற்றது எனக் கூறி இலங்கை அரசு நிராகரித்துள்ள சூழலில் மருத்துவப் பணியாளரின் சாட்சியத்தை ஏ.பி செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது இலங்கை அரசை மேலும் சிக்கலுக்குள் தள்ளியுள்ளது.

இது குறித்து மருத்துவப் பணியாளர் வழங்கியுள்ள சாட்சியத்தில், புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அருகில் கொத்துக்குண்டுகளின் பாகங்களைக் கண்டுபிடித்ததாக ஐ.நாவின் உள்ளூர்ப் பணியாளர்கள் தன்னிடம் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

மேலும் மார்ச் மாத இறுதியில் காலின் கீழ்ப் பகுதியில் கொத்துக்குண்டினால் காயமடைந்த ஒருவர் அனுமதிக்கப்பட்டதாலும் அதனை அகற்றுவது பாதுகாப்பு இல்லை என நாம் கருதியதால் அவரின் கால் பகுதியை அகற்றியதாக அந்த பெயர் குறிப்பிட விரும்பாத மருத்துவ அதிகாரி ஏ.பி செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு கிடைத்த ஒளிப் படத்துக்கு ஒருவரின் கால் பகுதியில் உலோக உருளை ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக ஏ.பி செய்தி நிறுவனம் குறித்த சாட்சியம் பற்றிய செய்தியில் கருத்து வெளியிட்டுள்ளது. (மற்றுமொரு செய்தி 17 ஆம் பக்கத்தில்)

(10-15)

## சிவாஜிலிங்கத்துக்கு ரெலோ கண்டனம்

கடந்த வியாழக்கிழமை தந்தை செல்வாவின் 35 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் குழப்பம் விளைவித்தமை தமக்குக் கவலைதருவதாக தமிழீழ விடுதலை இயக்கம் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் ரெலோ அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராசதுரைக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்தமை தன்னிச்சையான செயற்பாடாகும். ஏற்கனவே சிவாஜிலிங்கத்துடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டுத் தான் குழப்பம் விளைவிக்கப் போவதில்லையெனத் தெரிவித்த பின்பும் சபையில் குழப்பம் விளைவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை அவருடைய தனிப்பட்ட நடவடிக்கையே. கட்சிக்கும் இந்த நடவடிக்கைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. - என்றுள்ளது. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்த வேலைகள் இடம்பெறவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.28

மாதகல் பிரதான வீதி முத்துக்கடைச் சந்திக்கருகில் உள்ள மதகு புனரமைப்பு வேலைத் திட்டம் இருவாரங்களுக்குள் முடிவுறுத்தப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டும் இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில், மாதகல் நங்கூரமிடல், பாதுகாப்பு அணை அமைப்பது தொடர்பான சாத்தியக் கூறு அறிக்கைகளைக் கடற்கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத் திடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

தற்போது மீள்குடியமர்வு கிராமங்களான மாதகல் கிழக்கு, மாரீசன் கூடல் கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள புனரமைப்பு செய்யப்பட வேண்டியுள்ள விவசாய பொதுக் கிணறுகளின் விவரங்கள் பெற்றுக் கொள்ளப்படுமிடத்து அவற்றைத் திருத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகப் பிரதேச சபையினரால் தெரிவிக்கப்பட்டது.

மாதகல் பிரதான வீதி, முத்துக் கடைச் சந்திக்கு அருகில் உள்ள மதகு புனரமைப்பு வேலைத் திட்டத்தை இரு வாரங்களுக்குள் முடிவுறுத்தப்படும் எனவும் காக்கைதீவு கல்லுண்டாய் வெள்ளவாய்க்கால் கள ஆய்வு அறிக்கை, வடலியடைப்பு, வெள்ள வாய்க்கால் அமைப்பது தொடர்பாக சாத்தியக் கூற்று அறிக்கை என்பனவற்றையும் விரைவில் சமர்ப்பிப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தனர்.

இருப்பினும் மதகு புனரமைப்பு வேலைகள் இதுவரையில் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

# மீண்டும் டெங்கு அபாயம்

## கவனம் செலுத்தப்படாமையே காரணம் என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

*யாழ்ப்பாணம், ஏப்.28*

***தற்போது பெய்து வரும் மழை, தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு என்பவற்றால் யாழ்.குடாநாட்டில் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. டெங்கு நோய்ப் பரம்பலையும் அநியாயமான இறப்புக்களையும் தவிர்க்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.***

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல மாவட்டங்களிலும் தற்போது டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. யாழ்ப்பாணத்திலும் தற்போது ஆரம்பித்துள்ளது.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் சூழலுக்கான இசைவாக்கம், டெங்கு நோயின் தனித்துவமான பரவுகின்ற மற்றும் ஆபத்தை விளைவிக்கும் தன்மை, முன்னேற்றமடைய வேண்டியுள்ள நகர்ப் புறங்களிலுள்ள கழிவுப்பொருள், கழிவு நீர் சேகரிப்பு மற்றும் இறுதியகற்றல் முகாமைத்துவம் என்பவற்றால் டெங்கு பரவ ஆரம்பித்துள்ளது. எமது சுற்றாடலில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான நீர்த்தேங்கக் கூடிய இடங்களும் கவனிக்கப்படாமல் உள்ளன.

டெங்கு நோய் அதிகமுள்ள தென்பகுதியிலிருந்து அதிக பயணிகள் வருகின்றமையுடன் இங்குள்ளவர்கள் தென்பகுதிக்கு அடிக்கடி சென்றுவருவதும் இதற்கு ஒரு காரணம்.

வருட ஆரம்பத்தில் டெங்குத் தாக்கம் குறைவடைந்து காணப்பட்டதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த டெங்கு விழிப்புணர்வு குறைவடைந்துள்ளது. பிரதேச, கிராமிய மட்ட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது..

சிகிச்சை பெறுவதற்கு மக்கள் காட்டும் அக்கறையீனமும் இதற்குக் காரணம்.

டெங்கு நோயை இலகுவில் உறுதி செய்வது கடினம். திடீரென ஏற்படும் கடுமையான காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி, வாந்தி, கண்களில் வலி போன்றன சில அறிகுறிகளாகும். இவை ஏனைய நோய்களுக்கும் பொதுவானவை. இதனைத் தொடர்ந்து நோய் இயல்பாகவே குணமடைந்ததைப் போன்று உணரப்பட்டாலும் அது திடீர் மரணத்தை விளைவிக்கக் கூடியது.

எனவே இது குறித்து தகுந்த வைத்தியரிடம் ஆலோசனை பெறல் வேண்டும்.

நான்கு வகையான டெங்கு வைரஸ் கிருமிகளால் டெங்கு நோய் ஏற்படுகிறது. இவற்றில் ஒருவகையான கிருமியால் பாதிக்கப்பட்டவருக்கு மீண்டும் வேறு வகைக் கிருமி தொற்றுமானால் மிக மோசமான பாதிப்பை அல்லது மரணத்தை டெங்கு ஏற்படுத்தும்.

நெருக்கமான குடியிருப்புப் பிரதேசங்களில் பிளாஸ்ரிக், பொலித்தீன், மீள்சுழற்சிக்கான பொருள்கள், குடிமனைக் கழிவுகள் அகற்றுதல், இறுதியகற்றலில் பல குறைபாடுகள் நிலவுகின்றன. நீர், மழைநீர் வடிகால்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். இவை டெங்கு பரவும் காலத்தில் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளன.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## 34 சிறுவர் பாலியல் முறைகேடுகள் குடாநாட்டில் இந்த வருடம் இதுவரை

*யாழ்ப்பாணம், ஏப்.28*

*யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தில் 34 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் அடங்கலாக 62 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளன என்று யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக சிறுவர்கள் மீது துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*இவற்றைத் தடுப்பதற்தான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் அது குறைந்தபாடாக இல்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.*

*இதன் உச்சக் கட்டமாக சாவகச்சேரியைச் சேர்ந்த 17 வயது இளைஞன், 14 வயதான தனது சொந்த தங்கையை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார். குறித்த சிறுமி கர்ப்பமாகியதன் பின்னரே பெற்றோருக்குக் கூட தெரியவந்தது.*

*இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.*

*இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 62 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*ஜனவரி மாதம் 12 சம்பவங்களும் பெப்ரவரி மாதம் 21 சம்பவங்களும் மார்ச் மாதம் 2 சம்பவங்களும் ஏப்ரல் மாதம் இதுவரையில் 27 சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன என்று யாழ். போதனா வைத்தியசாலையில் பதிவுகள் உள்ளன.*

*இதில் 34 சம்பவங்கள் சிறுவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை என்பது கண்டறியப்பட்டுள்ளது. (ம-5)*

## காரைநகரில் மழை நீரை தேக்குவதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

காரைநகர் பிரதேச சபை சக்கலாவோடையில் குளம் ஒன்றை அமைத்து மழை நீரைத் தேக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் குளம் அமைப்பதற்கென இந்தப் பகுதியில் உள்ள தாழ்ந்த பகுதியை கொண்ட காணி ஒன்றை கொள்வனவு செய்வதற்கும் பிரதேச சபை தீர்மானிந்துள்ளது.

இந்த தாழ்ந்த காணியில் குளம் ஒன்றை அமைந்து மழை நீரை தேக்குவதற்கும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நிலத்தடி நீரை நன்னீராக மாற்றும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது**

இந்தப் பகுதியில் உள்ள அனேகமான கிணறுகள் உவர்த் தன்மை கொண்டுள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு நிலத்தடி நீரை நன்னீராக மாற்றும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள உவர் நீர்க் கிணறுகள் நன்னீராக மாறும் வாய்ப்பு உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**அபிவிருத்திக் கூட்டம்**

வடமாகாண அபிவிருத்தி தொடர்பான கூட்டம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். வட மாகாணத்தில் உள்ள அனைத்து அரச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிகள் ஆகியோருக்கு கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

**திரைப்பட விழா**

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் எம்.ஆர்.ரி.சி ஆவணத்திரைப்பட விழா முற்பகல் 10 மணிக்கும், பிற்பகல் 2மணிக்கும் இரு அமர்வுகளாக ஜிம்மாப் பள்ளி வீதியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் சர்வதேச் விருதைப் பெற்ற இரு திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. (ம-14)

**விவேகானந்தர் பிறந்த தினம்**

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தினம் மாலை 4 மணிக்கு சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**புத்தாண்டு நிகழ்வு**

தெல்லிப்பழை பிரதேச செயலகம் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியன இணைந்து நடத்தும் தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் காலை 7 மணி முதல் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ம-36)

**தமிழ்த்தினப் போட்டி**

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்டத் தமிழ்த் தினப் போட்டிகள் காலை 8 மணிக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன. (ம-9)

**காலணி வழங்கல்**

யாழ்.றோட்டறிக்கழகத்தின் அனுசரனையுடன் கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் வழங்கும் நிகழ்வு மாலை 4 மணிக்கு கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**இரத்ததானம்**

செலான் வங்கியின் யாழ். கிளையின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வங்கியின் வட பிராந்திய ஊழியர்களின் அனுசரணையுடன் பிற்பகல் 2 மணி தொடக்கம் யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்த தானம் இடம்பெறவுள்ளது. (ம)

## வாழிடங்கள் அற்ற நிலையில் இங்கு 4 ஆயிரம் குடும்பங்கள்

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்.மாவட்டத்தில் நான்காயிரம் குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாமல் வாழிடங்கள் அற்ற நிலையில் உள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை மனிதநேய அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் மனிதநேய சாசனமும் மனிதநேய மறுசீரமைப்பின் அடிப்படைத் தரங்களும் தொடர்பான கருத்தரங்கு மற்றும் கையேடு வெளியீட்டு நிகழ்வும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ள இடங்களில் நான்காயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர முடியாமல் வாழிடம் மற்றும் ஏனைய உதவிகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாமல் மிகவும் இக்கட்டான சூழலில் வாழ்கின்றன.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய பிரச்சினையாக இது உள்ளது. மிதிவெடி அபாயம் எனும் அச்சத்தால் இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

போர்ச் சூழல் மற்றும் சுனாமி இடர் ஏற்பட்ட காலத்தில் மனிதநேய அமைப்பின் ஒன்றியம் அதிகளவு நலன்தரக் கூடிய பணிகளை முன்னெடுத்தது. அதே போன்று யாழ்.மாவட்டத்தின் தற்போதைய பிரச்சினையைத் தீர்த்து வைக்க அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்- என்றார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் இது குறித்த கையேடு ஒன்று மூன்று மொழிகளிலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இயற்கை மற்றும் போரால் பாதிப்படைந்த மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் எவ்வாறான பணிகளை மேற்கொள்ள முடியும் என்பது குறித்தும் அதற்கான திட்டங்கள், தேவைகள் தொடர்பான தகவல்களும் இந்தக் கையேட்டில் அடங்கியுள்ளன. (ம-14)

## செல்வபுரம், குரும்பசிட்டியில் கிராம சேவையாளர்கள் பணிமனைகள் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தந்தை செல்வாபுரம் மற்றும் குரும்பசிட்டி பகுதிகளில் அமைக்கப்பட்ட கிராம அலுவலர் பணிமனைகள் கடந்த புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே மேற்படி இரு கிராம அலுவலர் பணிமனைகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தந்தை செல்வாபுரத்தில் குறித்த கட்டடத்துக்கான காணியை அந்தப் பகுதியைச் சேர்ந்த சிறீஸ்கந்தராஜா அன்பளிப்புச் செய்திருந்தார். குரும்பசிட்டியில் குறித்த கட்டடத்துக்கான [illegible] கல்பனா அன்பளிப்புச் செய்திருந்தார்.

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 1.6 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன.**

தந்தை செல்வாபுரம், குரும்பசிட்டி கிழக்கு ஆகிய இரண்டு கிராம அலுவலர் பணிமனைகளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஒதுக்கப்பட்ட 1.6 மில்லியன் ரூபா செலவிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கட்டடங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார். இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் தெல்லிப்பழை பதில் பிரதேச செயலருமான எஸ்.முரளிதரன் கலந்துகொண்டார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்புள்ள பள்ளிவாசல் இடிப்பு யாழ். முஸ்லிம்களும் எதிர்ப்பு



01↘ ஸாரும் அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்த நிலையில் பதற்றமான சூழலில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் யாழ். ஐந்து சந்திப் பகுதி வரை ஊர்வலமாகச் செல்ல ஏற்பாடாகியிருந்தது. எனினும் பள்ளிவாசல் வளாகத்தை விட்டு முஸ்லிம் மக்கள் வெளியே வர பொலிஸ் தரப்பு அனுமதிக்காத காரணத்தால் ஊர்வலம் கைவிடப்பட்டது. ஆர்ப்பாட்டம் மட்டுமே இடம்பெற்றது.

பள்ளிவாசலை விட்டு வெளியே வந்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டால் அதைத் தடுக்கும் வகையில் கலகம் அடக்கும் பொலிஸாரும் அந்தப் பகுதியில் பிரசன்னமாகியிருந்தனர்.

பள்ளிவாசலில் நேற்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்ற தொழுகையை நிறைவு செய்து கொண்டே முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதால் யாழ். நகரில் உள்ள அவர்களின் நடைபாதைக் கடைகள், முஸ்லிம் மக்கள் நடத்தும் வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டுக் காணப்பட்டன. (த-3-7)

## ஜனாதிபதியின் குத்துக்கரணம் இந்திய எம்.பிக்கள் அதிர்ச்சி

01↘ இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியக் குழுவிடம், 13ஆவது திருத்தம் மற்றும் அதற்கு அப்பாலான அதிகாரங்களைப் பகிரும் பொறுப்பு தனக்கு இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த கூறியிருந்தார்.

இதனைச் சுஷ்மா சுவராஜ் கொழும்பிலும் பின்னர் புதுடில்லயிலும் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், அப்படியான எந்த வாக்குறுதியும் சுஷ்மா சுவராஜுக்கு ஜனாதிபதி மஹிந்த வழங்கவில்லை என்று இலங்கை அரச வட்டாரங்கள் கூறியிருந்தன. இது இந்திய நாடாளுமன்றக் குழுவுக்கு பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசின் இந்த நிலைப்பாடு குறித்துக் கண்டனம் வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர மறுக்கின்ற ஜனாதிபதி மஹிந்தவின் இந்தக் கருத்து தமக்கு அதிர்ச்சி அளிப்பதாக சுஸ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த தனக்கு இவ்வாறு உறுதி அளித்துவிட்டு இப்போது அதை நிராகரிக்கின்றமை ஆச்சரியமளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

## தமிழீழக் கனவை நனவாக்க வாழ்வை அர்ப்பணியுங்கள்



01↘ ளுக்கு அவர் எழுதிய கடிதத்திலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் இனத்தை வீழ்த்துவதற்காக இலங்கை அரசு தமிழ்க் குழுக்களுக்கு இடையே பிரிவுகளையும் பிரிவினையையும் ஏற்படுத்தி வெற்றி பெற்றுள்ளது. இதுவரை நடந்தவைகள் எல்லாம் தற்காலிகமானவை. அவை எவையும் நிரந்தரமானவை அல்ல. எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் கைவிடலாகாது. தமிழினத்தின் மீள் எழுச்சிக்காக எமது வாழ்க்கையை நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

காந்தி, அண்ணாத்துரை, நேரு, தந்தை செல்வா ஆகியோர் வழியில் தமிழீழக் கனவை நனவாக்க நாம் பாடுபட வேண்டும் என்றும் கருணாநிதி அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இறுதிப் போர் நடந்த காலத்தில் மத்திய அரசுடன் தான் நடத்திய தொடர்பாடல்களின் விவரங்களையும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின்போது தனக்கிருந்த பங்கையும் அந்தக் கடிதத்தில் கருணாநிதி கட்சித் தொண்டர்களுக்கு விளக்கியுள்ளார். (உ-10)

## பல்கலைக்கழக மாணவருக்கு கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகத் தெரிவு சம்பந்தமான கலந்துரையாடல் நாளை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்துப் பல்கலைக் கழககங்களிலும் கல்வி பயிலும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களையும், புதுமுக மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10)

## பரிந்துரைகளின் செயற்றிட்டம் குறித்து ஹிலாரிக்கு அறிக்கை

01↘ வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தத் திட் டத்தை அமெரிக்க வெளி யுறவுச் செயலர் ஹிலாரி கிளின்ரனிடம் சமர்ப்பிக்க வுள்ளார்.

செயற்திட்டத்தைத் தயா ரிக்கும் நோக்கில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சி களி டம் அரசு கருத்துக் கோரி யுள்ளது. ஆணைக் குழு வின் பரிந்துரைகள் தொடர் பில் கட்சிகளின் நிலைப் பாட்டைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆணைக் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் எவ் வித எதிர்ப்பும் கிடையாது என கம்யூனிஸ்ட் கட்சி யின் தலைவரும் அமைச் சருமான டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இடதுசாரி கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன.ஆணைக்குழு பரிந்துரைகள் பற்றிய தமது நிலைப்பாடு அடுத்த வாரத்தில் முன்வைக்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.(த)

## எதிர்க்கட்சிகளின் மே தினம் குருநகரில்

01↘ தார். அவர் மேலும் கூறுகையில்: எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து எமது கட்சியின் தலைமையில் மேதின நிகழ்வை நடத்தவுள்ளன. நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் இருந்து பிற்பகல் ஒரு மணிக்கு மேதினப் பேரணி ஆரம்பமாகும். அங்கிருந்து பேரணி நல்லூர் ஆலய பின் வீதி ஊடாக கருநகர் சென். றோக்ஸ் மைதானத்தைச் சென்றடையும். அங்கு மேதினக் கூட்டம் இடம்பெறும். இதில் 6 கட்சிகளினதும் தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் - என்றார். (த-5)

## போர் வீரர் மாதம் பிரகடனம்

01↘ கொண்டு வரப்பட்டதைக் கொண்டாடும் வகையில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த மாத காலத்தில் பல்வேறு பகுதிகளிலும் வெற்றிக் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், காலிமுகத் திடலில் மே 18 ஆம் திகதி மிகப்பெரும் இராணுவ அணிவகுப்பை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

போர்வீரர்கள் மாதத்தை ஒட்டி அதற்கான கொடிகள் வழங்கப்படும் எனவும் இதன் முதலாவது கொடியை நாளை மறுதினம் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொள்வாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மே 19 ஆம் திகதி போரில் உயிர் நீத்த படையினருக்கு அஞ்சலி செலுத்துவதற்காகக் கோட்டையில் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது. (உ-10)

## முல்லைத்தீவு சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டே அரங்கேற்றுகிறது அரசு

01↘ என்றும் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை இடாவிட்டால் தமிழ் மக்கள் இன்னுமொரு முள்ளிவாய்க்கால் அவலத்தைச் சந்திக்க நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் இலங்கை அரசு வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பூமியில் மிகவும் சூட்சுமமாகத் திட்டமிட்ட அடிப்படையில் சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அவ்வாறு குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கு இராணுவம் முழுமையாக ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது என்றும், அந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் இதனைத் தட்டிக்கேட்டால் படையினர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர் என்றும் தமிழ் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வடபகுதியில் படையினர் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அதனால் அங்கிருந்து அவர்களை வாபஸ்பெற முடியாது என அரசு திட்டவட்டமாகக் கூறினாலும் படையினர் அங்கு புத்தர் சிலைகளையும், சிங்களக் குடியேற்றங்களையும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றனர். இதுவா மனிதாபிமானம் எனத் தமிழ் மக்கள் குமுறுகின்றனர்.

அதேவேளை, யாழ்ப்பாணத்திற்கு வியாபார நோக்கில் செல்லும் சிங்களவர்கள் அங்குள்ள நிலங்களை ஆக்கிரமித்துக்கொள்கின்றனர். அத்துடன், முல்லைப் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லும் தென்பகுதி மீனவர்கள் அங்கேயே கூடாரங்களை அமைத்துக் குடியேறுகின்றனர் எனவும் குற்றம்சாட்டினார் அவர். (சி)

# கொலை, ஆள்கடத்தலில் ஈ.பி.டி.பி. ஈடுபட்டது: செய்திக்காக ரூ.1,000 கோடி கேட்கிறார் டக்ளஸ்

01↘ யிட்டுள்ளது.

உதயன் வெளியிட்ட செய்தியால் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ''மனச்சஞ்சலமும் அவமானமும்'' ஏற்பட்டுள்ளதாம். அதனால் 1,000 கோடி ரூபா நட்ட ஈடு கேட்டு அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் அமைச்சர் டக்ளஸைப் பற்றி உதயன் பத்திரிகை அவதூறாக எழுதியவை என்று குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் ஆள் கடத்தல்கள் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், கப்பம் பெறுதல் என்பவற்றில் ஈ.பி.டி.பியினரும் கருணா குழுவினரும் ஈடுபட்டிருந்தனர் என்று அமெரிக்கத் தூதுவராக இருந்த ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

துணைப்படைகளான கருணா குழுவும் ஈ.பி.டி.பியும் ஆள்களைக் கடத்திக் கப்பம் பெறுவதற்குப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் அனுமதி அளித்திருந்தார் என்று அமெரிக்கத் தூதருக்கு நம்பிக்கையான ஒருவர் தெரிவித்திருந்தார் என்று அந்த ஆவணம் கூறுகிறது.

விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து இயங்குபவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களை கடத்துவதற்கும் விடுதலைப் புலிகளுடன் சண்டையிடுவதற்கும் கருணா குழுவினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எனப்படும் ஈ.பி.டி.பியினரும் இலங்கை அரசுக்கு உதவிகளை வழங்கி வந்தனர்.

நிதி வளங்கள் இல்லாததால் துணைப் படையினருக்கான நேரடியான கொடுப்பனவுகளை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான இலங்கை அரசு நிறுத்தி விட்டது. பதிலாகக் கருணா மற்றும் ஈ.பி.டி.பியினர் பணத்துக்காக ஆள்களைக் கடத்தியதை அது கண்டும் காணாது இருந்தது.

இப்போதைய அரசு நிதி நெருக்கடியில் இருப்பதால் துணைப் படைகளுடன் உடன்படிக்கை ஒன்றுக்கு வந்தது. அதனடிப்படையில் ஈ.பி.டி.பி. மற்றும் கருணா குழுவினர் தமிழ் வர்த்தகர்களிடம் இருந்து கப்பம் பெறுவதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அனுமதி அளித்தார் என்று அந்த நபர் குறிப்பிட்டார்.

ஈ.பி.டி.பியும் கருணாவும் தமிழ் இனக் குழுமத்தின் மத்தியிலிருந்தே வந்தவர்களாக இருந்தபோதும் ஏனைய தமிழர்களுக்கு எதிராகவே அவர்களால் அனைத்துக் குற்றங்களும் அனைத்துச் சமயங்களிலும் நிகழ்த்தப்பட்டன.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் துணையுடன் கருணாவால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்மஸ் தினத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தாம் நம்புகிறார் என ......... என்பவர் தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) விடுதலைப் புலிகளுக்கு எதிராக இயங்க ஆரம்பித்தது. அதிலிருந்து பிரிந்த ஒரு பகுதியினர், டக்ளஸ் தேவானந்தா 1994இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதைத் தொடர்ந்து அவரது தலைமையில் ஈ.பி.டி.பியாக இயங்க ஆரம்பித்தனர். அவர்கள் அரசுடன் இணைந்திருந்தனர். ஓர் அரசியல் கட்சியாக ஈ.பி.டி.பி. பதிவு செய்யப்பட்டிருந்தபோதும் இராணுவத்தின் அனுமதியுடன் ஈ.பி.டி.பி. இன்னமும் அச்சமூட்டும் ஒரு துணைப் படையாகவே உள்ளது. அதிகாரபூர்வமற்ற வகையில் யாழ். குடாநாட்டின் ஆதிக்கங்களைக் குறிப்பாக தீவுப் பகுதிகளின் அதிகாரங்களை அது தன்னகத்தே வைத்துள்ளது.

பல்வேறு தரப்புகளின் கருத்துப்படி, இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்குவதன் காரணத்தினால் கடத்தல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், கப்பம் அறவிடுதல் போன்றவற்றில் தண்டிக்கப்படுவோம் என்கிற எந்தவிதப் பயமும் இன்றி ஈ.பி.டி.பியினால் ஈடுபட முடிகிறது. யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பியினர் நடத்திய சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் குறித்து ..... என்பவர் எம்மிடம் விவரித்தார்.

ஒருவரைக் கொலை செய்வதற்கு ஈ.பி.டி.பியினர் தீர்மானித்துவிட்டால் அது பற்றி முதலில் இராணுவத்தினருக்குத்தான் தகவல் தெரிவிக்கப்படும் என்று ..... தெரிவித்தார். பொதுவாகச் சொன்னால் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு சந்தியிலும் படையின்ரின் நிலைகள் இருக்கின்றன. அனுமதிக்கப்பட்ட ஒரு நேரத்தில் எல்லாப் படையினரும் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொள்வது வழமை. அந்தச் சமயத்தில் மோட்டார் சைக்கிளில் வரும் முகமூடி அணிந்த நபர்கள் தாம் நினைத்த நபர்களைக் கொன்றுவிட்டுத் திரும்பிவிடுவார்கள்.

இவ்வாறு உதயனில் எழுத்தப்பட்டிருந்ததாலேயே தனக்கு அவதூறு ஏற்பட்டுள்ளதாக டக்ளஸ், நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செய்தியில் உண்மை இல்லை என்றும் உண்மையான காரணங்களைக் கண்டறியாத வகையிலும் உறுதிப்படுத்தாத வகையிலும் தீய நோக்கத்துடன் உதயன் தனக்கு எதிராகச் செயற்பட்டுள்ளதாகவும், இதனை விக்கி லீக்ஸ் என்ற இணையத் தளத்தில் வெளியிடப்பட்டதாகத் தெரிவித்து டக்ளஸை அவதூறுக்கு உள்ளாக்கி உள்ளார்கள் என்றும் மனு குறிப்பிடுகிறது.

இதற்காக 1,000 கோடி ரூபா நட்டஈடு மற்றும் வழக்குத் தொடுக்கப்பட்ட தினத்திலிருந்து தீர்ப்பு வழங்கப்படும் தினம் வரையில் அதற்கான வட்டி, வழக்குச் செலவு ஆகியன தனக்குத் தரப்பட வேண்டும் என்றும் டக்ளஸ் தனது மனுவில் கோரி இருக்கிறார். (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை துரைராசன்

(இளைப்பாறிய இலங்கை மின்சாரசபை ஊழியர்)

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், சங்கம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை துரைராசன் நேற்று (27.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பிறிமிலா (பிரான்ஸ்), சங்கீதா (லண்டன்), சீமா (நோர்வே), சோபா, ஆர்த்தி (1st in Commerce, Jaffna College), சிந்து (3ஆம் வருடம், நுன்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சசிக்குமார் (லண்டன்) மற்றும் மணிவண்ணன் (நோர்வே) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன், லீலாவதி, மனோகரன் (கொடிகாமம், திருநாவுக்கரசு ம.வி.), சரஸ்வதி (தேர்தல் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, சிதம்பரநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடராசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), குலசேகரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சரஸ்வதி, சிதம்பரநாதன் (மாவட்ட நிதிமன்றம், சாவகச் சேரி), வைத்திலிங்கம், காலஞ்சென்றவர்களான சடாச்சரம் (Army), கிருஷ்ண பிள்ளை (கோமாளி) ஆகியோரின் மைத்துனரும் யோகேந்திரா - லோகமதி (பிரான்ஸ்), கெங்காதரன் - தீபா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தந்தையும் அச்சுதன், பிரவீன், தஜித்தா, சௌமிகா, சாருகா, சஸ்மிகா, சஞ்சய்ராஜ், மதுமிகா, அச்சுனன் (4ஆம் வருடம் முகாமைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*சங்கத்தானை, சாவகச்சேரி.* அச்சுனன் (பேரன்)

## கஞ்சா வைத்திருந்த குருநகர்வாசிக்கு ரூ. 6,000 அபராதம்

2.5 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றவாளிக்கு யாழ். நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நேற்று.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குருநகரில் 2 மாதங்களுக்கு முன்னர் கஞ்சாவுடன் சந்தேக நபரை யாழ். பொலிஸார் கைது செய்து மன்றில் முற்படுத்தியபோது இரண்டு வாரங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

பூநகரி, பள்ளிக்குடாவைச் சேர்ந்த சந்தேகநபரான பிரான்சிஸ் றேசியாஸ் என்பவரே கைது செய்யப்பட்டிருந்தார். நேற்றைய விசாரணையில் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்றம். (ஒ-4)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25 ★ 09 ★ 1946

இறப்பு
01 ★ 05 ★ 2009

அமரர்

## ரூபி வேலாயுதபிள்ளை

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
புன்னகை சிந்தும் உன் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
- கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Dr.வேலாயுதபிள்ளை,
வேல் வைத்தியசாலை,
நீர்வேலி.

(17027) (2-6-9)

### விற்பனைக்கு

யாழ். நகர், மத்தி, ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6½ பரப்பு (44 பேர்ஸ்) காணி விற்பனைக் குண்டு. Hospital க்கோ or Hotel க்கோ உகந்த இடம்.


தொடர்பு:- 0778730129
suntahraraama@gmail.com

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச, தனியார், நிறுவனங்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு - 0726477937, 0779037237

# மரண அறிவித்தல்



## திருமதி மாணிக்கம் கந்தப்பு

பருத்தித்துறை தம்பசிட்டி சாளம்பையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தப்பு மாணிக்கம் நேற்று (27.04.2012) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தப்புவின் அன்பு மனைவியும், கமலாம்பிகை, பருத்தித்துறை ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் பங்காளர்களான சபாபதிப்பிள்ளை, வேலாயுதம், தங்கராசா, பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற தருமகுலசிங்கம் மற்றும் கதிர்காமநாதன், இராமச்சந்திரன் ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற வே. பரஞ்சோதி மற்றும் சத்தியவதி, திலகவதி, மகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, கமலாம்பிகை, சுகிர்தராணி ஆகியோரின் மாமியும், கமலசோதி (கனடா), மோதிலால் நேரு (படப்பிடிப்பாளர்), ராஜநேரு (கனடா), ரவிநேரு (லண்டன்), காலஞ்சென்ற அரவிந்தநேரு மற்றும் ஜெகன் (கனடா), டாக்டர். சிவகாந்தன், பிரியகாந்தினி (மக்கள் வங்கி, சுன்னாகம்), திருமகள், திருச்செல்வி, சுமித்திரா (பிரான்ஸ்), கார்த்தீபன் (மாணிக்கப் பிள்ளையார் ரேடர்ஸ், பருத்தித்துறை), அனுராதா (ஆஸ்திரேலியா), தேனுகா (ஆஸ்திரேலியா), இராஜகுலேந்திரன் (மாணிக்கப் பிள்ளையார் ரேடர்ஸ்), கஜேந்திரன் (படப்பிடிப்பாளர்), வைதேகி, நீலாம்பரி (லண்டன்), காயத்திரி, கஸ்தூரி, ஜெயகீர்த்தனன், ஹம்சவதனி, சாயிசந்தோஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மற்றும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. தங்கராசா (மகன்),
ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை.

*சாளம்பை, புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது உயிர்த்தோழியான
துரைராசன் சிந்துஜாவின்
தந்தை

## வேலுப்பிள்ளை துரைராசன்

அவர்கள் மரணமடைந்த செய்தி கேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பிகள்
சி. யாழினி, த.தேவகி

# கார் விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள JAPAN TOYATA VIOS 2003 Model இலக்கம் WP KC சில்வர் நிறமுடைய கார் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0750686801

# காணி விற்பனைக்கு

வவுனியா மதவு வைத்த குளத்தில் தண்ணீர் வசதியுடைய வீட்டுடன் கூடிய 2 பரப்புக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0774107900, 0750401024

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சந்திரகலா
சில்வெஸ்ரர் அவர்களது
அன்புத் தாய்

## திருமதி சரஸ்வதிப்பிள்ளை சுப்பிரமணியம்

25.04.2012 அன்று இறைபதம் அடைந்துள்ள நிலையில் துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்

## முருகேசு கந்தப்பு



ஏழாலையைப்பிறப்பிடமாகவும் தற்பொழுது மானிப்பாயை வதிவிடமா கவும் கொண்ட முருகேசு கந்தப்பு நேற்று (27.04.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பதியரின் அன்பு மகனும் ஆறுமுகம்-மாதாத்தை தம்பதியரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் அன்புக்கணவரும் சிறிஸ்கந்தராசா, கலாவதி, லோகநாதன், சத்தியானந்தன், சாந்தகுமார், சறோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவராணி, தயாளராணி, சிறிதரன், அமிர்தாம்பிகை, மங்கையற்கரசி, ரவிக்குமார், ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

# வெளிக்கள உத்தியோகத்தர் தேவை

ABANS காட்சியறைக்கு உத்தியோகத்தர்கள் தேவை. O/L, A/L படித்தவர்கள் Bio data உடன் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:-

**ABANS "A"**
182, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

# விற்பனைக்கு

1 வயது நிரப்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும் காலிக்குயின் பெண்நாயும், பொக்சர் பெண்நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன், அல்சேசன் ஆண்,பெண் குட்டியும் நல்ல இன 1 வருட JC இன பசுக்கன்றும் மணிதாரா, வான்கோழி, இறைச்சிக்கோழி விற்பனைக்கு

தொடர்பு : வி. மயூரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவைபிள்ளையார் கோயில் முன்பாக, பூதராயர் கோவிலடி, டயலொக் ரவர் அருகில்

# ஓரேவாரத்தில் அழகிய நிறம்

ஓரே வாரத்திலே நீங்களா! என அதிசயிக்கும் மாற்றம்!!
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள், மாசு,மரு அற்ற சிவப்பழகு.!!! மற்றும் அனைத்து தோல் வியாதிகளுக்கும் (தேமல்,கரும்புள்ளி,கழுத்துக்கருமை,கருவளையம்,தழும்பு) போன்றனவுக்கு நிரந்தர தீர்வு

அழையுங்கள்:-0777351954
சானியா கேபல் கெயர்
இல:262 நாயன்மார்கட்டு ஆயுர்வேத, வைத்தியசாலை,
நல்லூர் யாழ்ப்பாணம்.

10 நாட்களுக்குள்

இலவச பேசியலுடனான தீர்வு

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11 ★ 02 ★ 1941



மறைவு
10 ★ 05 ★ 2011

## அமரர் பொன்னையா அருளானந்தம்

திதி: சப்தமி - 28.04.2012

ஆண்டொன்று போனாலும் ஆறுமோ நம்மிதயம்
மீண்டிங்கு வந்தெமக்கு ஆறுதலைத் தாரீரோ
நீர் சாய்ந்த தூணோ இடம்பெயர்ந்து போனதையா
வேர் சாய்ந்த நின்னுடலோ நீறாகிப் போனதையா
கற்றவர்கள் மத்தியிலே கலங்காது நின்றவரே
உற்றவர்கள் விம்மியழ ஓடியேன் மறைந்தீரே
ஈரவிழி காயவில்லை நின்முகமோ காணவில்லை
தூரவழி சென்றீரே மீளும்வகை அறியீரோ

அருளண்ணை என்றகுரல் எதிரொலியாய்க் கேட்குதையா
இருளெம்மைச் சூழ்ந்தாலும் ஒளிவிளக்காய் வாரீரோ
நெஞ்சங் கலங்குதையா நிம்மதியோ போனதையா
வஞ்சமிலா உன்பேச்சுப் பாழாகிப் போனதையா
நின்னான்மா சாந்திபெற நிமலனடி சார்ந்தவரே
எந்நாளும் அருளோடு ஆனந்தமே காண்பீரே

110/2, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

(17047) (45.)

# மரண அறிவித்தல்

## அப்பையா சிவலிங்கம்

### (சந்திரன்)

[உரிமையாளர் அ.சிவலிங்கம் பல்பொருள் வாணிபம், சந்திரச்சந்தி]



திருநெல்வேலி பழம் சந்தியைப் பிறப்பிடமாகவும் 93/9, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்பாணத்தை வசிப்பிடமாக வும் கொண்ட அப்பையா சிவலிங்கம் (சந்திரன்) நேற்று முன்தினம் (26.04.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

93/9, இராசாவின் தோட்டம்
வீதி, யாழ்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகின்றோம் அழையுங்கள் 077 908 6737 அழகழகான கணினி மோசைகளும் விற்பனைக்கு உள்ளன.

GUNAA BEST PC

# துவிச்சக்கரவண்டி கைமாறியுள்ளது

கடந்த வியாழன் அன்று தந்தை செல்வா நினைவுதின நிகழ்வின் போது யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு தூபிக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான லுமாலா துவிச்சக்கர வண்டி ஒன்று கைமாறியுள்ளது. உரியவர் கள் தொடர்பு கொள்ளவும்.

T.P: 021 4910716, 077 5532867

# சைவ வித்தகர் பட்டப்படிப்பு நெறி

அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் இக்கற்கை நெறி நடைபெறுகின்றது. இந்நாட்டில் சைவ சமயப் பிரசாரங்களையும் சமயத் தலைவர்களையும் உருவாக்குவதற்கு இவ் விசேட பயிற்சி கற்கை நெறி முழுநேரப் படிப்பாக இடம்பெறுகின்றது.

இது:

- ஒரு வருட காலப்பயிற்சி நெறியாகும்.
- தங்குமிட வசதி உணவுடன் இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சிகாலத்தில் மாதாந்தம் ஊக்குவிப்பு நன்கொடை வழங்கப்படும்.
- சமய நெறியூடாக சமூக சேவை மற்றும் ஆளுமை பற்றிய பயிற்சியும் வழங்கப்படும்.
- அறிவும் அனுபவமும் ஆற்றலுமிக்க பல்துறைசார் அறிஞர்களால் பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் விசேட பரீட்சை நடைபெற்று இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சி பெற்றவர்களுக்கு அரச, சமய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்த சந்தர்ப்பம் உண்டு.
- இதற்கான புதிய மாணவர்களைச் சேர்க்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- க.பொ.தா சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்திய ஆண் மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

- சரஸ்வதி மண்டபம் 75, லோரன்ஸ் வீதி, கொழும்பு – 04
- அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ். பணிமனை 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
- மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் 82, அரசவிடுதி வீதி, கல்லடி, மட்டக்களப்பு
- ஆலையடிவேம்பு இந்து மாமன்றம் நெசவு நிலைய வீதி, அக்கரைப்பற்று 07
- ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய நிர்வாக சபை வெளிச்சுற்று வீதி, வவுனியா
- மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் பெரியகடை, மன்னார்

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட முகவரிகளில் ஒன்றுக்கு அனுப்பிவையுங்கள்.

முடிவு திகதி 15.08.2012

அகில இலங்கை இந்து மாமன்றம் (5ம் மாடி)
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02
தொலைபேசி 2434990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அடுத்தது எண்ணெய் விலை உயர்வு தானே?

உணவுப் பொருள்கள் உட்பட மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், அடிக்கடி உயர்கின்றன; அரசினால் உயர்த்தப்படுகின்றன. ஆகப் பிந்தி கோதுமை மாவின் விலை, எட்டு ரூபா ஐம்பது சதத்தால், நேற்று முன்தினம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பாணின் விலையிலும் இப்போதைய விலையை விடக் கணிசமான அதிகரிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

இத்தனைக்கும் கடந்த ஜனவரி மாதத்திலேயே கோதுமை மாவின் விலை உயர்த்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாணின் விலையும் ஐம்பத்தைந்து ரூபாவாக உயர்ந்தது.

பாணின், கோதுமை மாவின் விலை உயர்வுகள் அடிமட்ட வருமானம் உள்ள மக்களையே அதிக அளவில் பாதிக்கின்றன. ஆனால், அதற்குப் பதிலான மாற்று ஏற்பாடுகளைச் செய்யாது, மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்களிலேயே கை வைப்பதை இப்போதைய அரசு வழக்கமாக்கிக் கொண்டுள்ளது. அதன் பின்னர் அதற்கான காரணங்களைக் கற்பித்து தவிர்க்க முடியாத நிலையிலேயே விலையேற்றத்தைக் கொண்டு வந்ததாகக் கற்பிதம் செய்யும்.

நிதி வளம் நிறைந்த உயர் வர்க்கத்தினரிடம் பலவகைப்பட்ட வரிகளை அறவிடுவது போன்று, அரசு அடிமட்ட மக்களிடம் அத்தியாவசியப் (உணவு வகைகள் உட்பட) பொருள்களின் விலைகளை அடிக்கடி உயர்த்தித் தனக்குத் தேவையான பணத்தை மறைமுகமாகச் சுருட்டிக் கொள்கிறது.

ஆனால் பொதுத்தேர்தல் காலம் நெருங்கும் போது, தாம் மீண்டும் பதவிக்கு வந்தால் உணவுப் பொருள்கள் உட்பட்ட அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலைகளில் கைவைக்கப் போவதில்லை என்றவாறு தலையில் அடித்துச் சத்தியம் செய்யும் பாணியில் வாக்குறுதி வழங்குவதிலும் ஆட்சியாளர்கள் பின்னிற்பதில்லை.

உலகப் பொருளாதார மாற்றங்களால், ஏற்ற இறக்கங்களால், விலை உயர்வுகள் தவிர்க்க முடியாதவை என்று காரணம் கற்பிக்கும் அரச சார்புப் 'பொருளாதார நிபுணர்'களுக்கும் இன்று குறைவில்லை. இந்த வகையறாக்கள், அரசு நடத்தும் ஒவ்வாத தேவைகளுக்கான செலவினங்களை வெளிப்படுத்துவதில்லை. அவற்றுக்கு, சாயம் அடித்து, வெள்ளை பூசி அபிவிருத்தித் திட்டங்களுக்கு உரியனவாகத் தம்பட்டமடிக்கும் நிலையும் இப்போது விரவி வருகிறது.

அனைத்துலக வட்டகையில், இன்றைய பொருளியல் வளர்ச்சியில், மேம்பாட்டில் பெற்றோலிய- எண்ணெய்ப்- பாவனை தவிர்க்க முடியாத, இன்றியமையாத ஒன்றாகி விட்டது. அதன் விலை உயர்ந்தால் சகல துறைசார் செலவினங்களும் அதிகரிக்கும் என்பது மாற்றப்பட முடியாத தேற்றம் ஆகிவிட்டது.

இன்னும் சில நாள்களில் இலங்கையின் எல்லாத் துறைகளிலும் வட்டகைகளிலும் எண்ணெய்ப் பற்றாக்குறையும் அதனுடான விலை உயர்வும் பெரும் தாக்கங்களை, பாதிப்புகளை உண்டாக்கும் என்பது நிச்சயமாகி வருகிறது.

ஏற்கனவே, கடந்த பெப்ரவரி மாதம் பதினோராம் திகதி பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் விலைகள் முறையே லீற்றர் 12 ரூபாவினாலும் 31 ரூபாவினாலும் 35 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டன.

உலகச் சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை, எதிர்பாராத விதமாக அதிகரித்தமையே, அந்த விலை உயர்வுகளுக்கு காரணம் என்று அரசு அவ்வேளையில் தெரிவித்திருந்தது.

அதேபோன்று, இப்போதைய விலை உயர்வுகளுக்கும் அரசாங்கம் இரண்டொரு நாள்களில் காரணத்தை அறிவிக்கும். அது நிச்சயம்!

இலங்கை அரசு தனது பெற்றோலிய எண்ணெய்த் தேவையில் 93 சத வீதத்தை, மசகு எண்ணெய்யாக ஈரானிடமிருந்தே நீண்ட காலமாகக் கொள்வனவு செய்து வருகிறது. ஆனால் அந்த நாட்டுடன் செய்துகொண்ட எண்ணெய்க் கொள்வனவு ஒப்பந்தத்தை, அமெரிக்காவின் அழுத்தத்தினால் நிறுத்திக் கொள்ள- அதிக அளவில் குறைத்துக் கொள்ள- நேர்ந்துள்ளது.

அது மட்டுமன்றி, சப்புஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை விஸ்தரிக்கும் திட்டமும் மிகப் பெரிய அளவில் பாதிப்புற உள்ளது. அதன் விளைவாக, அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உயர்வுகள் மட்டுமன்றிப், போக்குவரத்து முதற் கொண்டு, சகல துறைசார் பிரிவுகளிலும், அன்றாடத் தேவைகளுக்கான செலவினங்களும் ஊதிப்பெருக்கப் போகின்றன. எந்தப்பிரிவும், தளமும் தப்பிக் கொள்ளமுடியாதவாறு, பாம்பு சுற்றி வளைத்துப் பிடிப்பது போன்று, பெரும் பொருளாதார நெருக்கடி, அரசையும் மக்களையும் கழுத்தில் கௌவிக் கொள்ளப் போகிறது.

ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதனை நிறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் நிபந்தனைக்குத் தான் மசியப் போவதில்லை என்று பறைசாற்றிய இலங்கை அரசு, அது இயலாத காரியம் என்று உணர்ந்திருக்க வேண்டும். அதனாலேயே, ஈரானுடன் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறாக அங்கிருந்து மூன்று கப்பல் எண்ணெய்க் கொள்வனவை நிறுத்தியுள்ளது.

அதன் நேரடி மற்றும் பக்க விளைவுகளை, அரசாங்கம் மட்டுமன்றி இந்நாட்டு மக்களும் அனுபவிக்கப் போகிறார்கள். அதன் முதலாவது அலகே, இவ்வாரத்திய கோதுமை மா விலையுயர்வு. அதனை அடுத்து, இன்னும் பலவும் மக்கள் மீது வந்தேறுவதற்குக் காத்திருக்கின்றன.

# தொழிலாளர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத நிலை

### தொழில் நீதிமன்றம் இயங்காமையே காரணம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

வட பகுதியில் தொழில் நீதிமன்றம் இயங்காத காரணத்தால் தொழில் ரீதியாக வரும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாதுள்ளதாகத் தொழிலாளர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வட பகுதியிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் இதுவரை தொழில் நீதிமன்றம் இயங்க ஆரம்பிக்கவில்லை. சாவகச்சேரியில் இயங்கி வந்த தொழில் நீதிமன்றம் ஒன்று போர்காலத்தைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டில் மூடப்பட்டது. அன்றிலிருந்து இதுவரை தொழில் நீதி மன்றம் எதுவும் வடபகுதியில் இயங்கவில்லை.

இதன் காரணமாக வடக்கு மாகாணத்திலுள்ள தொழிலாளர்கள் தொழில் ரீதியாகச் சந்திக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அனுராதபுரம், கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலுள்ள தொழில் நீதி மன்றங்களை நாடிச் சென்றே வடபகுதித் தொழிலாளர்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயன்று வருகின்றனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் இந்த வருடம் வரை நான்கு வழக்குகள் வடபகுதித் தொழிலாளர்களால் பிற மாகாணங்களிலுள்ள தொழில் நீதி மன்றங்களில் தொடரப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

இந்த எண்ணிக்கையை விட அதிகமான வழக்குகள் ஏனைய மாவட்டங்களிலுள்ள தொழில் நீதிமன்றங்களில் தொடரப்பட்டிருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

தொழில் தருநர்களால் மேற்கொள்ளப்படும் திடீர் வேலை நிறுத்தம் மற்றும் பணிக்கொடை வழங்கல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தொழில் நீதிமன்றம் ஊடாகவே தீர்வுகாண முடியும். தொழில் திணைக்களங்களுக்கு உள்ள வரையறை காரணமாக இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாத நிலை உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வட மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரனிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:-

மாவட்ட தொழில் திணைக்களங்களுக்கு உள்ள வரையறை காரணமாக தொழில் ரீதியான பிணக்குகளுக்குத் தொழில் நீதிமன்றம் ஊடாகவே தீர்வு காண முடியும். வட பகுதியில் அவ்வாறான தொழில் நீதிமன்றம் இயங்குவது அவசியமானதாகும். தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மாவட்டத் தொழில் திணைக்களம் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்படும். தொழில் நீதிமன்றம் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (த-3)

# மாநகர முதல்வரின் அடாவடி; ஆணையாளருக்கு முறையீடு

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாநகர சபைக் கூட்டங்களை ஒழுங்கு முறையில் நடத்துவதற்கு இடையூறாக யாழ்.மாநகர சபை முதல்வர் எதேச்சதிகாரப் போக்கில் நடந்து கொள்கிறார் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி முறையிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சபையின் 3 ஆவது , 4 ஆவது கூட்டங்களைச் சபை முதல்வர் காரணம் கூறாமல் காலவரையறையின்றி ஒத்திவைத்துவிட்டு வெளியேறிவிட்டார்.

உறுப்பினர்களின் சம்மதமின்றிக் கூட்டத்தை ஒத்திவைக்க முடியாது. இதற்கான சட்ட அதிகாரம் அவருக்கு இல்லை. சட்டத்துக்கும் மரபுக்கும் மாறாகக் கூட்டத்தை ஒத்திவைப்பது பலமுறை இடம்பெற்றுள்ளது.

சபையின் மராமத்துக்குழுத் தலைவர், சுகாதாரக் குழு உறுப்பினர் தெரிவு இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. இவர்களுக்குரிய கடமையை முதல்வரே தன்னிச்சையாக மேற்கொண்டு வருகிறார். நிலையியற் குழுக்கள் இயங்குவதற்கும் தடைகளை ஏற்படுத்தி வருகிறார் முதல்வர்.

சபையின் சட்ட விதிகளுக்கு தவறான வியாக்கியானம் கொடுத்து ஒவ்வொரு மாதமும் ஒழுங்காகக் கூட்டப்படவேண்டிய மாதாந்தக் கூட்டங்களை அவர் தவிர்த்து வருகிறார். எனவே தயவு செய்து தாங்கள் இந்த விடயத்தில் தலையிட்டு சபை நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெற உதவவேண்டும் என்றுள்ளது.

இதன் பிரதிகள் உள்ளூராட்சி அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-03)

# 704 மில்லியன் ரூபா செலவில் 682 பாடசாலைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

வடமாகாணத்தில் போர் முடிவடைந்ததன் பின்னர் 682 பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைப்பதற்கு 704.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மூடப்பட்டிருந்த 158 பாடசாலைகளும் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன என்று வடமாகாண சபை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2010 ஆம் ஆண்டளவில் வடமாகாணத்தில்752 பாடசாலைகள் இயங்கு நிலையில் இருந்ததுடன் 259 பாடசாலைகள் மூடப்பட்டு இருந்தன. தற்போது 937 பாடசாலைகள் இயங்குவதுடன் 101 பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

மேலும்704.25மில்லியன் ரூபா செலவில் 682 பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. 80 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 3ஆயிரத்து 800 சைக்கிள்கள் மற்றும் 18 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.100 மில்லியன் ரூபா பெறுமதியான புத்தகங்கள், 20 மில்லியன் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், 8 செற் சங்கீத உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

86ஆயிரத்து 202 பாடசாலை மாணவர்களுக்குரிய தளபாடங்களும், 2 ஆயிரத்து 200 ஆசிரியர்களுக்குரிய தளபாடங்களும்,206 இரும்பு பெட்டகங்களும்12ஆய்வு கூடங்களுக்கான உபகரணங்களும், 362 கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (த-5)

# நாகர்கோவிலில் 40 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

வடமராட்சி,ஏப்.28

கடந்த காலப் போர் நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து பருத்தித்துறை வடமராட்சி பிரதேச செயலர் பிரிவில் வசித்து வந்த 35 தொடக்கம் 40 வரையான குடும்பங்கள் சொந்தக் கிராமமான நாகர்கோவிலில் மீளக்குடியமர்ந்துள்ளன.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் மீள்குடியமர்வு ஆரம்பமானதைத் தொடர்ந்து இவர்கள் குடியமர்ந்துள்ளனர் என்று பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

இன்னமும் இடம்பெயர்ந்த நிலையில் ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)

# 'வசூல்ராஜா'வுக்கு உடனடி இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாவட்ட செயலக கணக்காளர் பிரிவில் கடமையாற்றும் சிற்றூழியர் ஒருவர், பொதுமக்களிடமிருந்து லஞ்சம் பெறுகிறார் என்று மக்கள் குற்றம் சாட்டியதை அடுத்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரச அதிபரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக கணக்காளர் பிரிவில் கடமையாற்றும் சிற்றூழியர், மாவட்ட செயலகத்துக்கு வரும் பொதுமக்களிடம், மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மாவட்ட செயலக வேலைகளை உடனடியாக செய்து தருவதாகத் தெரிவித்து பெருமளவில் பணத்தைப் பெற்று வந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் விசாரணைகளை நடத்தியுள்ளார். பின்னரும், தொடர்ச்சியாக பொதுமக்களிடம் இருந்து பணத்தைப் பெற்று வந்தார் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சிற்றூழியர் பணத்தைப் பெற்று வரும் விடயம் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் கவனத்துக்கு பொதுமக்களால் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து குறித்த சிற்றூழியரை உடனடியாக 24 மணிநேரத்துக்குள் இடமாற்றம் செய்யுமாறு அரச அதிபர் பணித்தார்.

காணித் திணைக்களத்திலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிற்றூழியர் ஒருவரும் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பிரதேச சபையால் பல்வேறு வேலைத் திட்டங்கள்

வவுனியா, ஏப்.28

வவுனியா பிரதேச சபையால் கடந்த வருடம் பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பல்வேறு நிறுவனங்களின் நிதியுதவியுடனேயே இந்த வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

யு.என்.டி.பி.யினால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் கணேசபுரம் வீதி, பர்நாட்டங்கண்டல் வீதி, குஞ்சுக்குளம் வயல் வீதி, பாலமோட்டை பிரதான வீதி, வாரிஉடையார் இலுப்பைக் குளம் வீதி, நவ்வி வயல் வீதி மற்றும் நவ்வி பாடசாலை முன் வீதி என்பனவுமாகும். நெல்சிப் திட்டத்தால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் உக்குளாங்குளம், தாலிக்குளம், கற்குளம் என்பவற்றிற்கான தாரிடல் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

டிசிபியால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் விளாத்திக்குளம் வீதி, ஜமீயுல் குடா முஸ்லிம் மையவாடி திருத்தம் என்பன மேற்கொள்ளப்பட்டன.

**பல்வேறு நிறுவனங்களின் நிதியுதவியுடனேயே இந்த வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

பி.எஸ்.ஜி.டியினால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் கூமாங்குளம் 2 ஆம் குறுக்கு வீதி திருத்தப்பட்டுள்ளதோடு பம்பைமடு குப்பை அகற்றும் கிடங்கு அமைத்தலும் இடம் பெற்றுள்ளது.

ராப் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிதி மூலம் மகாறம்பைக்குளம் வீதி, கூமாங்குளம் 2 ஆம் ஒழுங்கை, ஆசிகுளம் கிராம வீதி நொச்சிமோட்டை கிராம வீதி, காத்தார் சின்னக்குளம் வீதி பர்நாட்டங்கண்டல் வீதி, கோயில் குளம், சிவன் கோயில் முதியோர் இல்ல வீதி, பொன்னாவரசன் கிராம வீதி, பூம்புகார் கிராம வீதி, கல்நாட்டன் குளம் வீதி, தரணிக்குளம் வீதி, தம்பனைச்சோலை வீதி, ஓயார் சின்னங்குளம் கிராம வீதி, ஆச்சுபுரம் 4 ஆம் குறுக்குத் தெரு ஆச்சுபுரம் 2 ஆம் குறுக்குத் தெரு, கற்பகபுரம் கிராம வீதி, பாரதிபுரம் கிராம வீதி, ஸ்ரீராமபுர கிராம வீதி சுந்தரபுரம் கிராம வீதி, அண்ணாநகர் பிரதான வீதி, நொச்சிமோட்டை உள்ளக வீதி, பணிக்கர் புளியங்குளம் வீதி என்பனவும்-

பொஸ்டோ நிறுவனம் வழங்கிய நிதியின் மூலம் நொச்சிகுளம் வீதி, பனிச்சர் குளம் உள்ளக வீதி, வாரி உடையார் இலுப்பைக்குளம் வீதி, கோவில் குஞ்சுக்குளம் உள்ளக வீதி, கோதாண்ட - நொச்சிக்குளம், பனிக்க நீராவி பாலர்பாடசாலை, பன்றிக்கெய்தகுழாய்க் கிணறு புனரமைத்தல், கதிரவேலர் பூவரசங்குளம் குழாய்க் கிணறு அமைத்தல், கிளவி குளம் குழாய்க் கிணறு அமைத்தல் என்பனவும்-

கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் இராசேந்திரகுளம், கண்ணன் கோட்டம், மகாறம்பைக்குளம் ஆகிய பகுதியில் காணப்படுகின்ற குழாய்க் கிணறுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் ஓமந்தைப் பகுதியில் குழாய்க் கிணறுகளை அமைக்கும் பணிகள் இடம் பெற்றன. (க-400)

## துர்நாற்றம் வீசும் குடியிருப்பு குளப் பகுதி

வவுனியா, ஏப்.28

வவுனியா குடியிருப்பை அண்மித்த குளப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இந்தப் பகுதியில் மதுப்பிரியர்கள் இரவு வேளையில் மது அருந்துகின்றனர். இதேவேளையில் இறந்த மிருகங்கள், பறவைகளின் உடல் உறுப்புக்கள் வீசப்பட்டுக் காணப்படுகின்றன. பூந்தோட்டம் முதல், ஹொரவப் பொத்தானை வீதி வரையும் விசாலமாகக் காணப்படும் இந்தக் குளத்தை அழகுபடுத்துவதற்கான முயற்சிகள் எடுப்பதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் கூறிக் கொண்ட போதிலும் ஒன்றரை வருடகாலமாக ஒன்றுமே இடம் பெறவில்லை. அழகு வாய்ந்த சுற்றுலாமையம் கலாசாரச் சீரழிவுக்கான தளமாக மாறி வருகின்றது.

அத்துடன் சுகாதாரச் சீரழிவான பிரதேசமாகவும் மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேற்படி குளத்தை விரைவில் சுத்திகரித்து, கலாசார சீரழிவாளர்களிடமிருந்து விடுவித்து மனதை ஆற்றுப்படுத்தும் தூய்மையான காற்றும், நறுமணமும் நிறைந்த சுற்றுலாமையமாக திகழக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாற்ற விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## போதைப் பொருள்களுடன் பேசாலையில் ஒருவர் கைது

மன்னார், ஏப்.28

மன்னார் பேசாலையில் ஒரு தொகுதி போதைப் பொருள்களுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**10 கிலோ கஞ்சா ஒரு கிலோ ஹெரோயின் கைப் பற்றல்.**

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மன்னார்ப் பொலிஸாரும் கொழும்பிலிருந்து வருகை தந்த போதை வஸ்துத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரும் கடந்த செவ்வாய்க்கிழமை காலை மன்னார், பேசாலைக்குச் சென்று வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 கிலோ கஞ்சா,ஒரு கிலோ ஹெரோயின் ஆகியவற்றைக் கைப்பற்றியதோடு ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் போதைவஸ்துத் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று மன்னார்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஷார தலுவத்த தெரிவித்தார். (க-12)

## வவுனியா நெளுக்குளத்தில் இளைஞர்கள் அட்டகாசம்

நெளுக்குளம்,ஏப்.28

வவுனியா நெளுக்குளம் பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த வீதியில் பயணிப்போர் இளைஞர் குழுக்களால் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாலை வேளைகளில் மது போதையுடன் காணப்படும் இளைஞர் குழுக்கள் இந்த வீதியில் செல்பவர்களுடன் தகராறில் ஈடுபடுகின்றனர்.

மேலும் வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்துக்கு வடக்கே 500 மீற்றர் தூரத்தில் இளைஞர்கள் சிலர் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் வந்து மது அருந்துகின்றனர். பின்னர் பலத்த சத்தமாக இசையை ஒலிக்கவிட்டு ஆடி மகிழ்கின்றனர். அத்துடன் வீதியில் செல்லும் பெண்களை மறித்து அடாவடித்தனத்திலும் ஈடுபடுகின்றனர்.

அருகில் நெளுக்குளம் சனசமூக நிலையம், வர்த்தக நிலையங்கள், ஆலயம், கல்வி நிலையங்கள் என்பன அமைந்துள்ளன. இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்கள் தொடர்பாகப் பொலிஸாரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. (க-402)

## புதிய பயிற்சி நெறிகள்

நெளுக்குளம், ஏப்.28

வவுனியா தெற்கு வலய முறைசாராக் கல்விப் பிரிவால் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையின் அனுசரணையுடன் குளிரூட்டி வாயு சீராக்கி திருத்துதல், மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங், வீட்டு மின் இணைப்பு, ஒட்டுவேலை, அலுமினியம் பொருத்துதல் ஆகிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறி 6 மாதகாலம் இடம்பெறவுள்ளதாகவும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படுமெனவும் வவுனியா தெற்கு வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் க.சிவதாஸ் தெரிவித்தார். (க-402)

### தமிழ் மொழி தினப்போட்டி

வவுனியா மாவட்ட தமிழ் மொழித்தினப் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

வலய மட்ட நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்கள் மாவட்ட மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)



மன்னார்,குஞ்சுக்குளம் தொங்கு பாலத்திற்கு அருகில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியை கடற்படையினர் தம்வசப்படுத்தியுள்ளனர்.குறித்த காணி கடற்படையினருக்குச் சொந்தமானதாகவும் எவரும் உட்பிரவேசிக்க முடியாது எனவும் பெயர்ப்பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (12)

## முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் உதவிக்கான கலந்துரையாடல்

மன்னார், ஏப்.28

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு இவற்றை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு வள்ளிபுனம் கிராம அலுவலர் பிரிவில் 544 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இதில் 414 குடும்பங்களுக்கு மட்டும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு இந்த உதவிகள் கிடைக்கவில்லையென அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் மேற்படி கிராம அலுவலர் பிரிவில் இதுவரை வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொள்ளாத 132 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 12 ஆம் திகதி சேவாலங்கா நிறுவன இணைப்பாளர் ஜோன் தலைமையில் நடைபெற்றது.

**132 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் சேவாலங்கா நிறுவனத்தால் நடைபெற்றது.**

இதில் பிரதேச கிராம அலுவலர், ஒக்ஸ்பாம் நிறுவனப் பிரதிநிதி பயஸ், கிராம அபிவிருத்திச் சங்க உபசெயலாளர் எஸ்.மாதவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

தற்போது மேற்படி குடும்பங்களின் தேவைகள் குறித்து பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-6)

### அம்புலன்ஸ் இல்லாததால் பெரியமடுவில் பாதிப்பு

மன்னார், ஏப்.28

அம்புலன்ஸ் இல்லாததால் பெரியமடு வைத்தியசாலையின் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வடக்கு மாகாண ஆளுநரால் வழங்கப்பட்ட பெரியமடு வைத்தியசாலைக்கான அம்புலன்ஸ் மன்னார் வைத்தியசாலையிலேயே தரித்து நிற்கின்றது.

இதனால் மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட வேண்டிய பெரியமடு நோயாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே பெரியமடுவுக்கான அம்புலன்ஸை வைத்தியசாலையிலேயே தரித்து நிற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-12)

## முள்ளியவளை, வற்றாப்பளையில் விபத்துச் சம்பவங்கள் அதிகரிப்பு

முள்ளியவளை, ஏப்.28

முள்ளியவளை மற்றும் வற்றாப்பளைப் பகுதிகளில் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அண்மையில் வற்றாப்பளை- புதுக்குடியிருப்பு வீதியில் பயணித்துக் கொண்டிருந்த கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.செய்சோதிகாந்தன் இராணுவ வாகனமொன்றால் மோதப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது வலதுகை தோள் மூட்டில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

**பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.**

இதேவேளை முள்ளியவளை கல்யாணவேலவர் ஆலயக் குருக்களும் வேகமாக வந்த உந்துருளியால் மோதி வீழ்த்தப்பட்டார்.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் இங்கு இடம் பெறுவது வாடிக்கையாக மாறியுள்ளது.

ஆனால் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். (க-433)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரயில்வே தண்டவாள நிலங்களில் குடியமர்ந்தோர் நாவற்குழிக்கு

தென்மராட்சி, ஏப். 28

இணுவில், மருதனார் மடம், மீசாலை ஆகிய இடங்களில் இலங்கை ரயில்வேத் திணைக்களத்துக்கு சொந்தமான தண்டவாள நிலத்தில் வீடுகள் அமைந்திருந்த 30 குடும்பங்கள் நாவற்குழியில் குடியமர்த்தப்படவுள்ளன.

இந்தப் பகுதியில் வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் இவர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காங்கேசன்துறையிலி ருந்து பளை வரையில் ரயில் வீதி அமைப்பதற்கு இந்தக் குடும்பங்களை வெளியேற்ற முயற்சித்த போது தமது சொந்த இடத்துக்கு விடும்வரை வெளியேற மாட்டோம் என அவர்கள் தெரிவித்திருந்தனர்.**

இந்தக் குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக் குடியமர்த்தப்படும் வரை நாவற்குழியில் தற்காலிகமாகக் குடியமர்த்த மாவட்ட செயலகத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து பளை வரையில் ரயில் வீதி அமைப்பதற்கு இந்தக் குடும்பங்களை வெளியேற்ற முயற்சிகள் மேற்கொண்டபோது தமது சொந்த இடத்துக்கு விடும்வரை வெளியேற மாட்டோம் என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் இதற்கு மாற்று ஏற்பாடாக நாவற்குழியில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## புனரமைக்கப்படாத மதகு

யாழ்ப்பாணம், ஏப்.28

வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட வல்வை-அராலித்துறை வீதியில் உள்ள களவத்துறை மதகு புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ளது. இதனால் இந்த வீதியினூடான போக்குவரத்து முற்றாகச் சீர்குலைந்துள்ளது. இதனை உடன் மீள்புனரமைக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன் வரவேண்டும் என வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளரிடம் கோரியுள்ளார்.

வல்வை- அராலித்துறை வீதியில் உள்ள களவத்துறை சனசமூக நிலையத்துக்கு முன்னாய் உள்ள மதகு கடந்த 40 வருட காலமாக புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ளது. இதனைப் புனரமைக்குமாறு பொது அமைப்புகளும் வலி.மேற்குப் பிரதேச சபையும் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தன.

தற்போது 'காப்பெற்' வீதி போடப்படும்போது மதகைப் புனரமைக்காவிட்டால் அது பயனற்றதாகி விடும்.

எனவே அதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதம பொறியியலாளரிடம் கோரப்பட்டுள்ளது. (த)

## 7, 500 ரூபா அபராதம்

தென்மராட்சி, ஏப்.28

சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)

## எக்ஸ்ரே இயந்திரம் திருத்துவதில் தாமதம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதடைந்த 'எக்ஸ்ரே' இயந்திரங்களை திருத்தியமைப்பதற்கு கொழும்பில் இருந்து தொழில்நுட்பவியலாளர்கள் வருவதில் தாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஒரு எக்ஸ்ரே இயந்திரம் மூலமே படப்பிடிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் அங்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு எக்ஸ்ரே இயந்திரங்கள் கடந்த ஒரு வருட காலமாக பழுதடைந்து ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் திருத்தியமைக்க வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்த போதும் அதற்கான தொழில்நுட்பவியலாளர்கள் கொழும்பில் இருந்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எக்ஸ்ரே படப்பிடிப்பில் நெருக்கடி நிலை நீடிப்பதால் தற்போது உள்ள 'எக்ஸ்ரே' இயந்திர மூலம் 24 மணி நேரமும் படப்பிடிப்பு நடைபெறுகிறது. (த-17)

## மழையில் நனைந்த புகையிலைகள்

வடமராட்சி,ஏப்.28

வடமராட்சிப் பிரதேசத்தில் உலர்த்துவதற்காக வெயிலில் காயப் போடப்பட்டிருந்த புகையிலைகள் மழையால் நனைந்து பெரிதும் சேதமடைந்துள்ளன. இதனால் பலத்த நஷ்டத்தை விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை முடிவுற்ற நிலையில் அவை மதில்களில் உலரப் போடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இவை கடந்த சில நாள்களில் இடம்பெற்ற மழையில் நனைந்து போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)



தேசிய சிறுவர் அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் பெற்றோரை இழந்த மாணவர்கள், வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரகடனம் கையெழுத்திடல் ஆகிய நிகழ்வுகள் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திஸநாயக்கா தலைமையில் இடம்பெற்றன. யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கையெழுத்திடுகிறார். (ம-13)

### கொழும்புத்துறை மாதர் இடுகாட்டில்

## சடலங்களைப் புதைக்க அனுமதி வழுங்குங்கள்

கொழும்புத்துறை, ஏப்.28

கொழும்புத்துறை மாதர் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இடுகாட்டில் சடலங்களைப் புதைப்பதற்கு எதிராகத் தோன்றியுள்ள தடைகளை நீக்கி அந்த மயானப் பகுதியை இந்துச் சிறுவர்களின் சடலங்களைப் புதைப்பதற்கு உள்ள உரிமத்தை உறுதி செய்து தருமாறு அந்தப் பகுதிப் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பான கோரிக்கையை யாழ்.பிரதேச செயலகம், யாழ்.மாநகர சபை மற்றும் அமைப்புக்களுக்கு அனுப்பியுள்ளதாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இந்தப் பகுதியில் இறந்த சிறுமி ஒருத்தியின் சடலத்தைப் புதைப்பதற்கு எடுத்துச் சென்றவேளை அந்தப் பகுதியில் வசித்து வரும் மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துப் புதைப்பதற்குத் தடை ஏற்படுத்தினர். கடும் வாக்கு வாதங்களின் பின்னர் சடலம் அங்கு புதைக்கப்பட்டது.

பல தலைமுறையாக இந்த மாதர் இடுகாட்டை இந்துச் சிறார்களின் சடலங்களைப் புதைக்க மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி, கொழும்புத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் சிறுவர் இடுகாடாக இது பயன்படுத்தப்பட்டது.

இடப்பெயர்வின்போது சட்டவிரோதமாக இடம்பெற்ற மணல் அகழ்வால் இடுகாட்டுப் பகுதி பெரும் குழிகளாகக் காணப்படுகிறது.

அதேவேளை இந்தப் பகுதியில் உருவான குடியிருப்புகளில் வசித்துவரும் மக்கள் சடலங்களைப் புதைப்பதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே இந்து சமய முறைப்படி சிறுவர்களைத் தகனம் செய்யாது புதைக்கும் கடமையை நிறைவேற்ற நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த இடுகாட்டை தொடர்ந்தும் பயன்படுத்த உதவுமாறு அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-135)

## விவசாயிகளுக்கு உப உணவுப் பயிர் செய்கைக் கடன்

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த 144 விவசாயிகளுக்கு உப உணவுப் பயிர்ச் செய்கை கடன் வழங்கப்படவுள்ளது.

அமைப்பைச் சேர்ந்த பகுதிகளில் உப உணவுப் பயிர்களான மிளகாய், வெங்காயம் போன்ற பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குச் சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையால் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் பரப்பளவுக்கேற்ப ஒரு லட்சம் ரூபா தொடக்கம் ஒன்றரை லட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் இரண்டாம் திகதி சாவகச்சேரி பெரும்பாக அலுவலர் திருமதி ஜெகதீஸ்வரி முன்னிலையில் இடம்பெறவுள்ளது என்று அமைப்பின் செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்தார். (ம-9)

## சைக்கிள் திருட்டுக்கள் நவாலியில் அதிகரிப்பு

நவாலி, ஏப்.28

நவாலியில் கடந்த சில நாள்களாக சைக்கிள் திருட்டுக்கள் அடுத்தடுத்து இடம்பெற்று வருவதால் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இரவு வேளைகளில் குடியிருப்பாளர்களின் வீடுகளிலேயே இடம்பெற்றுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் நவாலி சங்கையான் வீதியில் இடம்பெற்ற திருட்டுக்கு மறுநாள் சின்னப்பா வீதியிலுள்ள வீடொன்றில் வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளை இரவு 7 மணியளவில் உள்ளே நுழைந்த திருடன் அதனை எடுத்துக் கொண்டு ஓடியபோது வீட்டிலிருந்த பெண் அவதானித்து விட்டார். அவர் 'திருடன்', 'திருடன்' என்று கத்திக் கொண்டு வீதியால் ஓடியுள்ளார்.

இவரது சத்தத்தைக் கேட்ட அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஒன்று சேர்ந்து திருடனைத் துரத்தியபோது ஆனைக்கோட்டையிலுள்ள கடையொன்றுக்கு முன்னால் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

உடனடியாக சாதுரியமாகச் செயற்பட்ட இவர்கள் திருடன் வரும் மட்டும் அந்தப் பகுதியில் மறைந்திருந்தனர். சில நிமிடங்களில் திருடன் அங்கு வந்து சைக்கிளை எடுக்க முற்பட்ட வேளை அவரை மடக்கிப் பிடித்து [illegible] பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். (த-100)

## கூட்டணியின் வேலைத் திட்டங்களை புறக்கணிக்கிறது யாழ்.மாநகர சபை

### உறுப்பினர் சங்கையா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.28

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைகள், வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் யாழ். மாநகர சபையால் புறக்கணிக்கப்படுவதாகவும் மக்களுக்குச் சேவை செய்ய முடியாத பதவி எதற்கு எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநகர சபை உறுப்பினர் இரா.சங்கையா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினராக யாழ்.மாநகர சபையில் உள்ள ஒரேயொரு உறுப்பினரான என்னால் சுமார் இரண்டு வருடங்களாக எழுப்பப்படும் நியாயமான கோரிக்கைகளும் வேண்டுகோள்களும் தொடர்ந்தும் ஆளும் தரப்பால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. மாநகர சபை தமிழர் விடுதலைக் கூட்டணி மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியே இதற்குக் காரணமாகும். யாழ்.மாநகர சபையில் கடந்த காலத்தில் இக்கட்டான சூழ்நிலையில் இரண்டு மேயர்களை அநியாயமாகப் பலி கொடுத்ததுடன் பல்வேறு தரப்பினரும் அரசியல் செய்ய பின்வாங்கிய நிலையில் துணிச்சலாக ஜனநாயக அரசியலுக்கு வந்தவர்களை மட்டுமல்லாது ஏனைய ஆயுதம் தாங்கிய இயக்கங்களையும் அரவணைத்துக் கொண்டு ஜனநாயகத்துக்காகப் போராடியது எமது கட்சி.

யாழ்.மாநகர சபையை ஆளும் தரப்பாக இருந்து ஆண்டது எமது கட்சி. இலங்கை வரலாற்றிலேயே பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஒரேயொரு தமிழ்க் கட்சி. இக்கட்சியின் ஒரேயொரு உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என ஆளுந்தரப்பு பிடிவாதமாகச் செயற்படுமானால் அவர்கள் வரலாறு தெரியாமல் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே அர்த்தம். இதுவரை மாநகர சபை உறுப்பினராக இருந்தும் என்னைச் சார்ந்த மக்களுக்கு எதுவும் செய்ய முடியவில்லை. இது தொடர்பாக எனது கட்சியின் தலைமையுடன் கலந்துரையாடி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கத் தீர்மானித்துள்ளேன்- என்றுள்ளது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் பான் கீ மூன்



ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன், மூன்று நாள்கள் சுற்றுப் பயணமாக நேற்றுமுன்தினம் வியா ழக்கிழமை இந்தியாவுக்குச் சென்றுள்ளார். புதுடில்லி இந்திராகாந்தி சர்வதேச விமானநிலையம் சென்றடைந்த அவரை, மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் பூங்கொத் துக் கொடுத்து வரவேற்றார்.

இந்தியா சென்ற அவர் பிரதமர் மன்மோகன் சிங், சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, மக்களவை சபாநாயகர் மீராகுமார் மற்றும் அரச பிரதிநிதிகளை டில்லியில் சந்தித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கவுள்ளார்.

# ஈழத்தமிழர் சகல நிலைகளிலும் சம உரிமையுடன் வாழவேண்டும்

## கருணாநிதியின் கருத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூ. பதிலடி

ஈழத்தமிழர்கள் அனைத்து நிலைகளிலும் சம உரிமையுடன், இலங்கையில் வாழ வேண்டும். தமிழர் பகுதியிலிருந்து இராணுவம் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைப்பதும் அதற்காக இலங்கை அரசை நிர்ப்பந்திப்பதும் இந்திய அரசு உரிய முறையில் தலையிட வேண்டும் என்று வலியுறுத்துவதும்தான் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவுவதாக அமையும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

தனி ஈழக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் கட்சியை விமர்சித்துள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அந்தக் கட்சியின் மாநிலச் செயலர் ஜி.ராமகிருஷ்ணன் பதிலளித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரினால், குறிப்பாக இறுதிக் கட்டப் போரின்போது கடுமையாகப் பாதிக்கப்பட்ட



தமிழ் மக்களுக்கு மறுவாழ்வு, முழுநிவாரணம், முகாம்களில் தங்கியுள்ளவர்களை மீளக் குடியமர்த்துதல், தமிழர்கள் பகுதியிலிருந்து இராணுவத்தை முற்றாக விலக்கி கொள்வது ஆகியவை தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் உடனடிக்கோரிக்கையாக உள்ளது.

மேலும், இலங்கை அரசு அமைத்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந் துரைகளைச் செயற்படுத்த வேண்டும் என்றும் தமிழ் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கை சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மத்திய குழு உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் இடம் பெற்றிருந்தார். இலங்கைப் பயணம் முடித்து, சென்னையில் பேட்டியளித்த ரங்கராஜன் இலங்கைத் தமிழர் அமைப்புகளும், பொது மக்களும் தனி ஈழம் என்ற கோரிக்கையை முன் வைக்கவில்லை. மாறாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பரவல் அடிப்படையில் அரசியல் தீர்வையே வலியுறுத்துகின்றன என்று குறிப்பிட்டார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி முரசொலி ஏட்டில் எழுதியுள்ள கடிதத்தில் தனி ஈழம் வேண்டுமென்று இலங்கையில் வலியுறுத்தவில்லை என்று கூறியுள்ளதற்காக டி.கே.ரங்கராஜனை விமர்சித்துள்ளார். இலங்கையில் பல்வேறு தரப்பினரும் கூறியுள்ள கருத்தைத்தான் ரங்கராஜன் எடுத்துரைத்துள்ளார்.

தனி ஈழத்துக்குக் குறைவான எதற்கும் இலங்கைத் தமிழர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்ற கருணாநிதியின் கருத்துக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பிரிக்கப்படாத ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளேயே தீர்வு காண்பதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கை சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடமும் இதே கருத்தையே தெரிவித்துள்ளார்.

நீண்டகாலம் நீடித்த போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைத்திட வேண்டும்.

அவர்கள் அனைத்து நிலைகளிலும் சம உரிமையுடன், இலங் கையில் வாழ வேண்டும். நிலம் உள்ளிட்ட அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழர் பகுதியிலிருந்து இராணுவம் முற்றாக விலக்கிக் கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைப்பதும் அதற்காக இலங்கை அரசை நிர்ப்பந்திப்பதும் இந்திய அரசு உரிய முறையில் தலையிட வேண்டும் என்று வலியு றுத்துவதும் தான் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவுவதாக அமையும் என்று மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. - என்று அதிலுள்ளது.

(வ)

# கூடங்குளத்தில் மேலும் 4 அணு உலைகள்

## அணுசக்தி ஆணையத் தலைவர் தெரிவிப்பு

கூடங்குளம், ஏப்.28

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் மேலும் 4 அணு உலைகள் அமைக்கப்படும் என்று இந்திய அணுசக்தி ஆணைய தலைவர் எஸ்.கே. பானர்ஜி தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் மேலும் 4 அணு உலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவை தென்னிந்தியாவின் மின் தேவையைப் பூர்த்தி செய்யலாம். கூடங்குளத்தில் அணு உலைப் பகுதியில் அணுக் கழிவுகளை மறு சுழற்சி செய்யும் மையம் எதுவும் அமைக்கும் திட்டம் இல்லை.

கூடங்குளத்தில் உற்பத்தி செய்யப் படும் மின்சாரத்தை தமிழகத்துக்கே வழங்க வேண்டும் என்ற முதல்வர் ஜெயலலிதாவின் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது -என்றார்.

கூடங்குளத்தில் தற்போது தலா 1000 மெகா வாற் திறன் கொண்ட 2 அணு உலைகள் உள்ளன. அதில் முதல் உலையில் விரைவில் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அணுமின் நிலைய ஊழியர்கள் இரவு பகல் பாராது பணியாற்றி வருகின்றனர். இதற்கு போராட்டக் குழுவினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் மீண்டும் காலவரையற்ற உண்ணா விரதத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

# நளினிக்கு மீண்டும் முதல் வகுப்பு சிறை



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினிக்கு மீண்டும் முதல் வகுப்புச் சிறை வழங்கப்பட் டுள்ளது.

மேற்படி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, வேலூர் பெண்கள் தனி சிறையில் உள்ளார். 2 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவின்படி நளினிக்கு சிறையில் முதல் வகுப்பு வழங்கப்பட்டது. அவரது அறையில் இருந்து கைபேசி பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புழல் சிறைக்கு மாற்றப்பட்டார்.

பின்னர் மீண்டும் வேலூர் பெண்கள் தனி சிறைக்கு நளினி மாற்றப்பட்டார். கைபேசி பறிமுதல் செய்யப்பட்டதைக் காரணம் காட்டி நளினிக்கு முதல் வகுப்பு வசதி வழங்கவில்லை. இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் அவர் வழக்குத் தொடர்ந்தார். நளினிக்கு முதல் வகுப்பு வசதிகள் வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தநிலையில், நளினி அடைக்கப்பட்ட அறையில் 2 நாள்களுக்கு முன்பு முதல் வகுப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. (வ)

# விரைவில் ராஜ்யசபா உறுப்பினராவார் சச்சின்

## சோனியாவுடன் அவர் சந்திப்பு



ராஜ்யசபா நியமன உறுப்பினர் பதவிக்கு சச்சின் டெண்டுல்கர் பெயர் மத்திய உள் துறை அமைச்சகத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட்டின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரை மாநிலங்களவை உறுப்பினராக்க பிரதமர் மன்மோகன் சிங் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதற்கிடையில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சச்சின் டெண்டுல்கர் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு, சச்சின் தனது 100 ஆவது சத சாதனையை நிறை வேற்றியதற்காக சோனியாகாந்தி தனிப்பட்ட முறையில் வாழ்த்துத் தெரிவிக்க அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த அழைப்பை ஏற்ற சச்சின் டெண்டுல்கர் நேற்றுமுன்தினம் சோனியா காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

சச்சினுடன் அவரது மனைவி அஞ் சலி, ஐபிஎல் போட்டிகளின் தலைவரான ராஜீவ் சுக்லா ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த சந்திப்பில் மாநிலங்களவை உறுப்பினர் பணி குறித்து பேச்சுகள் எது வும் நடைபெற்றதாகத் தகவல் வெளி வரவில்லை.(வ)

# தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவை ஆரம்பிக்க புதிய குழு

தூத்துக்குடி, ஏப்.28

தடைப்பட்டுள்ள, தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த பணிக்காக, உயரதிகாரிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது என்று தூத்துக்குடி வ.உ.சி., துறைமுகத் தலைவர் சுப்பையா தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் தெரிவித்ததாவது:-

தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் சேவை, கடந்தாண்டு, ஜூன் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மொத்தம், 45 தடவைகள் கப்பல் இந்தியாவிலிருந்து கொழும்பு சென்று வந்துள்ளது. இரு மார்க்கத்திலும், 12 ஆயிரத்து 206 பேர் பயணித்துள்ளனர்.

229 டிராக்டர் உள்ளிட்ட, சரக்கு வாகனங்களும் கொண்டு செல்லப்பட்டன. இதன்மூலம், துறைமுகத்துக்கு கணிச மான வருவாய் கிடைத்தது.

தனியார் நிறுவனத்தால், கப்பலை இயக்குவதில் ஏற்பட்ட சில பிரச்சினைகளால், இந்தச்சேவை கடந்த நவம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், இந்தக் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த பணிக்காக, கப்பல் துறை, துறைமுகம், கடலோரக் காவல் படை, தமிழக வனத்துறை, தமிழக கடற்சார் பயிற்சி நிறுவனம், கப்பலை இயக்கும் பிளமிங்கோ லைனர்ஸ் தனியார் நிறுவனம் ஆகியவற்றின் உயரதிகாரிகள் அடங்கிய துணைக் குழு, புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கூட்டம் அடுத்த மாதம்15 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

அதில், கப்பல் இயக்குவதிலுள்ள பிரச்சினைகள், அதைத் தீர்ப்பதற்கான வழிமுறை, புதிய கப்பலில் எத்தனை பேர் பயணிக்கலாம், வாரத்தில் எத்தனை நாள் இயக்குவது என்பன போன்ற விவரங்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும். அதனடிப்படையில் இந்தக் கப்பல் சேவை, விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது-என்றார் அவர். (வ)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆதரவுபெற

# கருணாநிதியைச் சந்திக்க வருகிறார் பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி

ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவு கோரி தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசுவதற்காக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனியை அனுப்புகிறார் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி. இதையடுத்து விரைவில் அந்தோணி சென்னைக்குச் செல்லவுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளரை இறுதி செய்ய காங்கிரஸ் தரப்பும், பாரதீய ஜனதாக் கட்சி தரப்பும் முஸ்தீபுகளை முடுக்கி விட்டுள்ளன. மேலும் ஏனைய அரசியல் கட்சிகளும் தங்களது நிலைப்பாட்டை பட்டை தீட்டி வருகின்றன. தற்போதைய நிலையில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் பெயர் முன்னணிப் பரிசீலனையில் உள்ளது. பல கட்சிகளும் அவருக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளன. ஆனால் காங்கிரஸ் தரப்பில் அதற்குப் பெரும் தயக்கம் காட்டப்படுவதாகத் தெரிகிறது.

இந்த நிலையில், தி. மு. கவின் ஆதரவை உறுதி செய்து கொள்வதற்காகவும், வேட்பாளர் குறித்து விவாதிக்கவும் தூதர் ஒருவரை அனுப்ப காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்தது. அதன்படி மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனியை சென்னைக்கு அனுப்பி வைக்கிறார் சோனியா காந்தி. இன்னும் ஓரிரு நாளில் சென்னைக்கு வரும் அந்தோனி, சோனியாவின் தகவலை கருணாநிதியிடம் தெரிவிக்கவுள்ளார். அவர் கூறும் பதிலை சோனியாவிடம் தெரிவிப்பார்.

இந்தத் தகவலை காங்கிரஸ் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார். வழக்கமாக கருணாநிதியைச் சந்திக்க பிரணாப் முகர்ஜி அல்லது குலாம் நபி ஆசாத் போன்றோரைத்தான் சோனியா அனுப்புவார். இதுவரை அந்தோனியை எதற்குமே அவர் அனுப்பியதில்லை. ஆனால் இந்தமுறை அந்தோனி வருவதை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

ஆனால் பிரணாப் முகர்ஜியும் வேட்பாளர் பட்டியல் பரிசீலனையில் இன்னும் இருப்பதால்தான் அவரை சோனியா காந்தி அனுப்பவில்லை என்று கூறப்படுகிறது. காங்கிரஸ் தரப்பு துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது குறித்தும் ஆலோசனையில் உள்ளது. அதற்கு லாலு பிரசாத் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லைபீரிய முன்னாள் அதிபர் போர்க் குற்றவாளி


## வேரக் நீதிமன்றம் தீர்ப்பு

சியரா லியோன், ஏப்.28

லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் டெய்லர், போர்க் குற்றவாளி என சியாரா லியோன் வழக்கை விசாரித்த வேரக் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

64 வயதான சார்ள்ஸ் டெய்லர், லைபீரியாவில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தேசிய தேசாபிமான முன்னணி எனும் குழுவுக்குத் தலைமை வகித்தவர். அந்த நாட்டில் குறைந்தபட்சம் 7 ஆயுதக் குழுக்கள் சம்பந்தப்பட்ட மோதல்களினால் 250,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1997 ஆம் ஆண்டு லைபீரிய அதிபராக சார்ள்ஸ் டெய்லர் தெரிவுசெய்யப்பட்டார்.

அதேவேளை, 1991 முதல் 2001 ஆம் ஆண்டுவரை சியரா லியோனில் இடம்பெற்ற சிவில் போரின் போது சியரா லியோன் கிளர்ச்சியாளர்கள் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துவதற்கு ஆயுதம் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.



உள்நாட்டு போரில் சுமார் 120,000 பேர் கொல்லப்பட்டிருந்தனர். பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் அங்கவீனமானதுடன் போதையேறிய கிளர்ச்சியாளர்களால் பலர் கொல்லப்பட்டனர். திட்டமிடப்பட்ட பாலியல் வல்லுறவுகள், சிறுவர்களை படையில் சேர்த்தல் முதலான குற்றச்செயல்கள் இடம்பெற்றன.

இவ்வாறு பயங்கர வன்முறைகளில் ஈடுபட்ட கிளர்ச்சியாளர்களிடமிருந்து இரத்தினக்கற்களை பெற்றுக் கொண்டு அவற்றுக்குப் பதிலாக ஆயுதங்களை வழங்கியதாக சார்ள்ஸ் டெய்லர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

2003 ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக அதிபர் பதவியிலிருந்து விலகிய சார்ள்ஸ் டெய்லர், நைஜீரியாவுக்குத் தப்பிச் சென்றார்.

2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர் நைஜீரியாவில் கைது செய்யப்பட்டு லைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார். அங்கு ஐ.நா. விசேட நீதிமன்றமொன்றின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த அவர், அந்த வருடம் ஜூன் மாதம் சர்வதேச நீதிமன்ற விசாரணைக்காக நெதர்லாந்துக்கு இடமாற்றப்பட்டார்.

2007 ஆம் ஆண்டு நெதர்லாந்தின் ஹேக் நகரில், சியாரா லியோனுக்கான விசேட நீதிமன்றத்தினால் டெய்லருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டு வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. இந்த வழக்கின் இறுதி விசாரணையின் போது அவர் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டார்.

இரண்டாம் உலக யுத்த கால போர்க்குற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர், நாடொன்றின் தலைவராகப் பதவி வகித்த ஒருவர் சர்வதேச நீதிமன்றத்தினால் போர்க்குற்றவாளியாக காணப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். சார்ள்ஸ் டெய்லருக்கான தண்டனை எதிர்வரும் 30 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

## மாணவிகளின் முகத்தில் கரி பூசிய ஆசிரியை

லாகூர், ஏப்.28

தன்னுடைய கணவரின் கடையில் புத்தகங்களை வாங்காததால் 5 மாணவிகளின் முகங்களில் கரியைப் பூசி அவமானப்படுத்தினார் ஆசிரியை.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் தோபாதேக் சிங் நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. லைபா, அலியா, நடாஷா, ரிம்ஷா, அலிஷா என்ற 4 மாணவிகள் நான்காம் வகுப்பில் கல்வி கற்கின்றனர். பாடப் புத்தகங்களைத் தன்னுடைய கணவர் நடத்தும் கடையிலேயே வாங்க வேண்டும் என்று ஆசிரியை கூறி இருக்கிறார். ஆனால் இந்த நான்கு மாணவிகளும் கேட்கவில்லை.

எனவே வகுப்புக்கு வந்த அவர்களிடம் இதைக் கேட்டு அடித்த ஆசிரியை, அவர்களுடைய முகங்களில் கரியைப் பூசியிருக்கிறார்.' அதற்கும் முன்னதாக, ''புத்தகம் வாங்காவிட்டாலும் பரவாயில்லை ஆளுக்கு 200 ரூபா கொடுங்கள்'' என்று கேட்டு வாங்கியிருக்கிறார்.

தங்களுடைய பிள்ளைகள் கரிய முகத்துடன் வீட்டுக்கு வந்ததும் வெகுண்ட பெற்றோர்கள் மாவட்டக் கல்வி அதிகாரிகளிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். மாவட்ட துணைக் கல்வி அதிகாரி புஷ்ரா இஷாக் விசாரித்து வருகிறார்.

## கால்பந்து சூதாட்டக்காரர் கைது

கோலாலம்பூர், ஏப்.28

மலேசியாவில் கால்பந்துப் போட்டி சூதாட்டத்தில் ஈடுபட்ட 24 சீனர்களுக்கு மலேசிய நீதிமன்றம் ஒரு மாத கால சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

மேலும் அவர்கள் அனைவருக்கும் 43 ஆயிரம் வரை அபராதத் தொகையும் விதிக்கப்பட்டது. தண்டனைக்குள்ளான 24 பேரும் பிரீமியர் லீக் கால்பந்து போட்டித் தொடரில் ஒன்லைன் சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வாதிகாரிகளுக்கு பான் கீ – மூன் எச்சரிக்கை

ஜெனிவா, ஏப்.28

லைபீரிய முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் டெய்லர் போர்க்குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டமையானது, தமது மக்களை துஷ்பிரயோகம் செய்யும் எதேச்சதிகாரத் தலைவர்களுக்கு ஒரு வலிமையான எச்சரிக்கையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

''சியரா லியோன், அந்தப் பிராந்தியம் மற்றும் அதற்கு அப்பாலுள்ள மக்களுக்கு இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்'' என்று பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர் எட்வார்டோ டெல் புவே நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்ள்ஸ் டெய்லர் குற்றவாளியாகக் காணப்பட்ட குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுடன் பொதுச் செயலாளரின் இன்றைய எண்ணங்கள் உள்ளன என டெல் புவே தெரிவித்தார்.

தமது கைகளில் இரத்தக்கறைப் படிந்த பல சர்வாதிகாரிகளுக்குச் சார்ள்ஸ் டெய்லர் ஒரு முன்னோடி என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை கூறியுள்ளார்.

இந்தத் தீர்ப்பானது எவரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர் என்பதை வெளிப்படுத்துகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்கப் புரட்சியாளர் கைது



அமெரிக்காவின் வோல்ஸ்ரீட் பகுதியில் நடைபெற்று வரும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் யுவதி ஒருவர் போக்குவரத்துப் பணிகளுக்கு இடையூறு விளைவித்த காரணத்துக்காக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்படுகிறார்.

## இடை விலகினார் வேட்பாளர்



அமெரிக்கத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை குடியரசுக்கட்சி வேட்பாளர் நியூட் ஜிங்றிஷ் இடைநிறுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது முன்னிலை பெற்றுள்ள மிட் ரோம்னிக்கு தமது ஆதரவை நியூட் ஜிங்றிஷ் வழங்கவுள்ளதாக அவரின் பேச்சாளரை மேற்கோள்காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரைக்குமான தேர்தல் கணிப்புக்களின்படி ஒபாமாவும் மிட் ரோம்னியும் சமநிலையில் இருப்பது தெரிய வந்துள்ளது.

தேர்தல் பிரசாரம் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து ஜோர்ஜியா மற்றும் தென் கரோலினா ஆகிய மாநிலங்களில் மாத்திரமே நியூட் ஜிங்றிஷ் வெற்றிபெற்றிருந்தார்.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தனது இறுதி பிரசார நடவடிக்கைகளை நியூட் ஜிங்றிஷ் மேற்கொள்ளவுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## மண்ணைக் கௌவினார் உண்ணாவிரதி

ஜெனிவா ,ஏப்.28

உணவு, தண்ணீர் இல்லாமல் காற்றில் இருந்து நேரடியாக சக்தி எடுத்துக் கொள்வதாகக் கூறி விரதம் இருந்த சுவிட்சர்லாந்து பெண் பரிதாபமாக இறந்தார். உணவு, குடி தண்ணீர் அருந்தாமல் சித்தர்கள் பல ஆண்டு காலம் உயிர் வாழ்ந்ததாக கூறப்படுகிறது. உடல் இயக்கத்துக்கு தேவையான ஜீவ சக்தியைக் காற்றில் இருந்து அவர்கள் நேரடியாகப் பெற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவில் வசிக்கும் யோகாசன குரு ஒருவர் இந்த முறையை பின்பற்றி 70 வயது வரை ஆரோக்கியமாக வாழ்வது தொடர்பான ஆவணப் படமொன்று சுவிற்சர்லாந்து தொலைக்காட்சியில் 2010 ஆம் ஆண்டு ஒளிபரப்பானது.

உல்ப்ஹால்டன் என்ற நகரைச் சேர்ந்த 50 வயது பெண் ஒருவர் இந்த நிகழ்ச்சியைப் பார்த்துள்ளார். ரேடிகல் ஃபாஸ்ட் எனப்படும் அந்த வகை விரதத்தைத் தானும் கடைபிடிக்க விரும்பினார். உணவு, தண்ணீர், பழம், காய்கறி எதுவும் சாப்பிடாமல் சூரிய வெப்பத்தில் இருந்து நேரடியாகச் சக்தியைப் பெற்று உயிர் வாழப் போவதாகக் கூறி விரதம் தொடங்கினார். எதிர்பாராதவிதமாக கடந்த ஜனவரி 11 ஆம் திகதி அவர் இறந்துவிட்டார். இது தற்போது தெரியவந்துள்ளது. முறைப்பாடு எதுவும் அளிக்கப்படாததால் இதுவரை சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## நகைச்சுவை நடிகரை கடத்திய தலிபான்கள்

இஸ்லாமாபாத், ஏப்.28

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளைத் தொடர்ந்து கிண்டல் செய்து வந்த நகைச்சுவை நடிகர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். பாகிஸ்தானைச் சேர்ந்த நகைச்சுவை நடிகர் நிசார் கான். தலிபான் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை தொடர்ந்து கிண்டல் செய்து வந்தார்.

இவர் தலிபான் தீவிரவாதிகள், திருடர்களைப் பிடித்து எப்படி தண்டனை வழங்குகிறார் என்பது குறித்து சமீபத்தில் ஒரு பாடல் எழுதியிருந்தார்.

என் தலையை மொட்டை அடியுங்கள், என் முகத்தில் கறுப்பு மை பூசுங்கள், கழுதை மீது என்னை உட்கார வையுங்கள், என்னை கிண்டல் செய்யுங்கள் என்ற ரீதியில் அந்தப் பாடல் அமைந்துள்ளது.

இந்த நிலையில், பெஷாவர் புறநகரில் உள்ள மடானி என்ற இடத்தில் திருமண நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

அதில் பங்கேற்ற நிசார் கான், அங்கிருந்த விருந்தினர்கள் முன் தனது பாடலை பாடி தலிபான்களை கிண்டல் செய்து கொண்டிருந்தார். அப்போது 20 தீவிரவாதிகள் திடீரென உள்ளே புகுந்து, நிசார்கானைக் கடத்திச் சென்றனர்.

திருமண நிகழ்ச்சியில் வேறு எந்தத் தாக்குதலும் நடத்தவில்லை. நிசார் கானை ஒன்றும் செய்ய மாட்டோம், பயப்படாதீர்கள் என்று கூறிவிட்டு தலிபான்கள் சென்றுள்ளனர்.

கடந்த ஆண்டும் நிசார் கானை தீவிரவாதிகள் கடத்தி ஒரு வாரத்துக்குப் பின் விடுவித்தனர் என்று குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்பினார் ஹியுகோ சாவேஸ்

ஹவானா, ஏப்.28

வெனிசூலா அதிபர் ஹியூகோ சாவேஸ் சிகிச்சைகளின் பின்னர் மீண்டும் நாடு திரும்பியுள்ளார்.

கியுபாவில் கடந்த 11 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர் நாடு திரும்பியுள்ளார் என்று வெனி[illegible] பர் புற்றுநோயுடன் தொடர்பு




டைய கட்டி ஒன்றுக்காக [illegible] சிகிச்சைகளைப் பெற்றுவருகின்றார். எனினும் மீண்டும் கியூபாவுக்கு அவர் சிகிச்சைகளுக்காகச் செல்லவுள்ளார் என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். வெனிசூலா அதிபர் உயிரிழந்துவிட்டார் என்று வதந்திகள் பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இது ஒரு வதந்தி என்றும், அவர் ஆரோக்கியமாக இருப்பதாகவும் அதிகாரிகள் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் ஹியுகோ சாவேஸ் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 பேர் சாவு

## சிரியாவில் போர் நிறுத்தக் காலத்திலும் குண்டுகள் வெடிக்கின்றன



சிரியா, ஹமாவிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தென் ஹமாவில் மாஷா அட் ரேயார் மாவட்டத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

பயங்கரவாத ஆயுதக் குழுவினரால் குண்டுத் தொழிற்சாலையாகப் பயன்படுத்தப்பட்டுவந்த வீடொன்றில் குண்டொன்று வெடித்ததாலேயே 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தொலைக்காட்சி நிறுவனங்களுக்குப் படங்கள், தகவல்களை அனுப்பியதாகக் கருதப்படும் ஒருவரை உயிருடன் புதைத்த காட்சியைக் காட்டும் ஒரு காணொலி வெளியாகியுள்ளது.

ஊடகத்துறையைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் தனது உயிருக்காக மன்றாடுவதையும் அவர் தலைமீது மண் போடப்பட அவர் மௌனிப்பதையும் இந்தக் காணொலியில் காண முடிந்தது.

பணத்துக்காக அரேபிய செய்மதித் தொலைக்காட்சி நிலையங்களுக்கு தகவல்கள், படங்கள் அனுப்பியதாக அவரைப் பாதுகாப்புப் படையினர் பேசுவதையும் அதில் கேட்க முடிந்தது. இறந்தவரது அனுதாபிகள் இந்தக் காணொலியை இரகசியமாக வெளியிட்டுள்ளனர்.

## தனது பிரஜைகளை எச்சரிக்கிறது அமெரிக்கா

சர்வதேசப் பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டு, ஓராண்டு நிறைவடைவதையொட்டி, தாக்குதல் நடக்கலாம் என்பதால், பாகிஸ்தானில் உள்ள தங்கள் நாட்டினரை, எச்சரிக்கையுடன் இருக்கும்படி, அமெரிக்கா உஷார்ப்படுத்தியுள்ளது.

கடந்த மே மாதம் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் கொல்லப்பட்டார். முதல் வாரத்தில், ஒசாமாவின் முதலாம் ஆண்டு நினைவு தினம் வருவதால், பாகிஸ்தானில் தங்கியுள்ள அமெரிக்கர்கள் மீது, தாக்குதல் நடக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதையடுத்து, பாகிஸ்தானில் உள்ள நட்சத்திர ஹோட்டல்கள், சந்தைகள் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் போது, எச்சரிக்கையுடன் இருக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# அமெரிக்காவை தோற்கடிப்போம்

## வடகொரியா அறைகூவல்



போர் ஏற்பட்டால் அமெரிக் காவைத் தோற்கடிக்கும் அளவுக்கு எங்களிடம் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் உள்ளன என்று வடகொரிய ராணுவ உயரதிகாரி மிரட்டல் விடுத்துள்ளார். வட கொரியா ஏவுகணை, அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாக அமெரிக்கா உட் பட பல நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

சமீபத்தில் வடகொரியா நடத்திய ஏவுகணைச் சோதனை தோல்வி அடைந்தது. இதற்கிடையில், வடகொரியாவை நிறுவிய கிம் சங்கின் 100, ஆவது பிறந்த நாள் விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதை தரக்குறைவாக தென் கொரியா விமர்சித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் ஆவேசம் அடைந்த வடகொரிய இராணுவ அதி காரிகள், தென் கொரியா மீது குண்டு வீசி 3 நிமிடங்களில் சாம்பலாக்கி விடுவோம் என்று மிரட்டல் விடுத்திருந்தனர். இந்த நிலையில் அமெரிக்காவை தோற்கடிப்போம் என்றும் மிரட்டல் விடுத்துள்ளனர்.

வடகொரிய இராணுவம் உருவாக்கப்பட்டு 80ஆம் ஆண்டு விழா, பியாங்யாங்கில் நடந்தது. இதில் வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன் பங்கேற்றார். அவர் முன்னிலையில் துணை மார்ஷல் ரியாங் ஹோ கூறுகையில்; அமெரிக்கா, தென் கொரியா விடம் இருந்து தொடர்ந்து அச்சுறுத்தல் நிலவுகிறது. இதைச் சமாளிக்க வடகொரிய ஆயுத பலத்தை அதிகரிக்க வேண்டியது முக்கியம். இதை உணர்ந்து வட கொரிய புதிய தலைவர் கிம் ஜாங், இராணுவத்துக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். அணு ஆயுதம், ஏவுகணை பலம் நிறைந்த நாடாக வட கொரியா உள்ளது. நவீன ஆயுதங்களைக்கையாள் வதில் எங்கள் மக்கள் திற மையானவர்கள். ஒரே ஒரு தாக்குதலில் அமெரிக்கா வைத் தோற்கடிக்கும் பலம் எங்களிடம் உள்ளது என்றார்.

வடகொரியாவின் அண்மைக் கால போர்முனைப்புக்கள் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவனிப்பை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த நிலைப்பாட்டை வட கொரியா வெளியிட்டுள்ளமையானது சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளது.

## விமான நிலையத்திலும் நடனம்

சீன விமான நிலையத்தில் காத்திருந்த ஆயிரக்கணக்கான பயணிகளை மகிழ்விக்க நடன அழகிகள் வரவழைக்கப்பட்டனர். சீனாவின் தாலியான் நகரில் கடந்த 3 நாள்களாக பலத்த சூறைக்காற்று வீசுகிறது. அத்துடன் மூடுபனியும் உள்ளது. இதனால் விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கும் அதிகமான விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

இதனால் 30 ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகள் விமான நிலையத்தில் குவிந்துள்ளனர். அவர்கள் பொழுதுபோக்க நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யலாம் என்று விமான நிலையத்தில் பணியில் இருந்த இளம் அதிகாரிகள் சிலர் யோசனை தெரிவித்தனர். அதை ஏற்றுக் கொண்ட அதிகாரிகள், உடனடியாக நடன அழகிகளை வரவழைத்தனர். அவர்களும் விமான நிலையத்துக்கு வந்து நடனமாட, பயணிகள் உற்சாகம் அடைந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மூடுபனியும் சூறைக் காற்றும் குறைந்ததை அடுத்து விமான போக்குவரத்து மெல்ல சீரடையத் தொடங்கியது.

## நீதிமன்ற அவமதிப்பு; கிலானிக்கு தண்டனை

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி , நீதிமன்ற அவமதிப்பு புரிந்திருக்கிறார் என்று பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

ஆனால், இந்தக் குற்றத்துக்கு, அவருக்குப் பெயரளவில் மட்டுமே சில நொடிகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதனையடுத்து, கிலானி பதவியில் நீடிப்பதில் தற்போதைக்குப் பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை.

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஸர்தாரிக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரிக்க, சுவிற்சர்லாந்து அதிகாரிகளைப் பாகிஸ்தான் பிரதமர் கோர வேண்டும் என்று நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நிறைவேற்ற, கிலானி தவறினார் என்று அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றத் தவறியதால் கிலானி மீது குற்றம் சாட்டப்பட்டது.

# கனேடிய இராணுவத்தினருக்கு எதிர்ப்பு

2014 வரையிலும் கனேடிய இராணுவத்தினர் ஆப்கா னிஸ்தானில் தங்கியிருப்பார்கள் என காலக்கெடு விதிக் கப்பட்டுள்ளமைக்கு என்.டி.பி. கட்சித் தலைவர் தோமஸ் மல்கெயார் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

பிற நாடுகள் அனைத்தும் ஆப்கா னிஸ்தானில் இருந்து படிப்படியாக வெளியேறத் தொடங்கி விட்டதால் கடந்த வாரம் பிரசெல்ஸில் நடைபெற்ற நேட்டோ நாடுகளின் சந்திப்பின் போது கனடா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் இராணுவப் படைகளின் உதவியோடு அமெரிக்கா அங்கேயே நிலைத்திருப்பதற்கான திட்டம் தீட்டியுள்ள விடயம் வெளியாகியுள்ளது எனவும் தோமஸ்மல்கெயார் எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் முடிவுக்கு வந்து விட்டது. அங்குள்ள இராணுவப் படையினருக்கும் பயிற்சி யளித்து முடித்த பின்னரும் கூட ஆப்கானில் தொடர்ந்தும் கனேடியப் படைகள் இருக்க வேண்டிய அவசியம் என்ன எனவும் தோமஸ் மல்கெயார் கேள்வி எழுப்பியுள்ளார்.


## மரண அறிவித்தல்

### DAPHNE INDRANI GANESAN

(Retired Teacher, Jaffna College, Vaddukkoddai & St.Thomas' College, Bandarawela)



*நுவரெலியாவை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட* DAPHNE INDRANI GANESAN *கடந்த 24.04.2012 செவ்வாய்க் கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற* Henry Paul *மற்றும்* Mabel *தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான* T.C.Ganesan-Leelawathy *தம்பதியரின் அன்பு மருமகளும்,* Toni P.Ganesan (Retired Teacher, St.Jhon's College, Jaffna) *இன் அன்பு மனைவியும்,* Sharvini (United Nations World Food Programme) *இன் அன்புத் தாயும்,* Theeban (United Nations Development Programme) *இன் மாமியும்,* Shirani (NuwaraEliya), Ruby (Teacher, St. Thomas' College, Mt.Lavania), Malar (Stassen Export Ltd.), Grace (Haputale), Rosie (Kagolle State Plantation) *ஆகியோரின் அன்புச் சகோதரியும்,* Anton C.Ganesan (U.K), A.Jeyajothy (Teacher, Jaffna College) *ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (28.04.2012) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு வட்டுக்கோட்டை தென் இந்திய திருச்சபை பேராலயத்தில் இடம்பெற்று, பூதவுடல் நல்லடக்கத் துக்காக* Jaffna, St.Jhon's the Baptist *தேவாலய சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

மணியகாரன் வீதி,
வட்டு. தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
**Toni P. Ganesan**
(கணவர்)

C/1080(6-2-10)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செ.அரசகுமார் (பேரன்)
பிறப்பு:- 22.04.1985
இறப்பு:- 25.02.2009

வை.ஞானப்பிரகாசம்
பிறப்பு:- 12.04.1925
இறப்பு:-28.04.2009



ஞா.செல்லம்மா
பிறப்பு:- 23.06.1932
இறப்பு:-28.04.2009



பா.ரதிகரன் (பேரன்)
பிறப்பு:- 06.09.1980
இறப்பு:-10.09.2009

மூன்று ஆண்டுகள் சென்றால் என்ன?
உங்கள் பசுமையான நினைவுகள்-என்றும் எங்களை விட்டு அகலாது

புலோப்பளை கிழக்கு, பளை. மகள், சிறியதாய், இராஜநாயகம், யோகமலர்.

## வீடு வாடகைக்கு

நாச்சிமார் கோயிலுக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் 4 அறைகள், 2 வரவேற்பறைகள், வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0772247747

## தவறிவிட்டது

அரசடி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த சத்தியதாசன் பிக்கொட் என்பவரின் முச்சக்கரவண்டி ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு:-0776913723

## கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கும், ஒட்டு மடத்துக்கும் இடையில் தரமுள்ள சகல [illegible]

தொடர்பு:-021 321 1086

## ஒன்பதாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



*அமரர்*
*கந்தையா ஆறுமுகம்*
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
(வட கோவை இஓப்பைபடிப் பிள்ளையார் அடியவர்)

*திதி: 28.04.2012*

தவப்பேறு
21★12★1918

சிவப்பேறு
08★05★2003

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள்
தெய்வமாகிய எம் தந்தையே!
உம் வழிகாட்டலில் இறை
நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்.

''இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அப்பா''

தங்கள் நிறை ஆசிகளுடன்
அன்பு மனைவி, மக்கள்,
மருகர்கள், பேரர்கள்.

28, கைலாய பிள்ளையார் வீதி,
நல்லூர்.

(17482) (45-6-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலம் உடைந்து இருவர் சாவு

கொழும்பு,ஏப்.28

களுத்துறையில் களுகங்கைக்கு மேலான நடைபாதை பாலமொன்றில் இருந்து விழுந்த மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த இருவரும் நேற்று முன்தினம் பிரத்தியேக வகுப்பு முடிந்து வீடு செல்வதற்காக பாலத்தில் நடந்து சென்றுகொண்டிருக்கும்போது, பலகைகள் கழன்று விழுந்தபோது மாணவர்களும் ஆற்றில் விழுந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடும் மழைக்கு மத்தியிலும் மாணவர்களைத் தேடும் நடவடிக்கைகளில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டனர்.

அலுபோமுல்ல பகுதியைச் சேர்ந்த ஷானி மதுவந்தி எனும் மாணவி சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் உணர்வற்ற நிலையில் மீட்கப்பட்டார்.

நாகொட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளார். அவருடன் சென்ற இளைஞரின் சடலம் இதுவரை மீட்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## அரசியல்வாதிகளின் சொத்துக் குறித்து விசாரணை

கொழும்பு,ஏப்.28

நாட்டின் அரசியல்வாதிகளின் சொத்துக் குவிப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டி, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

குறுகிய காலத்தில் குறித்த அரசியல்வாதிகள் கோடீஸ்வர வர்த்தகர்களாக மாற்றமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காணி, கட்டடம், வாகனங்கள் மற்றும் பல்வேறு சொத்துக்கள் எவ்வாறு கிடைக்கப் பெற்றன என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

அரசியல்வாதிகளுடன் தொடர்புகளைப் பேணுவோர் மற்றும் பாதாள உலகத் தொடர்பு, சட்டவிரோத ஆயுத பயன்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## மேதினக் கூட்டத்தை புறக்கணிக்கத் தீர்மானம்

கொழும்பு,ஏப்.28

இந்த வருட மே தினக் கொண்டாட்டங்களுக்கு சமுகமளிக்கப்போவதில்லை என்று சமுர்த்தி செயற்றிட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அரசு தொடர்ச்சியாக இழுத்தடித்து வருவதன் காரணமாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அகில இலங்கை சமுர்த்தி செயற்றிட்ட அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

எதிர்ப்பு...




தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## முஸ்லிம்கள் அமைதியாக இருக்கவும்!

### முஸ்லிம் தலைவர்கள் கோரிக்கை

கொழும்பு,ஏப்.28

முஸ்லிம் மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தலைமையிலான அரசியல் தலைவர்கள் கூட்டாக இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலாமாவின் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் பௌஸி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியுடன் முஸ்லிம் தலைவர்களும், மதத் தலைவர்களும் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## சிறப்பாகக் கடமையாற்றினால் மக்கள் ஆதரவைப் பெறலாம்

### பொலிஸாருக்கு பாதுகாப்புச் செயலாளர் அறிவுரை

கொழும்பு,ஏப்.28

மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பொலிஸார் உரிய முறையில் கடமையாற்ற வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.



கடமைகளை உரிய முறையில் மேற்கொண்டால் மக்களின் நன்மதிப்பை இலகுவில் பெற்றுக் கொள்ளமுடியும்

கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் இடம்பெற்ற காலத்தில் முப்படையினர் மக்களுடன் நேரடியாக தொடர்புகளைப் பேணி வந்தனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பூரண பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கும், மக்களுக்கும் இடையில் தெளிவான புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். கடமைகளை உரிய முறையில் மேற்கொண்டால் மக்களின் நன்மதிப்பை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார்.

## பள்ளிவாசல் தாக்குதல்: வாழைச்சேனையில் கண்டனத் தீர்மானம்

கொழும்பு,ஏப்.28

தம்புள்ளைப் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வாழைச்சேனை, கோரளைப்பற்று பிரதேசசபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நேற்று முன்தினம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேசசபையின் 48 ஆவது அமர்வு அதன் தலைவர் உதயஜீவதாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே மேற்படி பிரேரணை தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை பௌத்த பிக்குகளால் தம்புள்ளப் பள்ளிவாசல் தாக்கப்பட்டது.

பௌத்த பிக்குகளின் இந்தச் செயலைக் கண் டித்து பல தரப்புகளிலு மிருந்து கடும் அதிருப்தி வெளியிடப்பட்டு வருகின்ற நிலையிலேயே வாழைச்சேனை, கோரளைப் பற்று பிரதேச சபையில் இந்தக் கண்டனப் பிரேரணை நிறைவேற்றப் பட்டுள்ளது. (ச)

## பள்ளிவாசல் மீது தாக்குதல்; உணர்வுகளுக்கே பாதிப்பு

### அமைச்சர் றிசாத் பதியுதின் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.28

தம்புள்ளை ரங்கிரிய ஹைரியா பள்ளிவாசல் மீதான தாக்குதல் அனைத்து முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளையும் பாதித்துள்ளது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதின் தெரிவித்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

இன்று நாட்டின் அபிவிருத்தி பின்னோக்கி தள்ளப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு மத்தியில் தலைகுனிவையும் ஏற்ப டுத்தியுள்ளது. நமது நாட்டுக்கு எதிராக சர்வதேச சமூகம் கட்டவிழ்த்து விடப்போகின்ற நடவடிக்கைகள் என்னவென்று தெரியாமலும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றோம்.

பௌத்த மதம் ஏனைய மதங்களை மதிக்கத் தான் சொல்லியிருக்கின்றதே தவிர, காழ்ப்புணர்வை ஏற்படுத்தச் சொல்லவில்லை.

கடந்த கால அனுப வங்களில் இருந்து பாடங்களை படிப்பதற்காக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரில், ஒரு ஆணைக் குழுவையே நியமித்து, அந்த ஆணைக்குழு பாடங்களை சொல்லித் தந்த பின்னும் பாடம் படிக்காமல் இருக்கலாமா?

மனித உரிமைகள் சபையில் அங்கத்துவம் வகித்த 10 முஸ்லிம் நாடுகளுள் 8 நாடுகள்,எமது நாட்டுக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆனால் ஜெனிவாவில் ஆதரவாக பேசிய முஸ்லிம்களுக்கு எதிராக இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள எதிர்க்கட்சிகளுக்குக் கோரிக்கை

கொழும்பு,ஏப்.28

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அரச தரப்பில் மீண்டும் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு இவ்வாறுநாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளுமாறு மீண்டும் அழைப்பு விடுக்கப்படும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை நாடாளுமன்றத்தெரிவுக்குழுவிலேயே காண முடியும். அதனால் தான் அரசு நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளடன் ஆளும் தரப்பின் பிரதிநிதிகளின் பெயர்களையும் வழங்கியுள்ளது. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இதுவரை நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமது பிரதிநிதிகளை பெயரிடாமல் உள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தமது கட்சிகளின் பிரதிநிதிகளின் பெயர்களை தெரிவுக்குழுவுக்கு வழங்கும் என்று நாங்கள் இதுவரை எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இதுவரை பெயர்கள் வழங்கப்படவில்லை. இந்தநிலையில் அடுத்த நாடாளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டத்தின்போது நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அரச தரப்பில் மீண்டும் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகள் தெரிவுக் குழுவில் பங்கெடுக்கும் என்ற நம்பிக்கையை நாங்கள் இன்னும் இழக்கவில்லை. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதில் பங்கெடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.- என்றார். (ச)

## தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து மேதினத்தில் பங்கேற்க முடியாது

### சஜித் பிரேமதாச கூறுகிறார்

பிரிவினைவாத தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து மே தினக் கூட்டங்களில் பங்கேற்க முடியாது என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்டம் நடத்திய எனது தந்தை நடு வீதியில் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார். எனது தந்தைக்கு நினைவு நிகழ்வுகளை நடத்த எவரிடமும் அனுமதி கோர வேண்டிய அவசியமில்லை.

தந்தையை படுகொலை செய்[illegible] மற்றும் புலம்பெயர் தமிழர்களின் [illegible] மேதினக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.அதனால் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை, மாறாக தேசப்பற்றாளர்களை இணைத்துக்கொண்டு கொழும்பில் எனது தந்தையின் நினைவு நிகழ்வுகள் நடத்தப்படும் .- என்றார்.

மே தினக் கூட்டங்களில் பங்கேற்க முடியாமை தொடர்பில் சஜித் எழுத்து மூலம் கட்சித் தலைமைக்கு அறிவித்து அனுமதி கோரியிருந்தார். சஜித்தின் கோரிக்கை நியாயமானது என்ற காரணத்தினால் மே தினக் கூட்டத்தில் பங்கேற்காது நினைவு நிகழ்வுகளை நடத்த அனுமதியளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு பண்டாரவளையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான மே தினக் கூட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**

சித்திரை 17 ஞாயிற்றுக்கிழமை 29.04.2012
திதி: அட்டமி மு.இ. 10.24 வரை
நட்சத்திரம்: பூசம் சித்தம் பி.ப .01.11 வரை
சுபநேரம்: 08.58- 10.28 வரை
ராகு காலம்: 04.28- 05.58 வரை

**மேடம்:** தேவையற்ற வார்த்தைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். மேலதிகாரிகள் விடயத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது பெருமை தரும். இல்லறத் துணையின் வகையில் செலவுகள் அதிகரிக்கலாம்.

**இடபம்:** கடந்த இரண்டு நாள்களாக நீடித்த சிக்கல்கள் தீர்ந்து நிம்மதி காணும் நாள். சுப முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கடன்கள் தீர்ந்து பெருமை கொள்வீர்கள். தொழில் ரீதியாக அலைச்சல் இருக்கும். மாலையில் திடீர் பயணம் ஏற்படும்.

**மிதுனம்:** மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தெய்வ வேண்டுதல்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இயந்திரப் பணிகள் லாபம் தரும். வீட்டு வசதியை அதிகரிக்க முற்படுவீர்கள். பழைய நட்பு ஒன்றை சந்திப்பதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்:** மன மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கும். சில பணிகளுக்காக பிறரின் உதவிகளை எதிர்பார்ப்பீர்கள். கிடைக்கவும் செய்யும். தொழிலதிபர்கள் அரசு ரீதியான உபத்திரவங்களுக்கு ஆளாகலாம். வாகன வகையில் செலவுகள் ஏற்படும்.

**சிங்கம்:** எதிர்நோக்கி இருக்கும் விவகாரங்கள் உங்களுக்கு அதிகமான கவலையை ஏற்பீர்கள். அலுவலகப் பணிகளில் சக ஊழியரின் செயற்பாடு சங்கடத்தை ஏற்படுத்தும். உறவுகள் வகையில், தகவல்கள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** தேவையற்ற பயம் மற்றும் மனக் குழப்பம் அடிக்கடி ஏற்படும். மன நிலையை ஒரு நிலைப்படுத்தி செயற்படுங்கள். தந்தை நலனில் அக்கறை காட்ட வேண்டும். கடமையைச் செய்வதில் தடுமாற்றங்கள் உண்டாகலாம். கடன் தொல்லைகளை பக்குவமாகப் பேசிச் சமாளிப்பீர்கள்.

**துலாம்:** எதிர்ப்புகள் விலகி ஓடும் நாள். சிலர் தங்களின் உதவி நாடி வரலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான பலன்களைக் காணலாம். தொழில் வகையில் சாதனை ஏற்படுத்தும் நாளாக அமையும். புதிய மனிதர்களின் சந்திப்பு உண்டு.

**விருச்சிகம்:** எதிலும் விருப்பு வெறுப்பற்று செயற்படுவீர்கள். குடும்பத்தில் உறவினர்களின் வருகையும், அவர்களால் செலவுகளும் இருக்கும். அரசு பணியாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ளலாம். தொழிலில் புதிய நெருக்கடியான நிலைமை உருவாகும்.

**தனுசு:** பணப்பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். சில காரியங் களுக்காக எடுத்த முடிவுகளில் சிறு தடுமாற்றம் ஏற்படலாம். உடன் பிறந்தவர்கள் உங்கள் எண்ணத்தைப் புரிந்து கொண்டு செயற்படுவர். வியாபாரத்தில் அதிகப்படியான விற்பனை இருக்கும்.

**மகரம்:** தொழில் விஸ்தரிப்பு முயற்சிகள் பலன் தரும். திடீர் விரயங்களைச் சந்திக்க நேரிடலாம். சிந்தித்து பொறுமையுடன் செயற்பட்டால் சிரமங்களைத் தவிர்க்கலாம். கடன் ஒன்று கவலை தரும். தாயின் உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

**கும்பம்:** சந்தோஷங்கள் தடைப்பட்டு மன அமைதி குறைவு ஏற்படலாம். பிறர் காரியங்களுக்காக அலைவீர்கள். தொழிலில் ஏற்ற, இறக்கமான சூழ்நிலை நிலவும். குடும்ப விவகாரங்களை நிதானத்துடன் கையாளுங்கள். தெய்வ வழிபாடு மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** மனதுக்கு உற்சாகம்தரும் சம்பவங்கள் நடக்கலாம். எதிர்பார்த்த பணவரவு வராதபோதும் காரியங்களைச் செய்துமுடிப்பீர்கள். உறவினர் ஒருவரின் சந்திப்பு, சில தகவல்களைத் தெரிந்துகொள்ள உதவும். மாலையில் பயணம் ஒன்று உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 7 | 1 | 9 | | | | |
| 2 | 1 | | 8 | 6 | | | 9 | |
| | | | | | | | | 4 |
| 7 | | | 9 | 2 | 6 | 5 | 8 | |
| | | 5 | | | | 9 | | |
| | 6 | 9 | 5 | 7 | 8 | | | 3 |
| 9 | | | | | | | | |
| | 5 | | | 8 | 9 | | 7 | 2 |
| | | | | 1 | 5 | 3 | 4 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 4 | 6 | 9 | 8 | 5 | 1 | 3 |
| 1 | 8 | 5 | 2 | 4 | 3 | 7 | 9 | 6 |
| 6 | 9 | 3 | 7 | 5 | 1 | 8 | 4 | 2 |
| 4 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 | 3 | 1 |
| 2 | 3 | 1 | 4 | 6 | 5 | 9 | 7 | 8 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 2 | 6 | 5 | 4 |
| 3 | 6 | 7 | 5 | 8 | 4 | 1 | 2 | 9 |
| 5 | 4 | 9 | 1 | 2 | 6 | 3 | 8 | 7 |
| 8 | 1 | 2 | 9 | 3 | 7 | 4 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நீங்கா நினைவலைகள்

## இருபத்து மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 27-01-1916
உதிர்வு: 24-10-1989


அமரர்

### யோசப் இராயப்பு

எங்கள் அறியாப் பராயமதில் உங்களை இழந்தோம் அப்பப்பா
உங்கள் தந்தையின் பெயரை எங்கள் தந்தைக்கு வைத்து
உங்கள் குலப் பெருமை காத்து நின்றீர்களே
உங்கள் கல்லறையை அடிக்கடி தரிசித்த உங்கள் மகன்
உங்கள் கல்லறையில் உங்களுடன் சங்கமித்து விட்டார்.
எங்கள் குலதெய்வமே அன்பு அப்பப்பாவே
எங்கள் நல்வாழ்வுக்காக சொர்க்கத்தில் வேண்டுதல் செய்திடுவீர்

**என்றும் உங்களை மறவா
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

## நீங்கா நினைவில் ஐந்தாண்டு



மலர்வு: 23-03-1955
உதிர்வு: 28-04-2007

அமரர்

### இராயப்பு யோசப் (யோகேந்திரன்)

நீங்காத நினைவுகளை எம் இதயத்தில் நிலைக்கவிட்டு
நீங்கள் மீளாத்துயில் கொண்டு ஐந்தாண்டானதுவோ.
பொங்கிடும் கடலில் பொருள் தேடிச் சென்றவேளை
கடலன்னையின் மடியில் உமது உடல் சாய்ந்ததோ
மங்கா மணிவிளக்கே மாணிக்கமே எம் தந்தையே
பங்கமில்லா வாழ்வு வாழ்ந்த பண்பாளன் நீரல்லவோ
உங்கள் பிரிவைத் தாங்க முடியாமல் உருக்குலைந்து
உங்கள் நாலாண்டு நிறைவு நெருங்கிய வேளை
உங்கள் அன்பு மாமியும் உம்மைத் தேடி வந்தாரோ
தங்க மனம் கொண்ட தானத் தலைவரே-உங்கள்
செங்கமல பாதங்களில் எங்கள் கண்ணீர்க் காணிக்கை

**என்றும் உங்கள் நினைவுகளுடன்
[illegible]**

## நெஞ்சம் நெகிழ்த்திய மூன்றாண்டு



### துரைமணி யோகன்

மலர்வு: 25-11-1956 உதிர்வு: 14-05-2009

### யோகன் சுசிலா

மலர்வு: 14-12-1957 உதிர்வு: 12-05-2009

### யோகன் வினி


மலர்வு: 21-04-1997 உதிர்வு: 14-05-2009

பட்டமரமாய் நாமும் பாரத்தில் பரிதவித்து நின்ற வேளை
கேட்டோமே இன்னோர் பேரவலச் செய்தி-யோகன் அண்ணை
கூட்டாக நீங்கள் மூவரும் மறைந்த செய்தி
நட்புக்கோர் இலக்கணமாய் வாழ்ந்த நீங்கள் - உங்கள்
நண்பன் போன வழி நாடிச் சென்றீரோ? -உங்கள்
நான்கு மக்களும் நெஞ்சம் கலங்கி நிற்க - உங்கள்
அன்பு மனைவி, மகனுடன், நண்பனைத் தேடிச் சென்றீரோ.
பக்கத்தில் நீங்கள் இருந்து பாசத்தோடு பழகியது போல்
சொர்க்கத்தில் சேர்ந்து சொந்தங் கொண்டாடச் சென்றீரோ?

**கனத்த நெஞ்சுடன்
உங்கள் அன்பு நண்பன் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை பிள்ளையார் ஆலய முகப்பு இடிப்பு



திருகோணமலை,ஏப்.28

திருகோணமலை பொது வைத்தியசாலை வளாகத்திலுள்ள 60 வருடம் பழைமை வாய்ந்த பிள்ளையார் கோயிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முகப்புப் பகுதி சட்டத்துக்கு முரணான வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளதாக வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் ஈ.ஜி.ஞானகுணாளன் தெரிவித்தார்.

குறித்த பிள்ளையார் கோயிலை முழுமையாக அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவிக்கவில்லை என்று அவர் கூறினார்.

இந்த இடத்திலிருந்து கோயில் அகற்றப்பட வேண்டும் என்று வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# மட்டு. விவசாயிகளின் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் போராட்டம்

### ஒன்றியத்தின் செயலாளர் எச்சரிக்கை

எருவில்,ஏப்.28

மட்டக்களப்பு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காது விட்டால் அகிம்சை வழியில் போராட்டங்களை நடத்த வேண்டி ஏற்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.திருநாவுக்கரசு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளினால் மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசு தவறுமாயின் நாடு தழுவிய ரீதியில் விவசாயிகளுடன் இணைந்து போராட்டத்தை நடத்தவேண்டியேற்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம், நெல் சந்தைப்படுத்தும் வசதி, விவசாய திணைக்கள வசதி, விதை நெல் வழங்கல் போன்ற ஒழுங்குகளைச் செய்து கொடுக்காமை போன்றபல்வேறுபிரச்சினைகள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 52 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. இவற்றில் 52,000 ஏக்கர் விவசாய நிலத்துக்கு மாத்திரமே நீர்ப்பாசனம் கிடைக்கின்றது. ஏனைய விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்காது அவை தூர்ந்து போகும் நிலைமை உருவாகியுள்ளது.

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்களைத் தீர்த்து வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதுள்ள நீர்ப்பாசன குளங்களின் மூலம் அரைவாசி நிலங்களுக்கு கூட நீர் வழங்க முடியாதுள்ளது. இந்தநிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நவகிரி, உன்னிச்சை, உறுகாமம், வாகனேரி போன்ற குளங்களை விசாலப்படுத்தி நீர்ப்பாசனத்துக்கு உதவி அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரசு விவசாய அபிவிருத்திக்காக பணத்தைச் செலவு செய்கின்ற போதிலும், அதன் நன்மையை மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தற்போதைய எரிபொருள் விலையேற்றம் விவசாயிகளையும் பாதித்துள்ளது. மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படுகின்றது. ஆனால் விசாயிகளுக்கு உழவு இயந்திரம் போன்றவற்றுக்கு மானியம் வழங்கப்படவில்லை.

கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் எதிர்காலத்தில் பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டிவரும். இந்தச் சவால்களை அரசு மற்றும் விவசாயத் திணைக்களம் தீர்த்து வைக்க வேண்டும் - என்றார். (ச-31)

## விபத்தில் இருவர் பரிதாபச் சாவு

நுவரெலியா,ஏப்.28

புசள்ளாவ, நுவரெலியா பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு போட்டியில் வந்த லொறியுடன் ஓட்டோ மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

ஓட்டோ சாரதி மற்றும் அதில் பயணித்த ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் லொறிச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

## பல்கலை அபிவிருத்திக்கு ரூ.80 மில்லியன் ஒதுக்கீடு

### கிழக்குத் துணைவேந்தர் தகவல்

எருவில்,ஏப்.28

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு 80 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கிட்ணர் கோபிந்தராஜா தெரிவித்தார்.

இந்த மீள் கட்டுமான வேலைகளில் பிரதான மண்டபத்தை நவீனமுறையில் புனரமைத்தல், மாணவர்களின் தேவைகள் சார் அபிவிருத்திகள், விடுதிகளின் திருத்தங்கள், செனற் கட்டடத்தின் திருத்தங்கள், சுற்று மதில்களை நவீன முறையில் அமைத்தல், புதிய நுழைவாயில் அமைத்தல் என்பன உள்ளடங்குகின்றன என்று அவர் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு நீண்டகாலமாக யாரும் நியமிக்கப்படாதிருந்த நிலையில் அண்மையில் புதிய துணைவேந்தராக இவர் நியமனம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## கையளிப்பு...



காரைதீவு பிரதேச சபையின் பாவனைக்காக யுனொப்ஸ் நிறுவனத்தினால் 5 மில்லியன் ரூபா பெறுமதியான பாரம் தூக்கும் லோடர் இயந்திரம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா இராசையாவிடம் கையளிக்கப்பட்டது.

## மின்னல் தாக்கி ஒருவர் சாவு

மட்டக்களப்பு,ஏப்.28

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மியான் கல்குளத்தில் மின்னல் தாக்தி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சித்தாண்டியைச் சேர்ந்த மா.சுதாகரன் (வயது 33) என்பவரே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் வயல் வேலைகளை முடித்துவிட்டு வீடு திரும்பும் வழியிலேயே மின்னல் தாக்கத்திற்குள் ளாகியுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## வலையிறவுப் பாலம் 4 நாள்கள் மூடப்படும்

எருவில்,ஏப்.28

மட்டக்களப்பு நகரையும் வவுணதீவு பிரதேசத்தையும் இணைக்கும் வவுணதீவு, வலையிறவு பிரதான வீதியில் உள்ள வலையிறவுப் பாலம் திருத்த வேலை காரணமாக எதிர்வரும் 4ஆம் திகதி இரவு 10 மணி தொடக்கம் எட்டாம் திகதி வரை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலையிறவு முதல் ஆயித்தியமலை வரை வீதி புனரமைப்பு வேலை முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் வலையிறவு சின்னபாலமும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்காக தற்காலிக பாலத்தை அமைப்பதற்காகவே வீதி மூடப்படவுள்ளது.

இந்த நான்கு நாள்களிலும் பொதுமக்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# இந்து ஆலயங்களை இடித்து விகாரைகள் தற்போது பள்ளிவாசல்களுக்கும் அதே கதி

### சாடுகிறார் கிழக்கு எம்.பியான யோகேஸ்வரன்

எருவில்,ஏப்.28

கிழக்கு மாகாணங்களில் பல இடங்களிலும் போரின் பின் இந்து ஆலயங்களை இடித்து, தமது பௌத்த விகாரைகளை ஸ்தாபித்த ஹெல உறுமய கட்சியும், பௌத்த பிக்குகளும், அடுத்தபடியாக இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களில் தமது மஹிந்த சிந்தனைத் திட்டத்தை முன்வைத்துள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் குஞ்சிதபாதமலை பாலமுருகன் ஆலயம், கல்லடி நீலியம்மன் ஆலயம், கன்னியா வெந்நீர்ஊற்று விநாயகர் ஆலயம், சிவன் ஆலயம் உட்பட பல இந்து ஆலயங்களை இடித்து அங்கு பௌத்த விகாரைகளை அமைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் குடும்பிமலை சந்தி, புனானை உட்பட சில இடங்களில் உள்ள இந்து ஆலயங்களை அகற்றி தமது பௌத்த விகாரைகளை ஸ்தாபித்துடன் புதிதாக 23 பௌத்த விகாரைகளை ஏற்படுத்தியுமுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் சங்கமன்கண்டி விநாயகர் ஆலயத்தை அகற்றி பௌத்த விகாரையை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்துக்களின் பூர்வீக - பாரம்பரிய இடங்களின் அடையாளங்களைத் தொல்பொருள் பகுதியாகப் பிரகடனப்படுத்தி அதனை பௌத்தர்களின் வாழ்விடங்களாகவும், வணக்கஸ்தல பகுதியாகவும் மாற்ற முற்படுகின்றனர்.

தம்புள்ளயில் இஸ்லாமிய மக்களின் நீண்டகாலமாக வழிபாட்டு இடமாக இருந்த பள்ளிவாசலை சுயநலம் கருதி பௌத்த மதகுருமார்களும், பௌத்த தீவிரவாதிகளும் அகற்ற முற்படுவதை சிறுபான்மை இனம் என்ற வகையில் நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

மஹிந்த சிந்தனையில் சிறுபான்மை இன மக்களின் மதச் சுதந்திரத்தைப் பறித்து, அவர்களது மதவழிபாட்டுத் தலங்களை இடிப்பதையும், பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை ஸ்தாபிப்பதையும் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது - என்றார். (ச-31)

### தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம்:

## காத்தான்குடி நகர சபையில் கண்டனப் பிரேரணை நிராகரிப்பு

மட்டக்களப்பு,ஏப்.28

தம்புள்ளை பள்ளிவாசல் உடைப்புக்கு எதிராக காத்தான்குடி நகர சபையில் கொண்டுவரப்பட்ட கண்டனப் பிரேரணை சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் எம். எம். அப்துர் றஹ்மான் தெரிவித்தார்.

காத்தான்குடி நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவிசாளர் எஸ்.எச். அஷ்பர் தலைமையில் நடைபெற்றது.

தம்புள்ள பள்ளிவாசல் உடைப்புச் சம்பவத்தை காத்தான்குடி நகரசபை கண்டித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் றஹ்மான் சபையில் சமர்ப்பித்தார்.

குறித்த பிரேரணை சபையின் தவிசாளர் உட்பட ஆளும் தரப்பு உறுப்பினர்களினால் நிராகரிக்கப்பட்டது.

இதுதொடர்பாக காத்தான்குடி நகரசபை தவிசாளர் எஸ்.எச்.அஷ்பர் கூறியதாவது:-

இந்தப் பிரேரணை ஏழு நாள்களுக்கு முதல் சமர்ப்பித்திருக்கவேண்டும். ஆனால் குறித்த பிரேரணை நேற்று முன்தினம் தான் சபைக்குக் கொண்டு வரப்பட்டது.

பள்ளிவாசல் உடைப்பு காத்தான்குடி நகர சபையின் ஆளுமைக்குட்பட்ட விடயமாக இல்லாமையினாலும் பிரேரணை நிராகரிக்கப்பட்டது- என்றார். காத்தான்குடி நகரசபையின் ஆளும் கட்சிஅமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கி ரஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞரின் தாடை உடைந்தது

தென்மராட்சி, ஏப்.28

இரும்புக் கம்பி வளைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் இரும்புக் குழாய் கை தவறி கன்னத்தில் தாக்கியதில் இளைஞரின் வலது பக்க தாடை உடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பளையில் இடம்பெற்றது.

பளை தனியார் நிறுவனத் தில் பணியாற்றும் மதிவண்ணன் (வயது-26) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த-9)

## மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளலாம்

நவாலி, ஏப்.28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் மூக்குக் கண்ணாடிக்கு விண்ணப்பம் செய்தோரை மேற்படி செயலக சமூக சேவைப் பகுதிக்கு வருகை தந்து பெற்றுச் செல்லுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் நல்லையா புரட்சிதாசன் அறிவித்துள்ளார்.

ஆர்.சின்னம்மா (சண்டிலிப்பாய் வடக்கு), எஸ். கனகம்மா (சுதுமலை வடக்கு) கே.நாகேஸ்வரி (பிரான்பற்று) ஆகியோர் செயலகத்துக்கு சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ)

# அகதிகள் சிறப்பு முகாமை மூடக்கோரி சென்னையில் வியாழன் ஆர்ப்பாட்டம்

## உண்ணா விரதமும் தொடர்கிறது




செங்கல்பட்டு, பூந்தமல்லி அகதிகள் சிறப்பு முகாமை மூடக்கோரி சென்னை நினைவக அரங்கம் அருகில் சட்டத்தரணி புகழேந்தி தலைமையில் நேற்றுமுன் தினம் மாலை 6 மணி யளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பழ.நெடுமாறன், மறுமலர்ச்சி தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செய்தித் தொடர்பாளர் வன்னி அரசு, பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தபசிகுமரன், த.மு.மு.க. மாணவரணியின் மாநிலத் தலைவர் ஜெய்னுலாப்தீன், தமிழக இளைஞர் எழுச்சிப் பாசறையின் அருண் சோரி, மே 17 இயக்கத்தின் திருமுருகன், தமிழ் தேசிய பொது வுடைமைக் கட்சித் தலை வர் பெ.மணியரசன், உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஜெயக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை அமைப்புகளும், தமிழ் தேசிய அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் ஆதரவாளர்களுடன் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாமில் உள்ள 5 இலங்கைத் தமிழர்களையும், செங்கல்பட்டு முகாமில் உள்ள 32 இலங்கைத் தமிழர்களையும், ஏனைய அகதிகள் முகாம்களில் வாழும் அவர்களின் உறவினர்களிடம் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதேகோரிக்கையை வலியுறுத்தி செங்கல்பட்டு முகாமில் உள்ள 17 இலங்கைத் தமிழர்கள் கடந்த 11 நாள்களாக உண்ணா விரதப் போராட்டத்திலும் ஈடு பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மயக்கமுற்ற உண்ணாவிரதிகள் வைத்தியசாலையில் அனுமதி

செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் 11 ஆவது நாளாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை அகதிகளில் 5 பேர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈழத்தமிழர்கள் 32 பேர் செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 பேர் மட்டும் கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை சுதர்சன், சேகர், நாகராசா ஆகியோர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு செங்கல்பட்டு அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் உடல்நலக் குறைவால் மேலும் சந்திரகுமார், சதீஷ், சதீஷ்குமார், சிவகுமார், பாரபரன் ஆகிய 5 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (வ)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.28

வடமராட்சிக் கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள பருத்தித்துறை கோட்டத்துக்குப் பொறுப்பான கடமை நிறைவேற்றும் கோட்டக் கல்வி அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (வ-4)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.29

வடமராட்சி கல்வி வலயத்தில் விக்னேஸ்வரக் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி. கல்லூரி ஆகிய பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.(வ-14)

# குவைத்திலுள்ள இலங்கை இளைஞர்கள் பலவந்தமாக சவூதிப் பண்ணைகளுக்கு

குவைத் நாட்டில் தொழில் புரியும் இலங்கைத் தொழிலாளர்கள் சட்டவிரோதமான முறையில் சவூதி அரேபியாவில் உள்ள விவசாயப் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவது குறித்த தகவல்கள் கிடைத்துள்ளதாக குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரி வித்துள்ளது.

காணாமற்போனதாக கூறப்பட்ட இலங்கையர் ஒருவர் சவூதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக இலங்கைத் தூதுவர் எச்.எம்.விஜேரத்ன அரபு ஊடகங்களில் தெரிவித்தார். குவைத்தில் வீட்டு உதவியாளராகப் பணியாற்றி வந்த நிஹால் நிக்கவரெட்டிய என்பவரே இவ்வாறு சவூதியில் கண்டுபிடிக்கப்பட்டார். இந்த நபர் காணாமற் போனதாக அவரது குடும்ப பத்தினரிடம் இருந்து கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே அந்த நபர் தேடப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டார். குவைத் சென்ற இந்த நபர் 20 நாள்கள் மாத்திரமே அங்கு சேவையாற்றியுள்ளதுடன் அவரது அனுசரணையாளர் சவூதியில் உள்ள விவசாயப் பண்ணை ஒன்றுக்கு அனுப்பி வைத்துள் ளதாகத் தெரியவந்துள்ளது. (வ)

## இலக்கியப் போட்டிக்கான கால எல்லை நீடிப்பு

தென்மராட்சி, ஏப்.28

தென்மராட்சி பிரதேச கலாசாரப் பிரிவால் நடத்தப்படும் இந்த வருடத்துக்குரிய தேசிய கலை இலக்கியப்போட்டிக்கான ஆக்கங்கள் சமர்ப்பிக்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்கள் ஆக்கங்கள் போன்றவை சமர்ப்பிப்பதற்கு இறுதித்தினம் மே 2ஆம் திகதி என்று நிர்ணயிக்கப்பட்டது.

இந்தப் பகுதி மாணவர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் ஆகியோரின் வேண்டு கோளுக்கிணங்க முடிவு திகதி மே 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த திகதிக்குள் விண்ணப்பங்கள், ஆக்கங்கள், படைப்புக்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டுள்ளது. (ம-9)


## மூன்றாம் ஆண்டு நினைவில்



குமாரசாமி நந்தகோபன்

(இந்துக்கல்லூரி கணித பிரிவு மாணவன்)

திதி: ஸப்தமி

மலர்வு 07★02★1989

உதிர்வு 30★04★2009

கோடிட்ட சேட்டிட்டு குலையாத ஜீன்சிட்டு
குவலயத்தில் உலவி நீயும் வந்தாய்
பாடுற்ற பாடெல்லாம் பறந்துமே ஓடிட
பாரிலே நீயும் வாழ்ந்தாய்
நாடுற்ற தேடலை திடமாய்ப் பெற்று
தெளிவான வாழ்வினையே தானும் வென்றாய்
நாடற்று வீடற்று கூடற்று காடற்ற
செல்வமே கண்முன்னே ஓடிவாராய்

பரந்தன் கிளிநொச்சி.
026 320 4310

அப்பா, அம்மா, அக்காமார், அண்ணா, அத்தான், தம்பி (சிந்துஜன்)

(17469)

## வீடு வாடகைக்கு

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் "அருள் நிவாசா" வீட்டின் ஒரு அறை, மண்டபம், சமையலறை வாடகைக்கு விடப்படும். அரச உத்தியோகத்தர், சிறுகுடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 2299128, 072 2582060

## தென்மராட்சி பிரதேச மக்களுக்கு....

தங்களின் இல்லங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும், அலுவலகங்களில் நடை பெறும் விருந்துபசார நிகழ்வுகளுக்கும் தரமான காலை, மதிய, இரவு உணவு வகைகளும் றோல்ஸ், வடை, பற்றீஸ் போன்ற சிற்றுண்டி வகைகளும் சுத்தமாகவும் சுவையாகவும், சுகாதாரமான முறையில் தயாரித்து வழங்கப்படும்.

தொகைக்கு ஏற்ப உங்கள் தேவைகள் உங்கள் இல்லத்திற்கே விநியோகிக்கப்படும். நாடுங்கள்....

ராஜா உணவு உற்பத்தி நிலையம்
கல்வயல், சாவகச்சேரி, T.P : 077 7683030

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 23 |
| 07 | 04 |
| 1936 | 2007 |

வல்லிபுரம் சிவபாக்கியநாதன்

பிரிவின் பின் நினைவின் ஐந்து ஆண்டுகள்
உங்கள் முன் நினைவின் மீள்பதிவின் ஒரு நாள்

குடும்பத்தினர்
வைத்தியசாலை அருகில்,
கோப்பாய்.

## நீங்கா நினைவலைகள்

இரண்டாம் ஆண்டு — மலர்வு 1939.06.05 — உதிர்வு 2010.04.20



அமரர் சின்னத்துரை சற்குணம்

ஐந்தாம் ஆண்டு — மலர்வு 1971.12.01 — உதிர்வு 2007.07.10



அமரர் சற்குணம் றேணுகா

திதி : ஸப்தமி 28.04.2012

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்திடினும் உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதில் நிறைந்திருக்கும். காலங்கள் விடைபெறலாம் ஆனாலும் கண்முன்னே நிழலாடும் உங்கள் நினைவுகள் ஒரு போதும் எங்களை விட்டகலா
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

V.T.S லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், கச்சேரிப் பகுதிக்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயத்துக்கும் அண்மித்த பகுதியில் Attached Bath Room முடன் கூடிய சுமாரான வசதிகளுடன் வீடு வாடகைக்கு உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
077 6672881, 077 299 6046

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், அரசாங்கத்தில் நடுத்தர முகாமைத்துவ தரத்தில் பணிபுரியும் பட்டதாரி, திருவாதிரை நட்சத்திரம் 34 வயது மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். செவ்வாய் தோசம் இல்லை.

பொ.பா உதயன்,
வி.இல. 4350,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

கண்டுக்குளி, விதானையார் வீதியில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S. நாதன், இல. 16/3,
விதானையார் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே:0776146434.

## காணி விற்பனைக்கு

K.K.S. வீதி , நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில்2½பரப்புக்காணிகிணற்றுப் பங்குடன்விற்பனைக் குண்டு
தொடர்பு : 077 5492672

## விற்பனைக்கு/வாடகைக்கு

பரந்தன் சந்தியில் புடைவைக்கடைக்கு உரிய அலுமினிய பிற்றிங் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. அல்லது புடைவைக் கடை நடத்த விரும்பினால் ஒழுங்கு செய்து தர முடியும் T.P : 077 1902284


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

குடிவரவுச் சட்டங்களில் புதிய மாற்றங்கள்:

# கனடா செல்லும் அகதிகளின் எதிர்காலம் கேள்விக்குறியில்

கனேடிய அரசால் குடிவரவுச் சட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய மாற்றங்களால் கனடாவுக்குள் செல்லும் அகதிகள் பலர் சிறையில் தமது வாழ்நாளைக் கழிக்க வேண்டிய நிலைமை உண்டாகியுள்ளது.

அந்த நாட்டு அரசின் புதிய சி-31 சட்டமூலத்தின் படி இனிவரும் காலங்களில் ஆள்கடத்தல் மூலம் கனடாவுக்குள் வந்தவர்களாக சந்தேகிக்கப்படும் அகதி களின் கோரிக்கைகள் எவையும் பரிசீலிக்கப்படமாட்டா.

உடனடியாக அவர்களை கனேடிய சிறைகளில் அடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கனேடிய குடிவரவு அமைச்சர் ஜோசன் கென்னி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆள்கடத்தல் மூலம் பெரும் குழுக்களாக நாட்டுக்குள் வருபவர்களால் பொதுப் பாதுகாப்புக்கு இடையூறு ஏற்படுவதால் அவர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் புதிய சட்ட மூலத்தின் படி எதிர்காலத்தில் அகதிகள் குழுக்களாக கனடா வந்தால் அவர்களை விசாரிக்கும் அதிகாரம் பொதுப் பாதுகாப்பு அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆள் கடத்தல் மூலமாக நாட்டிற்குள் வந்ததாகச் சந்தேகிக்கப் படுவோருக்கும் இது பொருந்தும். இதேவேளை தங்கள் சொந்த முயற்சியில் தனியாக கனடா வரும் அகதி கள் வேறு விதமாகவே பிரித்துப் பார்க்கப்படுவர்- என்றார் அவர்.

அகதிகளாக நாட்டுக் குள் வருபவர்களை ஏற் றுக்கொள்ளும் ஒரு சிறந்த நாடு கனடா என்று உலகில் பெரும் பான்மையானவர்களால் புகழப் படும் நிலையில் தற் போதைய அரசின் சட்ட திருத்தங்கள் மூலம் அதனை மாற்ற முற்படுவது மனித உரிமைகளை மதிக்காமல் செயற்படுவது போன்று உள்ளதாக எதிர்க் கட்சியின ரும், பல்துறைசார் நிபுணர்களும் விமர்சித்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக கனடா முழுவதிலும் உள்ள பல் வேறு அமைப்புக்களும் அகதிகளாக வருவோரிடம் அரசு நடந்து கொள்ளும்விதம் சட்ட விரோதமானது எனக் குற்றஞ்சாட்டியுள்ளதுடன் தங்களின் கடுமையான எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## புத்தக தினத்தையொட்டி வரணி நூலகத்தால் போட்டிகள்

தென்மராட்சி, ஏப்.28

உலக புத்தக தினத்தை யொட்டி வரணி பொது நூலகத்தினர் மாணவர்கள், வாசகர்கள் இடையே பொது அறிவுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இன்று சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு மாணவர்களுக்கும் வாச கர்களுக்கும் நூலகர் இ .இரவீந்திரன் அறிவித்துள்ளார். (வ-9)

## வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கு சான்றிதழ்

தென்மராட்சி, ஏப்.28

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கடந்த வருடம் நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகள் மற்றும் கிராம மட்டங்களுக்கு இடையிலான தனி நபர்களுக்கும் நேற்று சான்றிதழ்கள் வழக்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா ஆகியோரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் கைதடி நவீல்ட் பாடசாலை முதலிடத்தையும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவை முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றன. (ம-9)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஏப்.28

யாழ். கைலாசபிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 4 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-135)

* * *

வடமராட்சி, ஏப்.28

துன்னாலை மிகு சிதம்பர விநாயகர் கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ-8)

* * *

துன்னாலை கலிகைச் சந்தி முருகன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ-8)

## இந்தியாவில் இருந்து முருகன் சிலை

யாழ்ப்பாணம், ஏப்.28

பிரசித்தி பெற்ற நவாலி கதிர்காம முருகன் ஆலயத்துக்கு இந்தியாவில் இருந்து முருகன் சிலை கொண்டுவரப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் இருந்து பெறுவதற்கு ஆலய தலைவர், செயலாளர் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நவாலி முருகன் ஆலயத்தில் நீண்ட காலமாக குருவாக இருந்து சமாதியடைந்த சுவாமியின் ஞாபகார்த்தமாகவே இந்தச் சிலை இந்தியாவில் இருந்து கொண்டுவரப்படவுள்ளது. (த)


## நான்காவது சிராத்த தினம்

வைத்திய கலாநிதி லயன்

செல்வி நவமலர் கனகரத்தினம்



எமது முன்னாள் பிராந்தியத்
தலைவரும், யாழ்.போதனா
வைத்தியசாலை
பணிப்பாளருமாகிய
வைத்திய கலாநிதி லயன்

**செல்வி நவமலர் கனகரத்தினம்**

அவர்களின் நான்காவது சிராத்த தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள நிகழ்வுகள்.

**இன்று (28.04.2012) சனிக்கிழமை**

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய சிறுவர்களுக்கு மதிய உணவு வழாங்கல்

**இன்று (28.04.2012) சனிக்கிழமை**

காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் புற்றுநோயாளர்களுக்கு சத்துணவு வழாங்கல்

இந் நிகழ்வினை லயன்/ லயன் சீமாட்டி கணேசமூர்த்தி வத்சலனின் அனுசரணையுடன் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்த உள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

**லயன்/ லயன்சீமாட்டி,**
**வத்சலன், சுதுமலை மேற்கு, மானிப்பாய்.**

(17006-7)



## மரண அறிவித்தல்

திருமதி **பரமேஸ்வரி பாலசிங்கம்**

(நீர்வேலி தெற்கு)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, பொல்காவல, நாவலப்பிட்டி, பிறம்டன்-கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் 18.04.2012 புதன்கிழமை பிற்பகல் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லப்பா- ஆச்சிமுத்து தம்பதியரின் அருமை மகளும், காலஞ் சென்றவர்களான சிவ குரு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இளைப் பாறிய தபால் அதிபர் சிவகுரு பால சிங்கத்தின் அன்பு மனைவி யும், பிள்ளையம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான தணிகா சலம் (அதிபர்), தங்கம்மா, இராசையா (தபால் அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கரத்தினம், தெய்வானைப்பிள்ளை, கதிரவேலு, காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லத்துரை (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும், திருமதி ஜெய்கௌரி பாலகுமார் (இலங்கை), ஜெயகாந்தன் (கனடா), ஜெயகுமார் (லண்டன்), துஷ்யந்தன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயும், பாலகுமார் (சவுதி அரேபியா), சோபனா (கனடா), யாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சுபஸ்திகன், ததுர்ஷன், நிரோஷ், காயத்ரி, கிர்த்திகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 737, Dundas St. East Mississauga (Cawthra / Dundas) இல் அமைந்துள்ள St. John's Dixie Cemetery & Crematorium இல் இன்று (28-04-2012) சனிக்கிழமை மாலை 5.00 - 9.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (29-04-2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் பார்வைக்கு வைக்கப்பட்டு அதைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மத்தி,**
**நீர்வேலி.**

(17026) (6,9,10)

**தகவல்:**
பாலசிங்கம் (கணவர்) 905-866-6187
ஜெயகாந்தன் (மகன்) 647-822-3019
ஜெயகௌரி (மகள்) 011-94-112524876
ஜெயகுமார் (மகன்) 011-44-7825295532
துஷ்யந்தன் (மகன்) 011-94-777437548


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.28

நீர்வேலி கந்தசுவாமி கோயில் திருவிழாவில் மகா பாரதமும் மானிட வாழ்வும் என்ற தலைப்பில் பொன் சுகந்தன் எதிர்வரும் சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மாலை 6 மணிக்கு தொடர் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (எ)

# பிரிவுபசார நிகழ்வு

தென்மராட்சி, ஏப்.28

சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகங்களில் கடமையாற்றி இளைப்பாறியும் இடமாற்றம் பெற்றும் சென்ற 9 உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு நேற்றுமுன்தினம் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

பிரதேச சபைத் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கத்தினால் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

பிரதேச சபை தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதேச சபைச் செயலாளர் செல்வி கு. தர்சினி, பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி கௌ. விக்னகுமார் உட்படப் பலர் உரையாற்றினர். (த-9)


## பதவி வெற்றிடம்
## லிகிதரும் கணினி தட்டெழுத்தாளரும்

சுன்னாகத்தில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளராகவும், லிகிதராகவும் பணிபுரியக்கூடியவர் தேவை. ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் தேர்ச்சியும், சுயமாக Type செய்வதுடன் ஒப்படைக்கப்படும் வேலைகளை ஒருங்கிணைத்து செய்பவராகவும் இருத்தல் அவசியம்.

**தகைமை:** G.C.E (O/L), G.C.E (A/L), Ms WORD

தொடர்பு: 021 321 5081, 077 544 0293


## கண்ணீர் அஞ்சலி



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் திரு. ஜெ.நோ.ஜெயச்சந்திரன் அவர்களின் மைத்துனி

**Dr. அன்சலின் றோகினி முத்ததம்பி**

(மாளிகாவத்தை மருத்துவமனை மாவட்ட வைத்திய அதிகாரி)

25.04.2012 புதன்கிழமை இறைபதம் அடைந்த செய்தியினை கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ். மாவட்ட ஊழியர்கள்


## விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய அல்சேசன் ஜேர்மன் செப்பேட், கொக்கஸ் ஸ்பேனியன், பொம்மேரியன் நாய்க்குட்டிகளும், சணல் ஆடு என்பன விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.

தொடர்பு :078 356 8079

இல.06, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி.

## பணிப்பெண்கள் தேவை

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உள்ள வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 2 பணிப்பெண்கள் தேவை. 52 வயதுக்கு உட்பட்டவர்கள்.

சம்பளம்: 12,500 ரூபா

முழு விவரம், விலாசத்துடன் உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் அனுப்பி வைக்கவும்.

மே/ பா. உதயன், விளம்பர இல. 4351, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## OBTAINING LEGAL CONSULTATION SERVICES

Applications are invited by me up to 11.05.2012 from qualified Attorney – at - Laws with not less than three years experience in Court work, Legal work relating to corporations / companies and drafting legal documents.

The following tasks are expected to be Carried out under this:

1. Drafting legal documents
2. Execution of bond & Agreement
3. Legal advice regarding cases filed against the University
4. Documentation of Legal Matters

Those who are willing to apply can send their Bio-Data with two recent testimonials from non-related referees for registering with University. Rates of pay ments and other modalities are negotiable .Further details on terms of references etc., will be notified later.

**REGISTRAR**
**University of Jaffna.**
**23.04.2012.**

(C/1303) (2-7-9)


12th Anniversary SPECIAL OFFER
Discount for 25 Courses

ESOFT The Leader in Professional ICT Education

25% DISCOUNT
Till 10th of May

| | | | |
|---|---|---|---|
| Diploma in Information Technology | Diploma in Web Engineering | Diploma in Software Engineering | Diploma in Business Management |
| Diploma in English | Diploma in Hardware & Networking | Diploma in Graphic Designing | Diploma in Computerized Accounting |
| AutoCAD | FIT-UCSC | CWD | E-kids Computer Course |

ESOFT Computer Studies (Pvt) Ltd.
web: www.esoft.lk Hotline: 077 309 9 308

OFFERS AT

| Jaffna | Nelliady | Kilinochchi |
|---|---|---|
| 17/1, Brown Rd | 151, Jaffna Rd | No.1 Kanagapuram Rd |
| Tel 021 2224142 | 021 2264940 | 077 3099308 |


## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவினிலே

மண்ணில்
01★ 01★ 1942



விண்ணில்
06★ 05★ 2010

**அமரர் கலாபூசணம் தம்பு சற்குருநாதன்**

ஆண்டு இரண்டு ஆனதப்பா ஆறவில்லை எம் இதயம்
உறவுப் பாலம் அமைத்து எம் உறவுக்கு இசை கொடுத்து
ஆலம் விருட்சமாய் இருந்த வயலின் இசைக் கானாமிர்தமே
உங்களை மறந்தால் அன்றோ நினைப்பதற்கு
உங்கள் நினைவிழந்தாலன்றோ மறப்பதற்கு
என்றும் உங்கள் இசையோடு நனைந்த
இசைக்குடும்பத்தினர்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு, சுன்னாகம். (17492) (2-6-9) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
19★ 07★ 1955

மறைவு
29★ 03★ 2012

**அமரர் வசந்தமலர் கந்தசாமி**

கடந்த (29.03.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பக் குலவிளக்கு அமரர் வசந்தமலர் கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.04.2012) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

V.H.லேன்,
இருபாலை, கோப்பாய். (17493) (2-7-9) - குடும்பத்தினர்

## தவறிவிட்டது

பொன்னையா - சிவலிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை (781264199 V) சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் ரக்ஸ் என்பன அடங்கிய மணிப்பர்ஸ் உடுவில் டச்சுறோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779859813 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.


## காணி விற்பனைக்கு

பெரும் பெரும் வர்த்தக நிலையங்கள் உயர்தர ஹோட்டல்கள், சிறந்த உணவகங்கள், உல்லாச விடுதிகள் போன்றனவெல்லாம் அமைக்கப்படுவதற்கு அவசியமாகத் தேவைப்படும் அதியுயர் வர்த்தக வலயத்துக்குள் அடங்கும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக ஆஸ்பத்திரி வீதியில் 15 பேர்ச் சதுரக்காணி ஒன்று கிணற்று நீர், மின்சார வசதிகளுடனும், பயன்தரு தாவரங்களுடனும், எல்லாவிதமான ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :-

0112382233, 077 6143133

## திருமண சேவை

★ 83 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 15 ½ பாவம் உடைய ஆஸ்திரேலியா எலக்ரோனிக்கல் இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 84 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 17 பாவமுடைய லண்டன் இஞ்சினியருக்குப் படித்த மணமகள் தேவை.
★ 83 இல் பிறந்த 8 இல் செவ்வாய் உள்ள 32 பாவமுடைய நியூசிலாந் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★80 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 40 ½ பாவ முடைய நோர்வேயில் டாக்டராகப் பணிபுரியும் மண மகளுக்கு நோர்வேயில் டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை.
★78 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 10 ¾ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற விவாகரத்துப் பெற்றுள்ள மணமகளுக்கு உள்நாட்டில் படித்த மணமகன் தேவை.
★82 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 41 ½ பாவமுடைய கனடாவில் டாக்டராகப் பணிபுரியும் மணமகளுக்கு கனடாவிலோ அல்லது உள்நாட்டிலோ டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை.
மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் செவ்வாய் [illegible] மணமக்களும், [illegible] குறைந்த மண மக்களும் எம்மிடம் உள்ளனர்.

தொடர்பு : [illegible] திருமணசேவை
இல. 320, கோயில் வீதி, நல்லூர். 077 6070862


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06★ 05★ 1927

மறைவு
01★ 05★ 2009

திதி:- பூர்வபக்க ஸப்தமி
(28.04.2012)

அமரர்

**கந்தையா கனகசபாபதி**

(ஓய்வுபெற்ற பிரதம புகையிரதப் பாதுகாவலர்)

அன்பின் உறைவிடமே
பாசத்தின் திருவுருவே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று ஆனதுவோ

என்றும் உங்கள் நினைவுகளுடன்:

விஜயாபதி,
நல்லூரி ஒழுங்கை, மானிப்பாய். (17494) (2-6-9) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கொழும்பு, ஏப் 28


வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருட முதற் காலாண்டு பகுதியில் குறைவடைந்திருந்ததாக அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தூத்துக்குடி கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டமையும் இதற்குப் பகுதியளவில் காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

> கொழும்பு தூத்துக்குடி கப்பல் சேவை கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இடை நிறுத்தப்பட்டமையும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இந்த வருட முதற் காலாண்டுப் பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் உதவியுடன் 408 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளதாக அந்த அமைப்பின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 597 பேர் நாடு திரும்பியிருந்தனர்.

''இந்த எண்ணிக்கை குறைவடைந்தமைக்குச் சரியான காரணம் தெரியவில்லை. ஆனால் கொழும்பு தூத்துக்குடி கப்பல் சேவை கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இடை நிறுத்தப்பட்டமையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். கடல் வழியாக நாடு திரும்புவதற்குத் தாம் விரும்புவதாகவும் இதன்மூலம் தமது வீட்டுப் பாவனைப்பொருள்களை அதிகளவில் தம்முடன் கொண்டு செல்ல முடியும் எனவும் அகதிகள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்'' என அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் இலங்கைக் கான பிரதிநிதி மைக்கல் ஸவாக் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (த)




தம்புள்ள ஹைரியா ஜும்ஆ பள்ளிவாசல் கடந்த வெள்ளிக்கிழமை சில பௌத்த தேரர்கள் உள்ளிட்ட குழுவினரால் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையினை அடுத்து நாடளாவிய ரீதியில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதுடன் பள்ளிவாசல்களில் துஆ பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் இது. (த)

## பொலிஸ் அதிகாரிகள் 23 பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஏப் 28

சேவையின் அடிப்படையில் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் எஸ்.கே. இலங்கக்கோன் இந்த இடமாற்றத்தை வழங்கியுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ஹோகண தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 6 பேர் உட்பட 11 பொலிஸ் அதிகாரிகள் என மொத்தம் 23 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 6 பேரும் முதல் நிலை பொலிஸ் அதிகாரிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றங்கள் எதிர்வரும் 5ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ஹோகண தெரிவித்தார். (த)

## அனுமதியின்றி நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலைகளை அகற்றுங்கள்

கொழும்பு, ஏப் 28

அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள அனைத்து புத்தர் சிலைகளும் உடைத்து அகற்றப்பட வேண்டும் எனவும் தம்புள்ள பள்ளி வாசல் தொடர்பில் எந்த அடிப்படைவாத கருத்துக்களையும் தாம் வெளியிடவில்லை எனவும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் தற்போதைய உறுப்பினருமான ஆசாத் சாலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் எந்த சந்தர்ப்பத்திலும் அடிப்படைவாத கருத்துக்களை வெளியிட்டதில்லை. எனினும் சட்டவிரோதமான அனுமதியற்ற சமய வழிப்பாட்டு தலங்கள் அகற்றப்படவேண்டுமாயின் அனைத்து சட்டவிரோத மத வழிப்பாட்டு தலங்களையும் அகற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன்.

நான் இவ்வாறு தெரிவித்த கருத்துக்களைப் பௌத்த அடிப்படைவாதிகளும் இனவாதிகளும் திரிபுபடுத்திப் பிரசாரம் செய்து வருகின்றனர். இவற்றைத் தடுக்க என்னால் முடியாது. எனினும் அரசு இவற்றுக்கு உடனடியாகத் தீர்வுகளை வழங்க வேண்டும்.

இந்த நாட்டில் உள்ளவர்கள் சிலருக்கு இன, மத பேதங்களை ஏற்படுத்தி அவற்றில் பிரயோசனமடையும் தேவையுள்ளது- என்றார். (த)

## ஜனாதிபதி - பிள்ளையான் விரைவில் நேரில் பேச்சு

கொழும்பு, ஏப் 28

கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானுக்கும் இடையில் பேச்சு நடத்தப்படவுள்ளது.

மாகாணசபையின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னதாக மாகாண சபையைக் கலைக்க வேண்டுமாயின் அதற்கு முதலமைச்சரின் இணக்கம் அவசியமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணசபை கலைப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் நோக்கில் முதலமைச்சர் பிள்ளையானுடன், ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கு மேலதிகமாக மேலும் இரண்டு மாகாணசபைகளும் கலைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)




சுதந்திர ஊடகக் குரல் நடத்தும்



புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்

'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களுக்குத் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.

புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்படவேண்டும்.
ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின்

Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புபவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

1 10,000/=
2 7,000/=
3 5,000/=
10 படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.




தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களில் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும் பரிசுகள் வழங்கப்படும்

சுதந்திர ஊடகக் குரல்
இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

விளம்பர அனுசரணை:



லக்ஷ்மி ஒகனைசேசன்
23/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



# கொத்துக் குண்டுகளை நாம் பாவிக்கவில்லை

### மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஏப்.28

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் யுத்தத்தின் போது கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தியதாக வெளியான செய்திகளை இலங்கை இராணுவம் நிராகரித்துள்ளது.

கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாரம் எதுவும் இருந்தால் அதைச் சமர்ப்பிக்குமாறும் அப்போது விசாரணை ஆரம்பிக்க முடியும் எனவும் பி.ரி.ஐ. செய்திச் சேவைக்கு இலங்கை இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை, இராணுவம், கடற்படை, அல்லது விமானப்படை ஒருபோதும் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தவில்லை என அவர் கூறியுள்ளார். இதற்கான ஆதாரங்கள் எதுவும் இருந்தால் எம்மிடம் சமர்ப்பிக்குமாறு நாம் ஐ.நா நிபுணரிடம் கோரியுள்ளோம். அப்போது நாம் விசாரணை ஆரம்பிக்க முடியும் என அவர் மேலும் கூறினார்.

> வன்னியில் கொத்துக் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. கண்ணிவெடி அகற்றும் நிபுணர் அலன் பொஸ்ரன் கூறியிருக்கிறார்.

வன்னியில் இறுதி யுத்தத்தில் இலங்கைப் படையினர் பொதுமக்களுக்கு எதிராகக் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தியமை உறுதியாகியுள்ளதாகவும் வெடிக்காத நிலையில் அவை வன்னியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. கண்ணிவெடி அகற்றும் நிபுணர் அலன் பொஸ்ரன் நேற்றுமுன்தினம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## மௌலானாவின் மெய்க்காவலருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஏப் 28

மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரைத் துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு உள்ளாக்கியமைக்காக அலவி மௌலானாவின் மற்றுமொரு மெய்ப்பாதுகாவலரான அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிபதி ருச்சிர வெலிவத்த நேற்று உத்தரவிட்டார்.

காயமடைந்த நபர் தற்போது களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

துப்பாக்கியிலிருந்து தோட்டாவை அகற்ற முயன்ற போது தவறுலதாக வெடித்ததில், மெய்ப்பாதுகாவலர் காயமடைந்ததாக ஆரம்பக் கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை அணியுடன் அனல் பறந்த ஆட்டம்

# கிண்ணத்தை சுவீகரித்தது யாழ். பிரதேச செயலகம்

வலி. வடக்கு ஏப். 28

பருத்தித்துறை பிரதேச செயலக அணி தனக்கு கிடைத்த கோல் பெறும் வாய்ப்புக்களை ஆரம்பம் முதல் கைநழுவவிட்டமையால் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி தனக்கு கிடைத்த வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்தி கோல்களைப் பெற்று யாழ் மாவட்ட சம்பியனாகியது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.15மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் பருத்தித் துறை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய சில நிமிட நேரத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணிக்கு கோல்களை இலகுவாகப் பெறக் கூடிய இரண்டு வாய்ப்புகள் தொடர்ந்து கிடைத்த போதிலும் அதனை உரிய முறையில் பயன்படுத்தாது தவறி விட்டது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணிக்கு ஒரு தண்டனை உதை 12 ஆவது நிமிடம் கோல் காப்பாளரின் எல்லைக்குள் கிடைத்தது.இதனை யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலக அணி தனது வாய்ப்புக்களைத் தவறவிட்ட நிலையில் முதல் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி 1:0என்ற முன்னிலையில் இருந்தது முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சுறுசுறுப்புடன் மோதிக் கொண்டன.யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் கோல்கள் பெறும் வாய்ப் புக்களைத் தவறவிட்ட நிலையில் இரு அணிகளும் பார்வையாளார்களின் விமர்சனத்திற்கு உள்ளாகின.

ஆனாலும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த ஸ்பாட்டர் மௌரின் கலிஸ்ரர் ஒரு கோலை போட்டி முடிவடைய 16 நிமிடங்கள் இருக்கும் நிலையில் பெற்றுக் கொண்டார்.

கோல் பெற வேண்டும் எனச் சோர்வடையாது விளையாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி போட்டி முடிவடையப் 10 நிமிடங்கள் இருக்கும் போது ஒரு கோலைப் போட்டது.

இதனைத் தொடர்ந்து 2 நிமிட இடைவெளியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த டிலீப் மீண்டும் ஒரு கோலைப் போட்டார்.

போட்டி சூடு பிடித்துக் கொண்ட போதிலும் இறுதி நிமிடங்களில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சோர்வடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி 3:1 என்ற கோல்க் கணக்கில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று சம்பியனானது.(த-86)



*யாழ்.மாவட்ட விளையாட்டுத் திணைக்களம் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.செயலகக் கணக்காளர் எஸ்.குகதாசன், வடமாகாண முன்னாள் விளையாட்டுப் பணிப்பாளர் எஸ்.மரியதாஸ் ஆகியோருடன் உள்ளனர். (த-86)*

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் ,ஏப்.28

மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கிரிக்கெட் போட்டி நாளையும் நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளது.

இதில் பெண்களுக்கான போட்டி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானங்களிலும் ஆண்களுக்கான போட்டி மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானம்,கெலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் இடம் பெறவுள்ளன. (த-23)

## உதைபந்தாட்டம்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் ஏவ்.எ கொல்சிம் வெற்றிக் கிண்ணத்திற்கான 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை மன்னார் தாழ்பாடுவிளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் செனலூசியா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அனுராதபுர அணி மோதவுள்ளது. (23)

## போட்டி ஒத்திவைப்பு

சென்ஜோன் கல்லூரி 5 ஆவது வருடமாக நடத்தும் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் சிவசம்பு தனபாலன் ஞாபகாத்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கடையிலான6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி தொடரில் நேற்று நடைபெற இருந்த ஆட்டம் மழைகாரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் போட்டிக்குரிய திகதி பின்னர் அறியத்தரப்படும் என போட்டிக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (23)

## வெற்றிக் கிண்ணம் தெல்லிப்பழைக்கு

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அணியும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

வலி. வடக்கு, ஏப். 28

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கபடிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அணியும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டியின் ஆரம்பத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அணி சற்று எதிர்ப்பு காட்டிய போதிலும் ஒரு சில நிமி டங்களில் இந்த நிலையில் இருந்து விடுபட்ட தெல்லிப்பழை பிரதேச செயலக அணி போட்டியை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது.

முதல்ப் பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 38:3என்ற புள்ளிகளைப் பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியின் கைகள் ஓங்கியிருந்தன. நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை பயன்படுத்திய போதிலும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 32:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் போட்டி முடிவடைந்தது.

போட்டி நிறைவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 70:15புள்ளிகள் என்ற அடிப்படையில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவை வெற்றி கொண்டு யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (த- 86)

## இன்றும் நாளையும் கரப்பந்தாட்டம்

அல்வாய் கிழக்கு மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடாத்தும் செற் அப் முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது.

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறும் இந்த சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து பதிவு செய்யப்பட்ட 24 கழகங்கள் பங்கு பெற்றுகின்றன. (த-8)

## எல்லே போட்டி

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இரு பாலாருக்குமான எல்லேப் போட்டியில் ஆண்களுக்கான போட்டி இன்று சனிக்கிழமை காலை8.மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன.

பெண்களுக்கான எல்லேப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறும். (த-23)

## பல்கலை ஹொக்கி அணி இறுதிப் போட்டிக்கு தகுதி

வலி. வடக்கு ஏப். 28

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து யாழ்.மாவட்ட ஹொக்கி விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் ஹொக்கி சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஹொக்கி அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் மோதிக் கொண்டன.போட்டி ஆரம்பமாகிய மூன்றாவது நிமிடத்தில் ஒல்ட்கோல்ட் விளையாட்டுக் கழக வீரன் நியாசன் ஒரு கோலைப் பெற்று அணியை முன்னிலைக்குக் கொண்டு வந்தார்.

இந்த நிலைமையை நீடிக்கவிடாது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வீரன் ஐங்கரன் ஒரு கோலைப் பெற்றுப் போட்டியைச் சமப்படுத்திய நிலையில் போட்டி சூடுபிடித்தது.

தொடர்ந்து பல்கலைக்கழக அணி வீரன் ரமேஸ் 20 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பெற்றுக் கொள்ள போட்டி வேகம் பெற்றதுடன் இரு அணிகளும் கோல் பெறுவதற்க்கான முயற்சியில் கடுமையாக ஈடுபட்டன.

26 ஆது நிமிடம் மேலும் ஒரு கோலைப் பல்கலைக்கழக வீரன் பிரதாப் பெற்றுக் கொள்ள முதல்பாதி ஆட்டம் பல்கலைக் கழக அணி 3:1என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது காணப்பட்டது.ஒல்ட்கோல்ட் அணி சளைக்காது கோல் பெறும் முயற்சியைத் தொடர பல்கலைக்கழக அணி அதனைத் தடுத்து விளையாடியது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் 15ஆவது நிமிடம் ஒல்ட்கோல்ட் அணியின் முயற்சிக்குப் பலன் கிடைத்து, இராஜேஸ்வரன் ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து இரு அணிகளும் கடும் பிரயத்தனத்துடனும் விளையாடினர் இரண்டாம் பாதி ஆட்டம் ஒல்ட்கோல்ட் அணிபெற்ற1:0 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.


போட்டி நிறைவில் பல்கலைக்கழக அணி 3:2 கோல்கள் என்ற அடிப்படையில் ஒல்ட்கோல்ட் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத்தகுதி பெற்றது. (த-86)

விற்பனை முகவர்கள் தேவை

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன தரத்திலான போல்ட் பொயிண்ட் பேனா வகைகளை யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு விநியோகிக்க விற்பனை முகவர்கள் தேவை.

மோட்டார் சைக்கிள் / முச்சக்கர வண்டி வைத்திருத்தல் வேண்டும்.
வங்கி / பண உத்தரவாதம் வழங்க வேண்டும்
தொடர்பு: 0777664094
கிறிஸ்டோ மார்கெட்டிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரபரப்பான கட்டத்தில் ஆஸி. - தீவுகள் மோதல்

மேற்கிந்தியத்தீவுகள் அணி இறுதி டெஸ்டில் வெற்றி பெறுவதற்கு இன்னமும் 197 ஓட்டங்கள் தேவையான நிலையில் கைவசம் 5 இலக்குகளுடன் துடுப்பெடுத்தாடி வருகின்றது. ஆஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரையில் மேற்கிந்தியத்தீவுகளின் பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை கட்டுப்படுத்தி 5 இலக்குகளைக் கைப்பற்றினால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றுக் கொள்ளலாம் என்னும் நிலையில் ஐந்தாவது நாள் ஆட்டம் தொடரவுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆஸ்திரேலிய அணி விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணியும் இரண்டாவது டெஸ்ட் சமநிலையில் நிறைவடைந்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாடியது.

முதலாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணியின் சார்பில் மத்தியூவேட் மட்டும் சதம் அடித்து அசத்த 328 ஓட்டங்களை சகல இலக்குகளையும் இழந்து பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மத்தியூவேட் 106, வோணர் 50, வொட்ஸன் 41 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகளின் சார்பில் சிலிங்போர்ட் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆஸி.யின் பந்து வீச்சுக்கு திணறி 218 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சந்தர்போல் 68, கிரன் பவல் 40, ராம்போல் 31 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் நதன் லயோன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

110 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி பொண்டிங்கின் அரைச்சதத்தின் உதவியுடன் மூன்றாம் நாள் ஆட்ட நிறைவில் 6 இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. களத்தில் மைக் ஹஸி 17, ஹரிஸ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

ஆட்டத்தின் நான்காவது நாளிலும் மேற்கிந்தியத்தீவுகளின் பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர். சிலிங்போர்ட் தனது கைவரிசையைக் காட்ட ஹஸி 32 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அதன் பின்னர் பின்வரிசையில் ஸ்ராக் மாத்திரம் 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து இறுதியாக ஆட்டமிழக்க ஆஸ்திரேலிய அணி 259 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் சிலிங்போர்ட் 4, ரோச், டெனோநரேன் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

370 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி பரத்தை ஒட்டமெதனையும் பெறாத நிலையில் இழந்தது. பிரத்வெயிட் 14, கெரன் பவல் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 45 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் டரன் பிராவோ, சந்தர்போல் இணைந்து நான்காவது இலக்குக்கு மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை பகிர்ந்து கொண்டனர். மெதுவாக இவர்களது இணைப்பாட்டம் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தது. சந்தர்போல் 14 ஓட்டங்களை எட்டிய போது டெஸ்ட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.

இவர்களது இணைப்பாட்டத்துக்கு வொட்ஸன் வில்லனாகினார். இணைப்பாட்டமாக 110 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டரன் பிராவோ 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய சந்தர்போல் தனது அரைச்சதம் கடந்தார். டெனோ நரேனுடன் இணைந்து துடுப்பெடுத்தாடிய சந்தர்போல் நான்காவது நாள் ஆட்ட நேர நிறைவின் இறுதிப் பந்தில் ஆட்டமிழந்தார். சந்தர்போல் 67 ஓட்டங்களுடன் கிளார்கின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி நான்காம் நாள் ஆட்ட நிறைவில் 5 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் டெனோநரேன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது துடுப்பெடுத்தாடி வருகின்றார்.

(5)

## இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது பயோர்ண் முனிச்

ரியல் மட்ரிட் கழகத்தை பெனால்ட்டி உதைகளில் தோற்கடித்து சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டிக்கு பயேர்ண் முனிச் கழகம் தகுதி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற ரியல் மட்ரிட் மற்றும் பயேர்ண் முனிச் கழகங்களுக்கிடையிலான இரண்டாம் கால் (செக்கன்ட் லெக்) அரையிறுதிப் போட்டியில் ரியல் மட்ரிட் கழகம் 2-1 என்ற அடிப்படையில் வெற்றி கொண்ட போதிலும், மொத்தமாக இரு அணிகளும் அரையிறுதிப் போட்டியில் தலா 3 கோல்களைப் பெற்றிருந்ததால் பெனால்ட்டி உதை மூலம் வெற்றிபெறும் அணி தீர்மானிக்கப்பட்டது.

இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற முதற் கால் அரையிறுதி ஆட்டத்தில் பயேர்ண் முனிச் கழகம் 2-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றிருந்ததன் காரணமாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற இந்தப் போட்டியில் ரியல் மட்ரிட் கழகம் 2 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற வேண்டியிருந்தது. மறுபுறத்தில் பயேர்ண் முனிச் அணி போட்டியை சமநிலைப்படுத்தி முடித்துக் கொண்டாலே இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பைப் பெறும்.

இந்த நிலையில் இடம்பெற்ற போட்டியில் 6 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்ட்டி உதைக்கான வாய்ப்பை கிறிஸ்டியானோ றொனால்டோ சரியாகப் பயன்படுத்தி ஆரம்பத்திலேயே ரியல் மட்ரிட் இற்கு ஆதிக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய ரியல் மட்ரிட் கழகம் சார்பில் 14 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார் கிறிஸ்டியானோ றொனால்டோ. இதன்மூலம் முதல் 14 நிமிடங்களில் ரியல் மட்ரிட் கழகம் 2-0 என்ற அபார முன்னிலையைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து போராடிய பயேர்ண் முனிச் கழகம் சார்பாகக் கிடைத்த பெனால்ட்டி உதை வாய்ப்பை அந்த அணியின் றொபன் கோலாக்க 27 ஆவது நிமிடத்தில் போட்டி 2-1 என்ற கணக்கில் விறுவிறுப்பாக நகர்ந்து கொண்டிருந்தது.


எனினும் அதன் பின்னர் 90 ஆவது நிமிடம் வரை இரு அணிகளும் கோலொன்றைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அதன் போதும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் அரையிறுதிப் போட்டிகளில் இரு அணிகளும் தலா 3 கோல்களோடு சமநிலையில் காணப்பட்டன.

இதன் காரணமாக வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக பெனால்ட்டி உதை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இதில் ரியல் மட்ரிட் சார்பாக முதலாவதாக உதைந்த கிறிஸ்டியானோ றொனால்டோ மற்றும் இரண்டாவதாக உதைந்த காகா ஆகியோரின் உதைகள் பயேனர்ண் முனிச் கழகத்தின் கோல் காப்பாளரால் தடுத்து நிறுத்தப்பட்டன.


இறுதியில் பயேர்ண் முனிச் கழகம் 3-1 என்ற அடிப்படையில் பெனால்ட்டி உதைகளை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் செல்சி கழகமும், பயேர்ண் முனிச் கழகமும் மோதவுள்ளன.

(5)



## சங்காவின் படையணியிடம் சங்காரமானது புனே



ஐ.பி.எல்., தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஒரு வழியாக முதல் வெற்றியை பெற்றது. நேற்றுமுன் தினம் நடந்த லீக் ஆட்டத்தில் கங்குலியின் புனே வாரியர்ஸ் அணியை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

புனேயில் நேற்றுமுன் தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல். தொடரின் 35 ஆவது லீக் ஆட்டத்தில் டெக்கான் சார்ஜர்ஸ், புனே வாரியர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் அணித் தலைவர் சங்ககரா, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

### நல்ல தொடக்கம்

டெக்கான் அணிக்கு பார்த்திவ் பட்டேல், ஷிகர் தவான் இணைந்து அசத்தல் தொடக்கம் கொடுத்தனர். இவர்கள், நெஹ்ரா வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் மூன்று பவுண்டரிகள் அடித்தனர். சாமுவேல்ஸ் பந்தில் தவான் ஒரு இமாலய சிக்சர் அடித்தார். மறுபக்கம் புவனேஷ் குமார் பந்தை சிக்சருக்கு அனுப்பினார் பார்த்திவ். முதல் இலக்குக்கு 39 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், தவான் (16) 'ரன் அவுட்டானார்'. சிறிது நேரத்தில் பார்த்திவும் (24) வெளியேறினார். அணித்தலைவர் சங்ககரா (12) ஏமாற்றினார்.

### 'சிக்சர்' மழை

இதற்குப் பின்னர் கமரான் வையிட், டுமினி சேர்ந்து அதிரடியாக ஆடினார். இவர்கள் 5 ஆவது இலக்குக்கு 75 ஓட்டங்கள் சேர்த்தனர். புனே பந்துவீச்சை ஒருகை பார்த்த வையிட், ஓட்ட மழை பொழிந்தார். ராகுல் சர்மா வீசிய ஆட்டத்தின் 16 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர்கள் விளாசினார். 46 பந்தில் 78 ஓட்டங்கள் (6 பவுண்டரிகள், 5 சிக்சர்கள்) விளாசிய வையிட், சாமுவேல்ஸ் சுழலில் வீழ்ந்தார். டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 177 ஓட்டங்கள் எடுத்தது. டுமினி (26), ஜாகி (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சவாலான இலக்கை விரட்டிய புனே அணிக்கு, முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றம் அளித்தனர். அங்கித் சர்மா சுழலில் ஜெசி ரைடர் (7) ஆட்டமிழந்தார். திரான் பந்தில் மனிஷ் பாண்டே (21) 'போல்டானார்'. கோனி பந்தில் கங்குலி (23), காலியானார். இதையடுத்து புனே அணி 9.5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 73 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

ஆட்டத்தின் 14 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய அறிமுக வீரர் ஆசிஷ் ரெட்டி இரட்டை அடி கொடுத்தார். உத்தப்பா (29), மர்லான் சாமுவேல்சை (3) ஆட்டமிழக்கச் செய்து, டெக்கான் அணிக்கு உற்சாகம் அளித்தார். கடைசி கட்டத்தில் அதிரடி காட்டிய ஸ்டீவன் ஸ்மித் 26 ஓட்டங்களுக்கு வெளியேறினார். கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் புனே வெற்றிக்கு 26 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கோனி அபாரமாக பந்துவீச, 7 ஓட்டங்கள் தான் எடுக்கப்பட்டன. இறுதியில் புனே அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 159 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. இந்தத் தொடரில், முதல் வெற்றியை பெற்ற டெக்கான் அணி 2 புள்ளிகளை முழுமையாக பெற்றது.

### யுவராஜ் உற்சாகம்

புற்றுநோய்ப் பாதிப்பில் இருந்து மீண்ட யுவராஜ், நேற்று முன்தினம் மைதானத்துக்கு வந்தார். சக புனே வாரியர்ஸ் வீரர்கள் கங்குலி, உத்தப்பா, முரளி கார்த்திக்குடன் உற்சாகமாக பொழுதை போக்கினார். சிறிது நேரம் துடுப்பாட்ட பயிற்சியிலும் ஈடுபட்டார். பின்னர் ஆட்டத்தைக் கண்டு களித்தார். கடந்த ஆண்டு புனே வாரியர்ஸ் அணியின் அணித் தலைவராக இருந்த இவர், இந்த முறை புற்றுநோய் பாதிப்பு காரணமாக விளையாட இயலவில்லை.

மீண்டும் கிரிக்கெட்டுக்கு திரும்புவது குறித்து யுவராஜ் கூறுகையில், மிக விரைவாக தேறி வருகிறேன். அதிக தூரம் நடக்க தொடங்கியுள்ளேன். இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் கிரிக்கெட்டுக்கு திரும்ப வாய்ப்பு உள்ளது. மைதானத்துக்கு வந்து ரசிகர்கள், சக வீரர்களை சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சி அளித்தது என்றார். (5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்லாவுக்கு ஆறுதல் சொன்ன கில்லி

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவர் அடம் கில்கிறிஸ்ட், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பியூஸ் சாவ்லாவைத் தேற்றியுள்ளார். மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் ஓர் பந்து பரிமாற்றத்தில் 27 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அந்த ஆட்டத்தில் தோல்வியடையக் காரணமாக அமைந்திருந்தார்.

கடைசி இரண்டு பந்து பரிமாற்றங்களில் மும்பை இந்தியன்ஸ் அணி 32 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்த நிலையில் 19 ஆவது பந்து பரிமாற்றத்தை வீசிய பியூஸ் சாவ்லாவின் பந்துவீச்சில் முதலிரண்டு பந்துகளில் பவுண்டரிகளைப் பெற்றுக்கொண்ட ரொபின் பீற்றர்சன், மூன்றாவது பந்தை சிக்ஸருக்கு அனுப்பியதோடு, நான்காவது பந்தில் ஓர் ஓட்டமொன்றைப் பெற்றார். ஆனால் மறுபுறத்தில் அடுத்த இரண்டு பந்துகளையும் சிக்ஸருக்கு அனுப்பினார் அம்பத்தி ராயுடு. இதன் காரணமாக மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிபெறுவது இலகுவாக்கப்பட்டது.

எனினும் பியூஸ் சாவ்லா மீதான விமர்சனங்களை விடுத்து, அங்கு விளையாடப்பட்ட சிறந்த கிரிக்கெட்டை ரசித்தல் வேண்டும் என்று அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்தார். முதல் பந்தில் றிவேர்ஸ் ஸ்வீப், அடுத்த ஸ்விற்ச் ஹிற், அதற்கடுத்த பந்தில் லெக் திசையில் ஆறு ஓட்டங்கள்



என்று பீற்றர்சன் ஆடிய விதம் சிறப்பானது எனத் தெரிவித்தார்.

காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சார்பாக கில்கிறிஸ்ட் போட்டிகளில் பங்குபற்றாத நிலையில் அவுஸ்திரேலியாவின் டேவிட் ஹசி - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை வழிநடத்தி வருகிறார்.

19 ஆவது பந்து பரிமாற்றத்தில் பியூஸ் சாவ்லாவைப் பயன்படுத்த டேவிட் ஹசி மேற்கொண்ட முடிவை நியாயப்படுத்திய அடம் கில்கிறிஸ்ட், சாவ்லா வீசிய முதல் 3 பந்து பரிமாற்றங்களிலும் சிறப்பாகப் பந்துவீசியிருந்த நிலையில் ஒவ்வொரு அணித்தலைவரும் முக்கியமான தருணங்களில் தங்களது சிறந்த பந்துவீச்சாளரையே பயன்படுத்த விரும்புவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

ஆட்டம் தொடர்பாக பியூஸ் சாவ்லா வருத்தமடைந்திருந்ததாகத் தெரிவித்த அடம் கில்கிறிஸ்ட், சாவ்லாவுடன் தான் அது பற்றிக் கலந்துரையாடியதாகவும், அவரைத் தேற்றியதாகவும் தெரிவித்தார். (5)


**புதிய தாசன் கல்வி நிலையம்**

ஜெற் மோட்டேஸ் அருகில்,
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**A/L 2014**

கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| பொருளியல் | தமிழ் |
| வரதராஜன் | க. ஜெசிந்தன் |
| வணிகக்கல்வி | இந் / சம, இந்/ நாக |
| முரளி | சுரேஸ் |
| கணக்கீடு | நாடக / அரங் |
| பகீரதன் | ரமேஸ் |
| அரசியல் | புவியியல் |
| பொன். சந்துரு | குமரன் |
| அளவையியல் | வரலாறு |
| E.S. புவன் | சுதன் |
| வணி/புள்ளி, பொது அறிவு | விவசாயம் |
| தவசேகர் | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம் - 30.04.2012 திங்கட்கிழமை
நேரம் : மாலை 3.45 மணி

**வெளிவந்துவிட்டது**

இலங்கை திட்டமிடல் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்
விற்பனையாகிறது
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்,தொ.பே. 021 222 9881
Face Book ID.
annai book depot@gmail.com

**பிறைற்றின் கல்வி நிலையம்**

சங்கத்தானை, சாவகச்சேரி

**சிங்கள மொழி**

வகுப்புகள் ஆரம்பமாகிறது
யாழ். புகழ். விரிவுரையாளர்
Mr. ஸ்ரீ ரஞ்சன்
உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளவும்.
**Contact - 0776679544**
★ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

**மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு**

**By : அன்பு**

★ பரீட்சையை எப்படி இலகுவாக எதிர் கொள்ளலாம்
★ 25 விடயத் தலைப்புகள்
★ எதிர்பார்ப்பு வினாக்கள்
★ நாள்தோறும் 11.45
★ ஆரம்பம் 1/5 செவ்வாய் 11.45.

A/L 2013இற்கு உரிய ORGANIC
Sat, Sun - 10.45 - 11.45
ஆரம்பம் 29.04 ஞாயிறு 10.45
**THE SCIENCE CORNER**

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 2-5-2012 | Batch II: 5-5-2012 | Batch III : 7-5-2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
2 Months

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

**A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074


தமிழ் தேசிய மக்கள் முன்னணி - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
இணைந்து நடத்தும்

## மேதின எழுச்சி நிகழ்வு

தமிழ்த் தேசத்தில் வாழும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள், பெண்கள் மீதான அடக்குமுறை நீங்கிடவும், தமிழ்த் தேசத்தின் இருப்பு அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்திடவும், இடம்பெயர்ந்தோர் ஊர்திரும்பிடவும், தனித்துவமான இறைமை அங்கீகரிக்கப்பட்டு இரண்டு தேசங்கள் இணைந்த ஒரு நாடு என்ற அரசியல் தீர்வை வலியுறுத்தியும்
காணாமல் போனவர்கள் கண்டறியப்படவும், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தியும்
தொழிலாளர் தினமாகிய மே 01 இல் அனைத்துத் தமிழ் மக்களையும் அணி திரளுமாறு அறைகூவல் விடுக்கின்றோம்.



இடம் : ஞான வைரவர் ஆலய முன்றில், சாமியன் அரசடி, கரவெட்டி.
(நெல்லியடி - கொடிகாமம் வீதியிலுள்ள தபாற்கந்தோர் அருகில்)
காலம் : 01.05.2012 செவ்வாய்க்கிழமை
நேரம் : பி.ப. 3.00 - பி.ப. 6.00 மணிவரை

மேதின ஏற்பாட்டுக் குழு - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தொடர்புகளுக்கு 0779599361, 0773024316, 0212223739





எமது முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனத்தில் ஆலோசனைபெற்று 16 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் இதுவரையில் ஆஸ்திரேலியா பயணமாகியுள்ளனர்.
அவர்களுக்குக் குறைந்த கட்டணத் தங்குமிட வசதி, பகுதிநேரத் தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுவருகின்றன.
**இன்னும் என்ன தாமதம்**
**5 வருட ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனைகளுக்கு இன்றே நாடுங்கள்.**
**THISAIKADDI (PVT) LTD**
504, Hampton Street,
Malborne, Australia.
Land phone - 0061390437100



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக்காரியாலயம்
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2219016
கிளைகள் : இல. 115A , இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி, 021 2285544
இல. 22A , பிராஸ்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி 0112508443, 0756438553.

**பதவி வெற்றிடம்**

**Clerk** (தற்காலிகம்)
கொழும்பு திசைகாட்டிக் கிளைக்கு எழுதுவினைஞர் தேவை. இலவச தங்குமிட வசதியுண்டு. A/L சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது. சாரதியும் தேவை. நேரில் வரவும்.
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(எமது இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone களை திருத்தி கொடுக்க முடியும்)
(With Practical Electronic)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - வரும் ஞாயிறு காலை 11 மணி
உங்கள் பதிவுகளை உடன் மேற்க்கொள்ளவும் !!
விபரங்களுக்கு UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862


## மரண அறிவித்தல்

### கோபால் நந்தகோபால்

(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்)



பருத்தித்துறை, பூதராயர் ஒழுங்கை, சிவன் கோயிலடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் கோபால் நந்த கோபால் நேற்று முன் தினம் (26.04.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சாரதாமணியின் அன்புக் கணவரும், சுகந்தியின் பாசமிகு தந்தையும், சிறீமனோகரனின் மாமனாரும், ஸ்ரீபிரபா, ஸ்ரீலசிக்கா, ஸ்ரீமதுஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பூதராயர் ஒழுங்கை,
சிவன்கோயிலடி, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(6,14,10)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமாகப்
பேசுங்கள்,
படபடவெனப்
பேசாதீர்கள்.
-இராமதாசர்-



# வார வசந்தம்

01

உதயன் 28 ஏப்ரல் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# பேசாமலே பேசும் பேச்சுக்கலை

மற்றவர்களோடு கருத்துப் பரிமாற்றம் பேச்சில் ஈடுபட்டிருக்கும் போது நம் உடலையும், முகம், கைகள், கால்கள் எல்லா அங்கங்களையும் பயன்படுத்தி அசைவுகளின் மூலம் ஒரு நாடகப் பாணியில் கருத்துக்களை வெளிப்படுத்துவது, தொடர்பு கொள்வது நன்றாக, சுவையாக இருக்கும்.

■ மனோ

நம்மைப் பற்றிய ஒரு சிறந்த முதல் அபிப்பிராயத்தை (First Impression) கருத்தை நிலைநாட்ட நமக்கு இரண்டாவதாக ஒரு வாய்ப்பு எப்போதுமே கிடைக்காது. (You will never get a secound chance to create a best first impression )

மற்றவர்களை நாம் சந்திக்கின்றபோது, முதல் ஒரு சில நிமிடங்களிலேயே நம்மைப் பற்றிய ஒரு கருத்தை அவர்கள் மனதிலே பதியவைத்து விடுகின்றோம். நம்முடைய தோற்றம், முகபாவனைகள், நடை உடை பாவனைகள், குரலின் ஓசை நாம் பயன்படுத்துகின்ற வார்த்தைகள் இவையனைத்தும் நம்மைப் பற்றிய ஓர் உணர்வை மற்றவர்கள் மனதில் பதிய வைத்து விடுகின்றன.

ஒரு நாளில் 85 விழுக்காடு காலத்தை நாம் மற்றவர்களோடு தொடர்பு கொள்வதிலேயே கழிக்கின்றோம். அதாவது பேசுவதிலும், கவனிப்பதிலுமே ஈடுபடுகின்றோம். ஓர் அதிகாரியாக இருந்தால் கேட்கவே வேண்டாம். தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துப் பரிமாற்றத்திற்கு பெரும் பகுதி நேரம் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது.

ஒரு வணிகரின், தொழில் அதிபரின் தொழில்நுட்ப மற்றும் வணிக அறிவுக்கு அடுத்த நிலையில், கருத்துத் தொடர்பு பரிமாறும் பேச்சாற்றல் மட்டுமே வெற்றிக்கு வழிவகுக்கும்.

மற்றவர்களை நாம் ஏதோ ஒரு செயல் சார்ந்து சந்திக்கும் பொழுது நாம் பேசுவதற்கும், அறிமுகமாவதற்கும் முன்னதாகவே, அவர்களுடைய கண்களும், மூளையும் அவர்களையும் அறியாமல், நம்மைப் பற்றிய பதிவுகளை அவர்கள் மனதில் உருவாக்கிவிடுகின்றன. அதாவது நாம் ஆணா, பெண்ணா, கறுப்பா, சிவப்பா, இளைஞரா, வயதானவரா, அழகான விரும்பத்தக்க தோற்றமா? அல்லது சாதாரணமான தோற்றமா? என்பதோடு மட்டுமல்லாமல் நடை உடை பாவனைகள், பேசும் பொழுது காட்டும் முகபாவங்கள் மற்றவர்களின் முகம் பார்த்துப் பேசுகிறோமா அல்லது வேறு எங்காவது சுவர்கள், கூரைகள் மற்ற அறையில் உள்ள, சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்களைப் பார்த்துப் பேசுகிறோமா, அவர்களோடு மிக நெருங்கி அல்லது மிகத் தள்ளி இருந்து பேசுகிறோமா என்கிற எல்லா விடயங்களும் நம்மைப் பற்றிய ஒரு கருத்துக் கணிப்புக்குக் காரணமாக இருக்கின்றன.

எல்லா மனிதர்களுமே தங்களைச் சுற்றி கற்பனையாக ஒரு எல்லை அல்லது வட்டம் (Personal Territory) அமைத்து வைத்துக் கொள்கின்றார்கள். சந்திக்கின்ற மனிதர்களைப் பொறுத்து அந்த எல்லை மாறுபடுகின்றது. நம்முடைய அறிவாற்றல் என்பது மற்றவர்களைச் சந்திக்கின்ற பொழுது இந்த இடைவெளியை எப்படி நாம் கையாளுகின்றோம் என்பதைப் பொறுத்து அமைகின்றது. மற்றவர்களும் நம்மைப் பற்றிய ஒரு கருத்துக் கணிப்பை இந்த இடைவெளியை வைத்துத் தங்கள் மனதில் பதியவைத்துக் கொள்ளுவார்கள்.

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். நண்பர்களுக்கிடையே இருக்கிற இடைவெளி, அதிகாரிகளுக்கும் அவர்களுக்குக் கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கும் இடையே இருக்கும் இடைவெளி, பெற்றோர்கள், சிறிய குழந்தைகள் மற்றும் வளர்ந்த குழந்தைகளுக்கும் இடையே இருக்கும் இடைவெளி நமக்கு அறிமுகமாகாத மனிதர்களுக்கும் இடையே இருக்கும் இடைவெளி இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால் நம்மைச் சுற்றி எவ்வளவு தூரம் கண்ணுக்குத் தெரியாத எல்லையை வகுத்து வைத்திருக்கின்றோம் என்பதை அறியலாம்.

இந்த மனிதர்களின் உடல்களுக்கிடையே இருக்கின்ற இடைவெளிகள் அன்பின் ஆழத்தையும், உறவின் நெருக்கத்தையும், அதிகாரத்தின் தன்மையையும், மரியாதையின் வெளிப்பாட்டையும், அத்துமீறி மற்றவர்களின் எல்லைக்குள் அடியெடுத்து வைக்கும் அராஜக மனோ பாவத்தையும், பண்பாட்டின் முதிர்ச்சியையும் காட்டும் நுட்பமான நடத்தையின் வெளிப்பாடாக அமைகின்றன.

வாயைத் திறந்து வார்த்தைகளை உச்சரித்து கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்வதைவிட சுமார் 50 விழுக்காடுகளுக்கு மேல் முகபாவம் மற்றும் உடலசைவு மொழிகளின் மூலமே நாம் செய்திகளை மற்றவர்களுக்கு அறிவிக்கின்றோம்.

உடலசைவு மொழி என்கிற பேசாமல் பேசும் கலை என்பது நமது முகத்தைப் பயன்படுத்திக் காட்டுகின்ற உணர்வின் பிரதிபலிப்புக்கள். கண்களைப் பார்த்துப் பேசும் தன்மை, நாம் நிற்கும் அல்லது அமர்ந்திருக்கும் நிலை, மற்றவர்களை நோக்கியோ அல்லது விலகியோ நிற்கிற நமது உடலின் நிலை (Body Orientation) மற்றவர்களுக்கும் நமக்கும் இடையே உள்ள இடைவெளி, கைகளினால் மற்றவர்களின் தோளைத் தொட்டுப் பேசுதல், கை குலுக்குதல், கன்னத்தைத் தொடுதல், முதுகைத் தட்டுதல், கைகளைப் பயன்படுத்தி அபிநயங்களால் ஒரு செயலை, செய்தியை விவரித்தல் முதலிய அனைத்தும் அடங்கும்.

மற்றவர்களோடு பேசும் பொழுதும், கருத்துக்களைப் பரிமாறும் பொழுதும் மிகக் குறைந்த தசைகளை முகத்தில் அசைப்பதன் மூலம் நம்முடைய ஆர்வத்தையும், ஆச்சரியத்தையும், மாற்றத்தையும், கோபத்தையும், அன்பையும், நட்பையும், நம்பிக்கையையும், விசுவாசத்தையும் வெளிக்காட்டி விடலாம். கண்கள் உணர்வை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த கருவிகள்.

மற்றவர்களோடு கருத்துப் பரிமாறும் பேச்சில் ஈடுபட்டிருக்கும்போது நம் முழு உடலையும், முகம், கைகள், கால்கள் எல்லா அங்கங்களையும் பயன்படுத்தி அசைவுகளின் மூலம் ஒரு நாடகப் பாணியில் கருத்துக்களை வெளிப்படுத்துவது, தொடர்பு கொள்வது நன்றாக, சுவையாக இருக்கும்.



உங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயங்களை மற்றவர்கள் மனதில் ஏற்படுத்த அவர்கள் பேசும் பொழுது காது கொடுத்துக் கேளுங்கள். கண்களால் முகத்தைப் பார்த்துக் கவனியுங்கள். முகத்தில் உணர்வுகளைக் காட்டி தலையை அசைத்து ஆர்வமாகக் கேளுங்கள். மற்றவர்கள் பேசும் பொழுது எப்படிக் கவனித்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணி, கவனிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

கண்களைப் பார்த்துப் பேசுதல் என்றால் இமைக்காமல் மற்றவர்களின் கண்களிலிருந்து பார்வையை விலக்காமல் பார்ப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. முறைத்துப் பார்ப்பதுவும் கூடாது.

பேசும் பொழுது அவ்வப்பொழுது, சில விநாடிகள் மாத்திரமே அடுத்தவர்களின் கண்களைப் பார்த்து நாம் பேசும் கருத்துக்கு ஏற்றாற் போல் பொருத்தமாகப் பார்த்துப் பேச வேண்டும். கண்களைப் பார்த்துப் பேசாமல் சுற்றுப் புறத்தில் பார்த்துக் கொண்டு கவனிப்பதோ, பேசுவதோ ஏமாற்றத்தையும், மன சஞ்சலத்தையும் பேச்சுக்கு அர்த்தமற்ற தன்மையையும் உருவாக்கி விடும்.

பேசுகின்ற பொழுது நம்முடைய எண்ணங்கள். பேச்சைவிட வேகமாக இருந்தாலும், நாம் வேகமாக படபடவென்று பேசக்கூடாது. அப்படிப் பேசும் பொழுது மற்றவர்கள், நாம் சொல்ல வந்த கருத்தில் நமக்கு முழுமையான புலமை இல்லை என்று எண்ண வாய்ப்பிருக்கின்றது.

மிகமிக மெதுவாக நிறுத்தி நிறுத்தி, அதிக அளவில் இடைவெளிவிட்டு, தயங்கித் தயங்கி, பேசினால் நம் அறியாமையை அது வெளிப்படுத்தும். நம்முடைய குரலின் தொனி, நம் ஆர்வமின்மையையும் மனோ பாவத்தையும், மன இறுக்கத்தையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தி விடும். எனவே, பேச்சுக் கலையில் உங்களின் குரல் பற்றிய உணர்வு மிக அவசியம்.

மெதுவாகவும், தெளிவாகவும், இடைவெளிவிட்டும் குரலில் ஏற்ற இறக்கங்களைப் பயன்படுத்தி பேச வேண்டும். கருத்துக்களை, செய்திகளை தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதில், சொல்லுவதில் நமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தும் விதமாக நம் உண்மைத் தன்மையைக் காட்டும் விதமாக நம் பேச்சு, குரல் இருக்க வேண்டும்.

நாம் கூர்ந்து சிந்தித்துப் பார்த்தால் வார்த்தைகளைக் கொண்டு நாம் கூறும் செய்திகளை மற்றவர்கள் கேட்டு பொருள்களைப் புரிந்து கொள்வதைவிட நம்முடைய உடலசைவு மற்றும் குரலின் தன்மையை வைத்தே கருத்துக்களை உள்வாங்கிக் கொள்கின்றார்கள். பேசும் வார்த்தைகளைவிட பேசாத உடலசைவு மொழிகளே அதிகம் அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றன.

பேசும் பொழுதும், கவனிக்கும் பொழுதும் கேள்விகள் கேட்பதற்குத் தயங்க வேண்டாம். கேள்விகளைப் பயன்படுத்துவதன் மூலம் தகவல்களை, ஆலோசனைகளை மற்றவர்களின் அபிப்பிராயங்களை, கருத்துக்களை அறிந்து கொண்டு ஆர்வத்தோடு பேசுவதில் கவனிப்பதில் ஈடுபடுவோம். நாடகப் பாணியில், நடந்ததை, தெரிந்த செய்திகளை வெளிப்படுத்துவோம். பேச்சில் சுவை கூட்டுவோம். பேசும் ஆற்றலே பெரிய வெற்றியைத் தேடித் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (48)

### அதிர்ஷ்ட நாள்களின் அற்புதங்கள்

ஒவ்வொரு எண்காரர்களும் தாங்கள் மேற்கொள்ளும் எந்த முயற்சியானாலும் அவரவருடைய தனிப்பட்ட அதிர்ஷ்ட நாளன்று மட்டுமே மேற்கொள்ள வேண்டும். தொழில் தொடங்குதல், புதிய வேலைகளில் சேருதல், புதிய வீடு கட்டுதல், வாகனம் வாங்குதல், பொதுக் காரியத்தில் முன்னின்று தொடங்கி வைத்தல், சொத்து வாங்குதல் போன்ற அனைத்துக் காரியங்களையும் அதிர்ஷ்ட நாள்களில் செய்து வந்தால் பலமடங்கு அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

திகதி மாதம், வருடம் என்று மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் (விதி எண்) அதிர்ஷ்ட நாளன்று நீடித்த பலன் தரும் காரியங்கள் செய்து வந்தால் அக்காரியத்தின் தொடர்ச்சி மிகவும் அதிர்ஷ்டகரமாக இருக்கும். வாழ்க்கைக்கு அத்தியாவசியமான முக்கிய காரியங்களை அதிர்ஷ்ட நாள் குறிப்பிடும் தினத்தன்று செய்துவர பழகிக் கொண்டால் அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

தொடர்ந்து அதிர்ஷ்ட நாள்களைக் கடைப்பிடித்து வந்தால் இந்தத் திகதிகளின் வலிமை அதிகரிக்க ஆரம்பித்து தமக்குச் சாதகமான சூழ்நிலைகளை அமைத்துத் தரும். திருமணம், தூர தேசப் பயணம் மேற்கொள்ளுதல், வியாபார விசயமாகப் புதுக் கணக்குத் தொடங்குதல் போன்றவற்றை அதிர்ஷ்ட நாள்களில் மேற்கொண்டு வரவேண்டும். நீண்டகாலம் நீடித்த பலன் தருவதும், பின்னரே முடிவடையக் கூடியதுமான காரியங்களை கூட்டு எண் சாதகமான நாளன்று செய்து வந்தால் வெற்றி கிட்டும்.

கட்டிடம் கட்டுதல், தொழில் ஒப்பந்தங்களில் கையெழுத்திடல் போன்ற நீடித்த பலன் தரும் காரியங்களுக்குத் திகதி எண் கூட்டு எண் அதிர்ஷ்ட நாளன்று மட்டுமே தொடக்கி செய்து வர வேண்டும் முறையாகக் கடைப்பிடித்தால் சகல காரியங்களும் வெற்றி மேல் வெற்றி பெறும்.

வாழ்வில் உன்னத நிலையை அடைவார்கள். சாதாரண காரியங்களில் திகதி எண் அதிர்ஷ்ட தினத்தன்றும், நீடித்த முக்கியமான காரியங்களை கூட்டு எண் அதிர்ஷ்ட தினத்தன்றும் செய்து வர வேண்டும். அதிர்ஷ்ட எண்களின் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டால், அபரிமித மான பலன்கள் நடக்கும். நாள் நட்சத்திரங்கள் பற்றியும், தீய சக்திகளைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை.

ஒரு மனிதனுக்கு அதிர்ஷ்டப்பெயர், கையெழுத்து இவற்றுக்கு அடுத்தபடியாக அதிர்ஷ்ட நாள்களே துணைபுரியும். காரிய வெற்றிக்கும், தோல்விக்கும் மூலகாரணம் அக்காரியம் ஆரம்பிக்கும் தொடக்க நாளே ஆகும். அதிர்ஷ்ட நாட்களைக் கடைப்பிடித்து



அதிர்ஷ்டகரமான வாழ்க்கையைப் பெறுங்கள்.

திகதி எண், கூட்டு எண்களின் அதிர்ஷ்ட சக்திகள் பெயர் எண்ணைச் சார்ந்தே பலன்கள் தரும். பெயரை எந்த எண்ணில் வைக்கின்றோமோ, அந்த எண் சார்ந்த நாட்களில் செய்யும் காரியங்கள் அதிர்ஷ்ட வசிய காந்த சக்திகள் விருத்தியாகி நல்லதொரு குறிப்பிடும்படியான அதிர்ஷ்டத்தை வாரி வழங்கும். அதிர்ஷ்ட நாட்களைப் பெயரெண் எழுத்துக்களுடன் முறையாக கண்டறிந்து வாழ்க்கையின் ஒவ்வொரு விடயத்திலும் கடைப்பிடித்து வந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும். காரிய சித்தியும் அனைத்துக் காரியத்திலும் வெற்றி மேல் வெற்றியும் கிடைக்கும்.

### அதிர்ஷ்ட நிறங்களின் ஆற்றல்

உடலுக்கும் மனதிற்கும் இன்பம் தரும் அதிர்ஷ்டத்தின் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள முயல வேண்டும். அதிர்ஷ்ட நிறங்களால் மனச் சோர்வு நீங்கும். மனம் பூரிப்படையும். மற்றவர்களை வசீகரிக்கும். காரிய ஜெயத்திற்கு துணை நிற்கும். மனதைத் தெளிவாக வைத்திருக்கும். குடும்பத்தில் செல்வச் செழிப்பை உண்டு பண்ணும். பிரபஞ்சத்தில் உருவாகியுள்ள ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு குணமுடையது. அனைத்து நிறங்களுக்கும் ஆதாரமாக இருப்பது ஏழு அடிப்படை நிறங்கள்தான். (VIBGYOR- Violet, Indigo, Blue, Green, Yellow, Orange, Red) இந்த ஏழு நிறங்களும் ஒன்றோடு ஒன்று கலக்கும் போது புதுப்புது நிறங்கள் உருவாகின்றன. அவையனைத்தும் தனித்தனி குணாதிசயங்களுடன் செயற்பட்டு வரும்.

### அதிர்ஷ்ட உலோகங்களின் வசிய சக்திகள்

ஒவ்வொரு உலோகமும் தனிப்பட்ட குணங்களையும், மருத்துவக் குணங்களையும் கொண்டது. மோதிரம், காப்பு, வசிய அட்சரங்கள், சங்கிலி போன்றவற்றை அதிர்ஷ்ட உலோகத்தில் அணிந்து கொண்டால் மிகுந்த செல்வாக்கும் புகழும் கிடைக்கும். செல்வவளம் மேலோங்கும். அன்றைய சித்தர்கள் மருத்துவப் பயன்பாடுகளுக்கும் , மந்திர உச்சாடனங்களுக்கும் உலோகங்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். மனிதன் பஞ்சபூத சக்தியிலிருந்து கண்டறிந்த விசயங்களை விடவும் கண்டறியாத விசயங்களே இன்னும் அதிகமாக இருக்கின்றன.

மின்சாரம் கடத்தப்படுவதும் உலோக பயன்படுகளால் தான். ஒலி அலைகளைப்பிரதி பலித்து தன்னுள் வசிய சக்தியாக்கி அதிர்ஷ்டத்தை விருத்தி செய்யும் தன்மை உலோகங்களுக்கு உண்டு. மனவிருத்தியையும் தரும். வசிய எண் எழுத்துப் பதித்து மோதிரம் சங்கிலியாக அணிந்து வந்தால் மிகவும் மேன்மை உண்டாகும். அதிர்ஷ்ட ஆற்றலை அவர்கள் பக்கம் திருப்பும். செல்வச்செழிப்பு, தொழில் மேன்மை, மனஅமைதி, புகழ், பதவி, சகல காரி யங்களிலும் வெற்றிகளைத் தரும். இரண்டு மூன்று பல விதமான உலோகங்களை சரியான விகிதத்தில் கலந்து சரி யான அதிர்ஷ்ட நாளில் அணிந்து கொண்டால் தடைப்பட்ட காரியம் விரைவில் முடிந்து வெற்றி தரும்.

*(தொடரும்)*

# நிர்வாண நிஜங்கள்

தமிழ் சினிமா என்பது இன்னும் விழித்துக் கொண்டே காணுகிற கனவாகவே இருக்கிறது. இறந்த பின் அடையப் போவதாய் எண்ணிக் கொண்டிருக்கின்ற சொர்க்கத்தையும், மோட்சத்தையும் நம் பாமர ரசிகன் உயிரோடிருக்கும் போது சினிமாவிலேயே சந்தித்து வருவதாய் சந்தோஷப்படுகிறான்.

எனவே [illegible]ங்கள் பெரும்பாலும் வாழ்க்கைக்கு அதிகம் தூரத்திற்கு வெளியே எடுக்கப்படுகின்றன.

வாழ்க்கையைப் பற்றியும், சினிமாவைப் பற்றியும் நிஜமாகவே கவலைப்படும் ஒரு கலைஞன் சினிமாவின் உயரத்தை இரண்டோர் சென்டிமீற்றர் ஏற்றிவிட்டால் அடுத்து வருகிறவர்கள் இரண்டோர் கிலோ மீற்றருக்கு இறங்கி விடுகிறார்கள்.

மறுபடியும் சினிமா என்பது மனிதனின் சாயங்கால இச்சைகளுக்கு தாளம் போடப் போய்விடுகிறது. ஆயிரம் வாதங்கள் புரிந்தாலும் சினிமா என்பது ஒரு பொழுதுபோக்குக் கருவிதான் என்பதை, முற்றிலும் மறுத்துவிட முடியாது. ஆனால் பொழுதுபோக்கு என்பது அறிவுக்கு புறம்பானதல்லவே. பொழுதுபோக்கு என்பது நம் மனதையும், உடம்பையும் ஆரோக்கியமற்றதாய் ஆக்கிவிடக் கூடாதே!

ஆணுக்கும் பெண்ணுக்கும் செக்ஸ் ஒன்றுதான் பிரச்சினை என்பதாக நம் கதைகள் கதை கட்டுகின்றன.

நம் வாழ்க்கையில் கமராவின் கண்களுக்குத் தட்டுப்படாத பிரச்சினைகள் எத்தனையோ... எத்தனையோ...

அவற்றைப் பார்க்க அனுமதிக்காமல் நம் கமராவின் கண்களுக்கு சேணம் போட்டு வைத்திருக்கிறோமோ?

ஒரு படத்திற்கு வசூல்தான் முக்கியமெனில் அறிவு என்பது வியாபாரத்திற்கு விரோதமான விஷயமல்லவே?

அறிவும், கலையும் வியாபார ரீதியிலும் வெற்றி பெறும் என்பதை நிரூபித்த கலைஞர்களும் இருக்கிறார்களே!

நாம் திரையில் பார்க்க வேண்டியது நிர்வாணப் பெண்களையல்ல- நிர்வாண நிஜங்களை. திரையில் யதார்த்த வாழ்க்கை ஏனின்னும் தெரியவில்லையோ?

மனிதன் என்பவன் மகா கோழையா?

இவன் அவலங்களை அனுபவிப்பான்; பார்க்க மாட்டானோ?

இன்னும் எத்தனை நாளைக்குக் கனவுகளையே பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோம்? வண்டுகள் வட்டமிடும் காகிதப் பூக்களை...

தாளம் தப்பாமல் சண்டையிடும் கதாநாயகனை...

கொங்கிறீட் சுவரைப் பிய்த்துக் கொண்டு வந்துவிழும் வில்லனை..

'வணக்கம்' போடும் நேரத்தில் வந்துவிடும் பொலிஸை...

கதாநாயகனைச் சுடப்போகும் நேரத்தில் தோட்டாக்கள் தீர்ந்துவிடும் துப்பாக்கியை..

பாடி முடியும் வரைக்கும் யாரும் பார்த்து விடாத காதல் ஜோடிகளை... இன்னும் எத்தனை நாளைக்குப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோம்?

எப்போது பார்க்கப் போகிறோம். கிராமத்தில் ஆமணக்கு இலையைச் சுருட்டிப் பாத்திரமாக்கிக் கூழ் குடித்துக் கொண்டிருக்கும் சனங்களை...

வறுமையால் கிழிந்துபோன கிழவியை.. கிழவியை விட வயதாகிக் கிழிந்து போன பாயை..

வாழை நா[illegible] கொள்ளும் ச[illegible]

ஜாதிக் கட்டுப்பாட்டில் ஓரிரு வார்த்தைகள் கூடப் பேச முடியாமல் மௌனமாய்க் காதலித்து மௌனமாய்க் கலைந்து செல்லும் காதலர்களை..



கிராமத்தில் வேலையில்லாத ஒரு பட்டதாரியின் ஒருநாள் அவஸ்தைகளை..

எப்போது பார்க்கப் போகிறோம்?

பொழுது போக்கு என்ற பெயரில் நம் நிகழ்காலத்தை மூடி மறைக்கும் செயல்கள் முறியடிக்கப்பட வேண்டும்.

இலக்கியத்திற்கும், திரைக்கலைக்குமிடையே இருக்கும் அந்நியம் அழிந்துவிட வேண்டும்.

ஆள்களுக்காகக் கதைகள் தயாரிப்பதை விட்டுவிட்டு இனிமேல் நாம் கதை[illegible] தேர்ந்தெடுக்கவேண்டும். [illegible]ரையுலகம் தொழில்நுட்பத்தில் வளர்ந்திருக்கிற அளவுக்கு கதையிலோ கருத்திலோ வளரவில்லை என்பது ஒரு கசக்கின்ற நிஜமாகும்.

கதையை வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுப்பதை விட்டுவிட்டு பழைய சினிமாக்களிலிருந்து தேர்ந்தெடுக்கிற நிலைமையை எண்ணி இன்று சினிமா தேவதை கறுப்பு பாவாடை கட்டிக்கொண்டிருக்கிறாள்.

நம் கதாசிரியர்களில் பலரும், இயக்குநர்களில் பலரும் களைத்துப் போகாத கற்பனை உடையவர்கள்.

அவர்களின் திசையை சினிமா திருப்பி விடக் கூடாது. சினிமாவின் திசையை அவர்கள் திருப்பிவிட வேண்டும்.

ஒரு சுத்தமான கலைஞனுக்கு பணம், புகழ் என்பனவற்றுக்கெல்லாம் மேலாய் மனோ தர்மம்தான் முக்கியம்.

புத்தகவாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி



இரு தவளைகள் சென்று கொண்டிருந்த வழியில் இருந்த ஆழ் குழியில் விழுந்து விட்டன.

வெளியே வர முடியவில்லை. மேலேயிருந்த தவளைகள் கேவலமாக இருவரையும் பார்த்து "இதிலிருந்து வெளியே வர முடியாது, முயற்சியை கைவிடுங்கள், செத்து விடுங்கள்" எனக் கத்தின.

முதல் தவளை இவர்கள் சொல்வதைக் கேட்டு கீழே விழுந்து விட்டது. நண்பர்களின் கொடூர குணத்தை எண்ணி முயற்சியை கைவிட்டு விட்டது. குழிக்குள்ளேயே இருந்து விட்டது.


இரண்டாம் தவளை மேலும் முயற்சி செய்து ஒருவழியாக மேலே வந்தது.


அது மேலே வந்து எல்லாரையும் பார்த்து, "மேலிருந்து வெளியே வர என்னை ஊக்கப்படுத்தியதற்கு மிக்க நன்றி" என்று கூறியது

உண்மை என்னவென்றால் அந்த தவளைக்கு காது கேட்காது.

இதேபோல சமூகத்தில் நம் முயற்சியை தடுக்கும் விதமாக பேசுபவர்களிடம் காது கேட்காதது போல இருந்து விட வேண்டும். ✱

# மூன்று இதயங்கள் கொண்ட மீன்







கணவாய் எனப்படும் மீன் இனத்திற்கு தான் மூன்று இதயங்கள் உள்ள சிறப்பு. கடல் மீனினவகைகளில் இது ராஜா எனவும் கருதப்படுகிறது. இந்த மீன், ஸ்குவிட் மற்றும் ஆக்டோபஸ் குடும்பத்தை சேர்ந்ததாகும். இதனை செப்பலோபாட்ஸ் எனவும் அழைக்கின்றனர்.

கணவாய் மீனுக்கு மிகப் பெரிய இதயம் உள்ளது, உண்மையில் இதற்கு ஒரு இதயம் அல்ல மூன்று இதயங்கள். இந்த மீனின் அங்கம் தட்டையாக இருப்பதால் கடலில் வாழ்வதற்கு வசதியாக உள்ளது. இவை மொலஸ்க்ஸ் மற்றும் சிறிய மீன்களை வேட்டையாடக்கூடியவை. கணவாய் மீன்கள் பிற இனத்தின் மீன்களிடம் இருந்து தன்னைக் காத்துக் கொள்ள தன் நிறத்தை பின்புல நிறத்திற்கு ஏற்ப மாற்றும் இயல்புடையது.

கணவாய் மீனின் ரத்தத்தில் செப்பு அதிகமாக இருப்பதால் ரத்தத்தின் நிறம் பச்சையும் நீலமும் கலந்த நிறமாக தோன்றும். இதன் காரணமாகவே இதை ராஜா மீன் என்கின்றனர். தன் நிறமிப் பையை சரிப்படுத்துவதன் மூலம் தன் நிறத்தை இதனால் மாற்ற முடிகிறது. நிறமிப்பைகள் சிறியவை, ஆனாலும் பல வண்ணங்களைக் கொண்டு காணப்படுகிறன. எதிரி மீன்கள்தன்னைத் தாக்கும்போது கருப்பு நிற திரவத்தை வெளியிட்டுத் தாக்கும். தாக்குவோரிடம் இருந்து தற்காலிகமாகத் தப்பிக்கும் தந்திரம் உடையது இந்த கணவாய் மீன்கள்.

# சுவீடன்





வடக்கு ஐரோப்பாவில் ஸ்காண்டிநேவியா என்றழைக்கப்படும் பூகோளப் பகுதிதான் சுவீடன் நாடு. நாட்டைச் சுற்றி 24,000 குட்டித் தீவுகள் உள்ளன. இரவில் சூரியன் உதிக்கும் நாடு என்ற பெயர் சுவீடனுக்கு உண்டு. இது ஐரோப்பாவில் மூன்றாவது பெரிய நாடு. சுவீயா



என்ற பழங்குடி இன மக்களின் பெயராலேயே சுவீடன் என்றழைக்கப்படுகிறது. தலைநகர் ஸ்டாக்ஹோம், மொழி சுவீடிஷ், நாணயம் சுவிடிஷ் க்ரோனோ முக்கிய விளைபொருள்கள் பார்லி, கோதுமை, சக்கரைவள்ளி, மாமிசம், பால். முக்கிய ஏற்றுமதிகள் இயந்திரப் பொருள்கள், விலங்கினங்கள், காகிதம், இரும்பு, கெமிக்கல். முக்கிய நகரங்கள் ஸ்டாக்ஹோம், கோதென்பெர்க், மால்மோ, யுப்சாலா, வாஸ்டராஸ், ஒரேபொரோ, லிங்கோபங் என்பன வாகும். முக்கிய ஆறுகள் உமேடோம், ஆங்கர்மான், தால்.




மக்கள் தொகை: 2011 கணக்கெடுப்புப்படி 9,415,295 மக்கள் வாழ்கின்றனர். விளையாட்டு கால்பந்தாட்டம், அய்ஸ் ஹாக்கி மற்றும் குதிரை விளையாட்டுகளை பெண்கள் பெரிதும் விரும்புகின்றனர்.



முக்கிய சுற்றுலாத் தளங்கள் ஸ்டோக்ஹோம், கோதென்பர்க், உப்சாலா, தென்கிழக்குக் கடற்கரை, மால்மோ என்பனவாகும்.



# நான் சென்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில்




நான் வரதராஜப் பெருமான் கோவில் வரலாற்றை வாய் மூலம் அறிந்து கொண்டேன். நான் சென்றபோது அந்தக் கோயில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது அந்தக் கோயிலுக்குச் சென்ற போது பாதை கரடுமுரடாக இருந்தது. கோயிலுக்குப் பின்புறம் பற்றைகள் வளர்ந்திருந்தன. பழமை வாய்ந்ததாகவும் காணப்பட்டது. கோயிலின் வரலாறு அற்புதம் ஒன்றுடன் ஆரம்பமாகிறது. அந்தக் கோயிலின் அற்புதம் என்னவென்றால், கடலில் மிகப்பெரிய ஆமையை பிடித்த கடற்றொழிலாளர்கள் அதனை இழுத்து வந்தபோது அந்த ஆமை கல்லாக மாறியது. அந்த இடத்தில் உருவாகிய கோயிலே "பொன்னாலை வரதராஜப் பெருமான் கோயில்" ஆகும். கல்லாக மாறிய ஆமை தற்போது மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ளது. மீன் பிடிப்பவர்களால் இழுத்து வரப்பட்ட அந்த அதிசய ஆமையின் பெயர் "பொன்னாமை" ஆகும். இதனால் அதன் பின் சில வருடங்களில் பெயர் "பொன்னாலை" என பெயர் மாற்றப்பட்டது. அந்தக் கோயில் கண்ணபிரான் எழுந்தருளி இருக்கும் கோயில் ஆகும். அங்கு எழுந்தருளி இருக்கும் பெருமான் வரதராஜப் பெருமான். வரதராஜப் பெருமான் கோயில் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

ச.லக்ஷன்
யாழ்.இந்துக் கல்லூரி

# பீவர்







அணை கட்டும் திறமையுள்ள பீவர் கொறித்து உண்ணும் பிராணிகளில் பெரியதாகும். தன்னுடைய கூர்மையான பற்களினால் மரங்களின் அடிப் பகுதியைக் கொறித்து அறுத்து மரங்களைக் கீழே சாய்க்கும். பின்னர், மரத்தைத் துண்டு துண்டாகச் செய்து ஆறுகளின் குறுக்கே அணையினைக் கட்டுகிறது. அணை கட்டி நீரைத் தேக்கும் குளங்களில் தம் வீடுகளை அமைக்கின்றன. மரத்துண்டுகள், கிளைகள், பாறைகள், மண் முதலியவற்றைக் கொண்டு ஒரே அறையுள்ள சிறு வீடுகளைக் கட்டிக்கொள்கின்றன. பீவர்கள் ஒரு மீற்றர் நீளம் வரை வளரக்கூடியவை. வாலின் நீளம் மட்டும் 30 செ.மீ. ஆகும். இதன் முன்கால்கள் குட்டையானவை. பின்கால்களின் விரல்களிடையே சவ்வு போன்ற தோல் உள்ளது. பீவரின்நிறம் சிவப்பு கலந்த பழுப்பாக உள்ளது. இதன் முடி அடர்த்தியாகவும், மென்மையாகவும், பளபளப்பாகவும் இருக்கும்

மரப்பட்டைகள், வேர்த்துண்டு, தளிர்கள் போன்றவற்றைச் சாப்பிடுகின்றன. 2 வகையான பீவர்கள் காணப்படுகின்றன. ஒரு வகை வட அமெரிக்காவிலும், இன்னொரு வகை ஐரோப்பாவிலும், வட ஆசியாவிலும் காணப்படுகின்றன.



அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டியில்சிறார்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக்குருவி! சிட்டுக்குருவி சேதி தெரியுமா?

■ தொல்புரம் சி. கதிர்காமநாதன்

சஞ்சிகையில் பிரசுரமான அந்த செய்தியைப் படித்த போது அதிர்ச்சியாக இருந்தது. காரணம், இதுவரை அது பற்றிஅறியாமல் இருந்ததுதான் நினைக்கக் கவலையாக இருந்தது. எம்மைச் சுற்றி எவ்வளவு விடயங்கள் நடக்கின்றன. நான் படித்த விடயம் வெளியாகி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன என்ற தகவலும் மேலும் ஆச்சரியத்தைத் தந்தது. நாமும் இன்னமும் பல விடயங்களைத் தேடிப் பிடித்து கற்க வேண்டிய நிலையில் தான் உள்ளோம். நான் படித்து அறிந்த செய்தி இது தான் "பங்குனி 20 ஆம் திகதியை சிட்டுக் குருவிகள் தினமாக அறிவித்துள்ளார்கள்.'' சூழல் மேல் ஆவல் கொண்ட சமூக ஆர்வலர்களுக்கு இப்படியாக இந்த சின்னம் சிறு சிட்டுக் குருவிகள் இனத்தின் மேல் திடீரென அக்கறையும் அதனைக் காப்பாற்ற வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

சரி இப்படி சிட்டுக் குருவிகள் தினமாக அறிவித்ததன் காரணம் தான் என்ன? இந்தக் குருவிகள் இனம் முற்றாக அழிந்து கொண்டு வருகின்றதாம். இந்தக் குருவிகளை முன்னர் போல் கண்களில் தென்படுவது பூமியில் அரிதான செயலாக வந்துவிட்டது. அவை மெல்ல மெல்ல எம்மை விட்டு போய்க் கொண்டு இருக்கின்றன. பாவம் அவை குருவிகள் மனிதர்களைப் போல் கள்ளப் பாஸ்போர்ட், கள்ள விசா எடுத்து, கள்ளத்தனமாக வாழத் தெரியாது. இந்தக் குருவி இனம் மறைந்து கொண்டு போவதற்கு யார் காரணம்? அரசியலா? கொடிய யுத்தமா?

அழிக்கப்பட்டு வரும் மரங்கள், வேகமாகச் சுருங்கி வருகின்ற விளை நிலங்கள், இதனால் அருகிவிட்ட புழு, பூச்சிகள், பெரிய பெரிய தொலைபேசிக் கோபுரங்கள் என்று இயற்கையை துவம்சம் செய்யும் காரணிகள், அறிவு வளர்ந்த மனிதர்கள் தாம் மட்டும் வாழ வேண்டும் என்ற அகம்பாவத்தால், சுயநலத்தால், தொன்று தொட்டு அவனோடு சேர்ந்து வாழ்ந்த அந்தச் சிட்டுக் குருவிகள் இனத்தை அழித்துக் கொண்டு வருகிறான்.

நீங்கள் எப்போது இந்த "சிட்டுக் குருவியை பார்த்தீகள்? ''எனக்கு வேலை காரணமாக மன்னாரில் அப்பாவுடன் இருந்தபோது, அரசாங்க விடுதியில் உள் பகுதியில் மேலே அட்டைப் பெட்டிகளில் அமைந்த கூடுகளில் சிட்டுக் குருவிகளை அப்போது பார்த்தேன். விடுதியில் இருக்கும் காலப் பகுதியில் சிட்டுக் குருவிகள் எமது வாழ்வோடு பின்னிப்பிணைந்து நின்றன பறப்பதும் வருவதுமாக ஒரு நேரம் தன்னும் ''சும்மா'' இராமல் பறந்தோடித் திரியும். உல்லாசப் பறவைகள் அவை. அவை இந்தப் பெரிய மனிதர்களைக்கண்டு அஞ்சி ஓடுவதில்லை. எம்மை திட்டுவதும் இல்லை. இருக்கும் வரை சந்தோஷமாக வாழ்வோம் என்ற நிலையில் இருந்தன.



மனிதர்களின் பார்வைக்கு, கைக்கு எட்டும் தூரத்தில் அவை வாழ்ந்த படியால்தான் கவிஞர்களும், அதனை மறந்து விடவில்லை. சிட்டுக் குருவியை யார் தான் வெறுப்பார்கள்? அவை பாடல்களிலும் இடம்பிடித்தன "சிட்டுக் குருவி முத்தம் கொடுத்து சேர்ந்திடக் கண்டேனே என்றும், சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு, தென்றலே உனக்கேது சொந்த வீடு எனவும், சிட்டுக் குருவி சிட்டுக் குருவி சேதி தெரியுமா? என்னை விட்டுப் பிரிந்து போன கணவன் வீடு திரும்பல்லே''.

இப்படி பல வடிவங்களில் எல்லோருடைய இதயங்களிலும் இடம் பிடித்த சிட்டுக் குருவிகள் இனம் காப்பாற்றப் படவேண்டும் என்ற குரல்கள் இப்போது ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன. மனிதர்களோடு அன்று தொடக்கம் வாழப் பழகிக் கொண்ட குருவி இனத்தை ஏன் மனிதன் மறந்து போனான். சிட்டுக்குருவி இனம் ஏன் அழிகின்றது? அதை நாம் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எமக்கு வராது போனால் மனித இனம் அழிந்து போவதையும் யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். நாமும் யோசிக்க வேண்டும்.

"சிட்டு" என்ற ஆவணப் படத்தை இயக்கிய சூழலியலாளரான கோவை சதாசிவம் இப்படிக் கூறுகிறார். ஓட்டு வீடுகளும், குடிசைகளும் தான் சிட்டுக் குருவிகள் கூடு கட்ட ஏற்ற இடம். இப்போது இவை குறைந்து விட்டன. நகரங்களில் இத்தகைய வீடுகள் இல்லாமல் போய்விட்டன. இதே நிலையில் சிட்டுக்களுக்கு உணவு கிடைப்பது இல்லை, முன்பு வீட்டு முற்றத்தில் தானியங்கள் பரப்பி காயப் போடுவார்கள். உணவுப் பாத்திரங்களை வெளியில் போய் கழுவுவார் கள். இதனால் குருவிகளுக்கு உணவு கிடைக்கும். இப்போது உணவுகள் எல்லாம். 'சிங்க்' என்னும் தொட்டி வழியாக சாக்கடைக்குப் போய் விடுகின்றன. நகரத்தில் இப்படி நிலை என்றால் கிராமத்தில் வயல்களில் பயன்படுத்தப்படும் பூச்சி கொல்லிகள் சிட்டுக் குருவிகளுக்கு பெரும் ஆபத்தாக உள்ளன. பூச்சிக் கொல்லிகள் அடிப்பதனால் தாவரங்களில் இருந்து புழுக்கள் கிடைப்பது அரிதாகிவிட்டன. குருவிகளின் குஞ்சுகளுக்கு உணவாகப் புழுக்கள் இல்லை, இதனால் குஞ்சுகள் இறந்து போய் விடுகின்றன.


எப்படி இருக்கிறது? சிட்டுக் குருவிகள் இனம் அழிவதற்கு முக்கிய காரணங்கள் அவை வாழ்வதற்கு ஏற்ற உணவும், உறைவிடமும் இல்லாமையே காரணம் ஆகும். இவை இல்லாவிட்டால் உலகில் எந்த உயிரினமும் உயிர் வாழல் என்பது மிகவும் கஷ்டமான காரியமாகும். இங்கேயும் இலங்கைத் திருநாட்டில் குருவிகள் போல் அழிந்து போய்க் கொண்டிருக்கும் இந்த குருவிகள் இனத்தைப் போல தமது இருப்பிடத்தைத் தக்க வைக்க போராடிக் கொண்டிருக்கிறது ஒரு மனித இனம். எம்மை எமது சொந்த இடத்தில் குடியமர்த்துங்கள், சுயமாக வாழ விடுங்கள் என அறை கூவல்விட்டுக் கொண்டு இருக்கிறது.

இங்கு பல வருடங்களாக நடைபெற்ற போரால் வாழ்ந்த பல குருவிகள் இடம் பெயர்ந்து பறந்து சென்று வெளி இடங்களில் கூடுகள் கட்டிக் கொண்டு விட்டன. வழி தெரியாத குருவிகள் மட்டும் இங்கு கூடுகள் கட்டி வாழ்ந்து வருகின்றன. சிட்டுக் குருவி! சிட்டுக்குருவி! இந்த மனித வரலாறு உனக்குத் தெரியுமா?

# முகேஷ் அ...

## கேள்விக் குற...

## கனவு மா...



ரிலையன்ஸ் நிறுவன அதிபர் முகேஷ் அம்பானியின் கனவு மாளிகையான 'ஆன்டிலியா' தற்போது சிக்கலில் மாட்டியுள்ளது. உலகிலேயே மிகப்பெரும் செலவில் கட்டப்பட்டதாகப் பெருமையடித்துக் கொண்டு முகேஷ் அம்பானி கட்டிய வீட்டின் பெயர்தான் 'ஆன்டிலியா'. ஆன்டிலியா என்றால் மர்மத் தீவு என்று அர்த்தமாம். அதிகார வர்க்கத்தின் அந்தப்புரங்கள் எல்லாமே மர்மம் நிறைந்த தீவுகள்தான்.

மும்பையில் மலபார் ஹில்ஸ் என்னும் பகுதியில் இந்த வீடு கட்டப்பட்டுள்ள இடம் வக்பு வாரியத்துக்குச் சொந்தமானது. வக்பு வாரியத்தின் மூலம் இஸ்லாமிய மாணவர்களின் கல்விக்காக பாடசாலை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இந்த இடத்தில் கரீம் பாய் இப்ராகிம் பாய் கோஜா எனும் டிரஸ்ட் ஆதரவற்றோர் காப்பகம் ஒன்றை நடத்தி வந்துள்ளது.

இந்த டிரஸ்ட் நிர்வாகிகளைக் கையில் போட்டுக் கொண்டு சுமார் ஐநூறு கோடி ரூபா மதிப்பிலான இடத்தை வெறும் 21.5 கோடி ரூபாவுக்கு முகேஷ் அம்பானி வாங்கியுள்ளார். டிரஸ்ட் நிர்வாகிகள் வக்பு வாரியத்தின் அனுமதியின்றி இவ்வளவு குறைந்த விலைக்கு அம்பானியிடம் நிலத்தை விற்றுள்ளனர். அதாவது வக்பு வாரியத்துக்குச் சொந்தமான இடத்தை முகேஷ் அம்பானி எனும் உலகின் மிகப்பெரும் பணக்காரர் முறைகேடாக வளைத்துப் போட்டிருக்கிறார்.

இந்த...
மீது சி.பி...
கியுள்ள...
நடந்திரு...
மீண்டும்...
புள்ளது...
கனவு இ...
ஆனால்...
அம்பா...
பேச்சுக்...
முதலாள...
ஐயா...
யட்ட இ...
எல்லாப்...
ளுக்கு...
போய்...
முறைப்...
இந்த ம...
இந்தக்...
சில வெ...
நீச்சல்...
சினிமா...
பனியன...
தோட்ட...
சொகுசு...

# அதன் பெயர் லட்சியம்

**நன்றி - கண்ணதாசனின் கடைசிப் பக்க...**

அலைகடலில் அந்தக் கப்பல் மிதந்து கொண்டிருந்தது. ஆறு மாத காலமாகவே அது மிதந்து கொண்டுதான்இருக்கிறது.

கருங்கடலில் இருப்பதாகக் குறிப்பிட்ட ஒரு தீவைக் கண்டு பிடிக்க அது போய்க் கொண்டிருந்தது.

அந்தத் தீவு மட்டும் கண்டு பிடிக்கப்பட்டு விட்டால், அந்தக் கப்பலில் பயணம் செய்த இருநூறு பேருக்கும் வளமான ஒருநாடே கிடைத்துவிட்டதாக கருத்து. கப்பல் தலைவன் கெட்டிக்காரன்; நம்பிக்கைக்குரியவன். அப்படியொரு தீவு இருப்பதை அறிந்தே அவன் பயணம் தொடங்கியிருந்தான். வாழ வழியில்லாதவர்கள் இருநூறு பேருக்கு வளமான வாழ்வை உருவக்குவதே அவன் திட்டம். அதற்கென அவன் குறித்த இலக்கே அந்தத்தீவு.


பலவகைக் கடல்களையும் தாண்டி கப்பல் போய்க் கொண்டிருந்தது. கடல் கொந்தளிப்பினாலும் பருவக் கோளாறினாலும் "மூன்று மாதங்களில் அடையலாம்'' என்ற கணக்குத் தவறிவிட்டது; ஆறு மாதங்கள் ஓடிவிட்டன.

தேவைக்கென சேமித்து வைத்திருந்த உணவுப் பொருள்களும் வசதிகளும் வெகுவாகக் குறையத் தொடங்கின. ஒருநாள் அவை அறவே இல்லாமல் போய்விட்டன. கப்பல்தலைவனோ பசியையும் தூக்கத்தையும் பொருள்படுத்தாமல் சுக்கானைப் பிடித்தபடி இருந்தான்.

பயணம் செய்தவர்களுக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது. "எப்படியும் நாம் அந்தத் தீவை அடைந்து விடுவோம்'' என்று தலைவன் ஆறுதல் சொன்னான்.

அந்த ஆறுதலால் அவர்கள் பசி அடங்கவில்லை. ''எங்களுக்குப் பசிக்கிறது! பசிக்கிறது!'' என்று அவர்கள் சத்தமிட்டார்கள்.

''நாம் விரைவில் அந்தத் ... காய்களும் கனிகளும் கேட்பாரின்றிக் குவிந்துகிடக்கின்றன. பசிக் கொடுமையைக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். கடலில் நிறைய மீன்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட இலக்கை அடையும் வரை அந்த மீன்களை மட்டுமே உணவாக உட்கொண்டு நாம் வாழ்ந்து விட முடியும். நிரந்தர இன்பத்துக்காக தற்காலிக துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். நாம் ஒரு லட்சியத்தை நோக்கிப் பயணம் செய்கிறோம் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள். சோதனைகளை கட்டுப்பாடோடு சகித்துக் கொள்வதன் மூலம் தான் ஒளிமயமான எதிர்காலத்தை நாம் பெறமுடியும்.



"உழுகின்ற காலத்தில் அரைவயிறு தான் கிடைக்கும்; சமயங்களில் கிடைக்காமலும் போகும். அறுவடைக்குப் பின் அற்புதமான சாப்பாடு கிடைக்கும். நாம் நமது இலட்சியத்தை அடைகிற வகையில் தயவு செய்து பொறுமையாக இருங்கள்'' தலைவன் எவ்வளவோ கெஞ்சினான். ஆனால், அவர்களோ வெறும் மீனை மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருக்கத்தயாராயில்லை.

''எங்களுக்கு இந்த உணவு அலுத்துப் போய்விட்டது. வேறுவகை உண... வேண்டும்.! என்று கத்தினார்கள். அவர்கள் பொறுமையோடு இருக்கச் சக்தி அற்றவர்களானார்கள். எல்லோருமாகச் சேர்ந்து கப்பல் தலைவனை உதைத்தார்கள்; அடி தாங்காமல் அவன்மரணம் அடைந்தான். கப்பல் திக்கு முக்காடித் திசை தடுமாறி ஓடத் தொடங்கியது. சூறாவளியில் சிக்கி... கப்பல் மூழ்கத் தொடங்கியது. என்ன செய்வது; அவன் இனி வரமாட்டான்!


கப்பல் மூழ்கிவிட்டது; இனி அவர்களுக்குப் பசியே எடுக்காது. நம்பிக்கை வைத்து ஒருவனைப் பின் தொடரும்போது ... அவசரக்காரனாக இருந்தால் அதுவரையில் பட்ட கஷ்டம் வீணாகிவிடும்.

ஒட்டகத்தில் ஏறியவன் ஊர் போய்ச் சேரும் வரை அதைக் கொன்று விடக் கூடாது. அரசாங்கக் கப்பலையும் ஒரு தலைமை ஓட்டிக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட இலக்கை அடையும் வரையில் கொடுமைகளைத் தாங்கிக் கொள்வதே வெற்றிக்கு வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பானியின்

## குறியாகும் மாளிகை





இந்த நில மோசடி விவகாரத்தில் அம்பானியின் மீது சி.பி.ஐ. வழக்குத் தொடரும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்த நிலம் கைமாறியிருப்பதில் மோசடி நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டால் இந்த நிலம் மீண்டும் வக்பு வாரியத்தின் வசமே போக வாய்ப்புள்ளது. அப்படி ஏற்படும் பட்சத்தில் அம்பானியின் கனவு இல்லம் அவரிட மிருந்து பறிபோகக் கூடும். ஆனால் மகாராஷ்டிரா அரசு இந்த விஷயத்தில் அம்பானியின் மீது சி.பி.ஐ. வழக்கு தொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறி தனது முதலாளி விசுவாசத்தைக் காட்டியுள்ளது.

ஐயாயிரம் கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த வீட்டில் என்னென்ன வசதிகள் எல்லாம் உள்ளன என்பது பற்றி சில நாள்களுக்கு முன்பு வெகுசன ஊடகங்கள் பிரமித்துப் போய் எழுதிக் குவித்தன. வாஸ்து சாஸ்திர முறைப்படி கட்டப்பட்ட 27 மாடிகள் கொண்ட இந்த மாளிகையில் இல்லாத வசதிகளே இல்லை. இந்தக் கட்டடத்தில் சுமார் முன்னூறு கார்களும் சில ஹெலி கொப்டர்களும் நிறுத்தி வைக்கலாம். நீச்சல் குளங்கள், உடற்பயிற்சிக்கூடங்கள், சினிமா தியேட்டர், செயற்கைப் பனி நிறைந்த பனியறை, மூன்று மாடிகளில் அழகான தொங்கு தோட்டங்கள், விருந்தினர்களுக்கென்று தனித்தனி சொகுசு அறைகள், கண்களைக் கவரும் உள் அலங்காரங்கள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த வீடு கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போதே பல்வேறு விமர்சனங்களைச் சந்தித்தது. தினம் ஒரு வேளை உணவுக்கு வழியின்றி வறுமைக் கோட்டுக்கு கீழ் வசிக்கும் பெரும்பாலான மக்களைக் கொண்ட தேசத்தில் ஒரு தனி மனிதன் தன்னுடைய குடும்பத்துக்காக இவ்வளவு பொருள்செலவில் வீடு கட்டுவதா என்று விமர்சிக்கப்பட்டது. பெரும்பாலான வெகுசன ஊடகங்கள் அம்பானியின் மாளிகையை இந்தியாவுக்கே பெருமை சேர்க்கும் நினைவுச் சின்னமாக புகழ் பாடின. இந்தியாவின் இன்னொரு தாஜ்மகால் என்றே ஒரு பத்திரிகை பட்டம் சூட்டி மகிழ்ந்தது.

உண்மையில் இவ்வளவு பொருள் செலவில் ஒரு மாளிகையை தனிப்பட்ட ஒரு முதலாளி தன்னுடைய நேர்மையான உழைப்பின் மூலம் கட்டுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதை பொருளாதார உணர்வுள்ள யாரும் ஒப்புக்கொள்வார்கள். இவ்வளவு பணமும், இன்னும் அவர் வசம் குவிந்து கிடக்கும் ஏராளமான சொத்துகளும் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி, வாடிக்கையாளர்களை நம்ப வைத்து மயக்கி, அரசு நிர்வாகத்தில் இருக்கும் தன் விசுவாசப் பிரதிநிதிகளின் மூலம் முறைகேடாக சலுகைகளைப் பெற்று, அரசுக்கும் மக்கள் பணத்துக்கும் பல இழப்புகளை ஏற்படுத்தி சேர்த்தவைதான்.

இப்போதும் அவர் சி.பி.ஐ. வழக்கிலிருந்தும் விசாரணையிலிருந்தும் தன் மாளிகையை காப்பாற்றிக் கொள்வதற்கு எம்மாதிரியான வழிகளையும் கையாள்வார். அதற்குத் தேவையான பண பலமும், அதிகார பலமும், அவருடைய அடிகளை வருடும் ஊடகங்களின் பிரசார பலமும் அவருக்கு நிறையவே உள்ளன. இருப்பவனுக்கும் இல்லாதவனுக்குமான இடைவெளி தொடர்ந்து அதிகரிப்பதால்தான் அம்பானி போன்ற முதலாளிகளின் நலன் அடங்கியிருக்கிறது. இந்த இடைவெளி குறைந்து விடாமல் காப்பதற்கு அவரைப் போன்ற முதலாளிகளும் முதலாளித்துவமும் தொடர்ந்து தன்னால் இயன்ற எதையும் செய்வார்கள். இந்தியாவில் ஏழைக்கும் பணக்காரனுக்குமான இடைவெளியின் அப்பட்டமான வெளிப்பாடாய் உயர்ந்து நிற்கிறது 'ஆன்டிலியா' எனும் மர்ம மாளிகை.

# மீன்பாடும் தேன் நாட்டின்

## பண்பாட்டு அம்சங்கள் பற்றிய ஒரு நோக்கு!



அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை.

மட்டக்களப்பு பண்பாட்டு அம்சங்களில் கிழக்கு மாகாணத்தில் பயில் நிலையில் உள்ள பரம்பரைக் கலை வடிவங்க ளைப் பயிற்றுவிப்பவர்களான அண்ணாவியார்கள் பற்றி சிறிது நோக்குவோம்.

கிழக்கு மாகாணத்தில் பயில்நிலையில் இருந்துவரும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களைப் பயிற்றுவிக்கின்ற பொறுப்பை அண்ணாவிமார் தம்வசம் வைத்துள்ளனர். இதனால் அண்ணாவிமார் நியமனம் இவர்களுக்கு சுலபமாகக் கிடைத்து விடுகின்றது என்றும் கூறலாம். அதாவது இந்தப் பாரம்பரியக் கலையை பயிற்றுவிப்பவர்களுக்கே தெரிவின் போது முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. மேலும் அவர்களிடம் இருக்கின்ற மத்தளத்தை அடிக்கின்ற திறமையும் அண்ணா விமாரை கூடியளவு இனங்கான உதவுகிறது. இது அவர்களது அடிப்படைத் தகுதியும் கூட எனவும் கொள்ளலாம். கூத்து அரங்கேற்றத்தின்போது மத்தளம் அடிக்கும் இந்தப் பயிற்சி அதன் முக்கிய கட்டத்தை அடைகிறது என்பது கண்கூடு.

மட்டக்களப்பு நாட்டாரியல் பண்பாட்டு அம்சங்களில் உருவாக்கப்படுகின்ற அண்ணாவிமார் மத்தளம் அடிக்கும் அளவுக்கு கூத்தினை ஒழுங்காக ஆடக்கூடியவராகவும் இருப்பது அவசியமாகும். எனவே சமுதாய நோக்கில் அண்ணாவிமாருக்குரிய முக்கியத்துவத்தை நிலைபெறச் செய்வோம்.

இறுதியாக மட்டக்களப்பு நாட்டாரியலில் அருகிவருகின்ற பாரம்பரிய அருந் தமிழ்க் கலைகள் பற்றி நோக்குவோம். அருகிவரும் பண்டைய தமிழ்க் கலைகளை பட்டியலிடுவோமாகில் அவை பின்வருமாறு அமைந்துள்ளதைக் காணலாம்.

**ஒன்று - நாட்டுக்கூத்து**
**இரண்டு - வசந்தன் கூத்து**
**மூன்று - மேடைக்கூத்து**
**நான்கு - எண்ணெய்சிந்துப் பாடல்**
**ஐந்து - வைகுந்த அம்மானைப் பாடல்**
**ஆறு - மகிடி காட்டுதல்**

என்பனவாகும்.

நாட்டுக்கூத்து வடமோடி, தென்மோடி என இரு வகைப்படும். வசந்தன் கூத்தானது மழையை வேண்டி பிரார்த்திக்கும் அம்மன் வழிபாட்டுடன் கூடியதாகும். மேடை நாடகங்களைப் பொறுத்தவரை சமூக சீர்திருத்த நாடகங்கள், ஓரங்க நாடகங்கள் என வகுக்கலாம். குருபக்தி, தெய்வீக உணர்வு, நல்லொழுக்கப்படுதல் போன்ற இயல்புகளைக் கொண்டதே எண்ணெய் சிந்துப் பாடலாகும்.

மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்கள் கோன்முறை அரசு மேற்கொண்டு இறுதியில் வைகுந்த வாழ்பதியைச் சேர்ந்த பெரும் பேற்றைச் சித்திரிப்பதே வைகுந்த அம்மானைப் பாடலாகும். மகிடிகாட்டுதல், அரங்கேற்றுதல் பொதுவாக சித்திரைப் புத்தாண்டு தினங்களில் கோயில்களின் புறவீதியில் இடம் பெறுவது வழக்கம்.

எனவே மிலேனியம் ஆண்டாக மிளிருகின்ற இன்றைய காலகட்டத்தில் கூட மட்டக்களப்பு நாட்டாரியல் பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கும் பாரம்பரிய கலைகளை ஊக்குவிக்கும் பணியில் கலை ஆர்வம் மிக்கவர்கள் ஈடுபடுகின்றனர் என்பது புத்திஜீவிகளது கூற்றாகும்.

(முற்றும்)



# விதியை மதியால் வெல்ல உதவுகின்ற கைரேகை

■ தர்மா

“ விதி அனேகமாக மனிதர்களின் மதியையும் தனது ஆளுமையின் கீழ்க் கொண்டுவந்து விடுகின்றது. மதிக்குள் ஒளிந்து கொண்டு விதி தனது ஆற்றலை வெளிப்படுத்தியவண்ணமே இருக்கும்.


சிறுகோடுகளைக் கொண்ட அந்தத் தேசத்தின் படத்தை வைத்து அந்த நாடு நிலை கொண்டுள்ள மையம், சீதோஷ்ணநிலை என்பவற்றையும் கூறிவிடலாம். இதற்கு கற்பனைக் கோடான 'யு'வும் பூமத்திய ரேகையயும் (EQUATTER) தனது பங்களிப்பினை நல்கின்றது எனலாம். ஆகவே ஒரு நாட்டுக்கு தேசப்படம் எவ்வளவு முக்கியமோ அதே போன்று கைரேகை நமக்கு அவசியமான ஒன்றாகும்.

நாம் இதற்கு முன் எந்தப் பிறவியும் எடுக்கவில்லை. மரித்த பின் இன்னொரு பிறப்பு ஏற்படப்போவதில்லை என்பது ஐரோப்பியர்களது வாதம் ஆகும். நாம் இதற்கு முன் ஒரு பிறவி எடுத்திருந்தோம் இறந்த பின்னரும் வேறு பிறவி நமக்கு உண்டு என்று இந்துக்கள், பௌத்தர்கள் பரவலாகப் பேசிக் கொள்கின்றனர்.

ஒரு கைரேகை பார்க்கும் சோதிடரிடம் தன்கையைக் காட்டும் ஒருவர் கேட்கும் முதல் வினா? என்னுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதாகும்.

எமது கையில் ஆயுள்ரேகை, புத்திரேகை, இருதய ரேகை என்பன பொதுவானதாகும். மேலும் விதிரேகை என்பது என்ன? என்பதை சற்று ஆராய்வோம். விதி அனேகமாக மனிதர்களின் மதியையும் தனது ஆளுமையின் கீழ் கொண்டுவந்து விடுகின்றது. மதிக்குள் ஒளிந்து கொண்டு விதி தனது ஆற்றலை வெளிப்படுத்தியவண்ணமே இருக்கும். பகுத்தறிவு உள்ள மனிதனால் விதியின் செயலாண்மையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும். இந்த விதி ரேகை சந்திர மேட்டிலிருந்தோ, ஆயுள் ரேகையிலிருந்தோ, சுக்கிர மேட்டிலிருந்தோ கங்கண ரேகையிலிருந்தோ தொடங்கி மேல் நோக்கிச் செல்கிறது.

இந்த விதிரேகை யைச் சனிரேகை, தனரேகை, தொழில் ரேகை, அதிர்ஷ்ட ரேகை என்று பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றனர் [illegible] இந்த விதிரேகை நன்மை தருவதா? தீமை தருவதா? என்பதைக் கண்டறிய முடியும். தீமை தருவதாக இருந்தால் அதை மாற்ற என்ன முயற்சி செய்ய வேண்டும் என்பதை கைரேகை ஜோதிடரிடம் சென்றால் பரிகாரம் உண்டு. விதியை மதியால் வெல்ல முடியும் என்ற மதிப்பிற்குரிய கொள்கையை அலட்சியம் செய்யாமல் வாழ்ந்தால் வாழ்வு வசந்தம் ஆகும்.




ஆகவே விதியை மதியால் வெல்ல உதவுகின்ற கைரேகையின் சிறப்பினை புறந்தள்ளலாகாது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## ஆச்சி அச்சாப்பாட்டி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நாடகத்துறை விரிவுரையாளர் க.இ.கமலநாதனின்சிறுவர் நாடகங்களும், கதைகளும் அடங்கிய ''ஆச்சி... அச்சாப்பாட்டி'' எனும் நூல் வெளிவந்துள்ளது.

சிறுவர்களின் விருப்புகளும், திறன்களும் வெளிப்படும் வகையில் இசைகலந்த பாடல்களோடும் எளிமையான வசன நடைகளோடும் ஆக்கப்பட்ட ஏழு சிறுவர் நாடகங்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. கதைகளாக அவை தரப்பட்டுள்ளன. நடிப்புக்கும், மகிழ்ச்சிக்கும் உதவும் வகையில் கதைகளைத் தாங்கி உள்ள இந்த நூலை வாசிப்பதற்கு ஊக்குவிப்பதை நூலின் விசேட அம்சமாக அவதானிக்கலாம்.

ஒவ்வொரு நாடகமும் சிறுவர் சேர்ந்து நடிக்கப் பயிற்றும் ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு உகந்தவையாகும்.

சிறுவர் நாடகங்கள் என்ற வகையில் நாடகங்களின் கதாபாத்திரங்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன என அமைந்து சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் ஒப்பனைகளைக் கொண்டுள்ளன. பாடி ஆடி நடிக்க ஓசை நயமிக்க பாடல்கள் பலவும் உள்ளன.




சிறுவர் இலக்கியத்தில் சிறுவர் நாடக ஆக்கங்களின் வரிசையில் ''ஆச்சி - அச்சாப்பாட்டி''க்கும் சிறப்பான இடமுண்டு எனலாம்.

## இன்றைய உலகம் - 2012




திடீர் திடீரென மாறிவரும் உலகின் சூழலில் பயனுள்ள நிலைத்திருக்கும் தகவல்களுக்கும் அப்பால் பொது அறிவை நிலை நிறுத்தல் என்பது பரீட்சைக்குரியதாகவே பார்க்கப்படுகிறது.

அந்த நோக்கத்தோடு பொது அறிவு வினா விடைத் தொகுப்பு ஒன்றினை '' இன்றைய உலகம் 2012'' எனும் தலைப்பிட்டு வெளியிட்டுள்ளார், இதன் தொகுப்பாசிரியரான அதிபர் இரா.ஜெயக்குமார். தனது தந்தையாரான சிவக்கொழுந்து இராசாவுக்கு இந்தத் தொகுப்பு நூலை சமர்ப்பணம் செய்துள்ளார்.

இன்றைய சமகால அரசியல் வினாக்களுக்கும் கல்வி வரலாற்று வினாக்களுக்கும் ஏனைய அறிவியல் தொழில்நுட்பம், கலை, பொருளாதாரம் போன்றவற்றுக்கும் விடை தந்து பொது அறிவைப் பெற மாணவரையும் இன்றைய பொதுப் பரீட்சைகளை எதிர்நோக்குவோரையும் நூல் கவர்ந்து நிற்கிறது.

கையடக்கமான சிறிய நூலெனினும் உள்ளடக்கியுள்ளவை பயனுள்ள பொது அறிவுப் பொக்கிஷமாகும்.

## நிசப்தத்தில் வழியும் உயிர்த்துடிப்பு

வாழ்வில் அசைபோடும் மெல்லியதாக மனதில் ஒரு மூலையில் தூங்காமல் இருக்கும் பக்கங்களை ''நிசப்தத்தில் வழியும் உயிர்த் துடிப்பு'' என்ற கவிதைத் தொகுப்பாக யாழ்.பல்கலைக்கழக 3 ஆம் வருட மொழியியல் துறையைச் சேர்ந்த விஜிதா ரகுநாதன் வெளிக் கொண்டு வந்திருக்கிறார்.

தமிழ் மக்களிடம் காணப்படும் சமகாலப் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி நிற்கிறது. இவரது கவிதைகள் கவிதை வரியின் மொழி நடை கவிதையை மேலும் மெருகூட்டுகிறது. ஈழத்துத் தமிழர்களின் வாழ்வில் இடம்பெற்ற சோகங்களின் பிரதிபலிப்பாகவே சில வார்த்தைகள் வந்து குவிகின்றன. ஈழத்தில் போர் முடிந்து போயிருக்கலாம். போரில் ஈடுபட்டவர்களின் கைகளில் இருந்த ஆயுதங்களின் அலறல் சத்தம் இப்போது ஓய்ந்து போயிருக்கலாம். அதுவே சிலருக்கு அமைதிக்கான அடையாளமாகவும் தெரியலாம். ஆனால் போரின் வடுக்களை உடலெங்கும் சுமந்து பசித்த வயிற்றோடு பஸ் தரிப்பு நிலையங்கள் தோறும் பசிக்குது என்ற பச்சைப் பாலகர்களின் பரிதாபக் குரலைக் கேட்கின்ற போது மனித இதயங்கள் ஒரு கணம்




நின்று துடிக்கும் அந்தப் பசியின் குரல்கள் இதயங்களை [illegible] எம் [illegible] விஜிதாவின் கவிதைகள் மூலம் பார்க்க முடியும்.

## ஆறுமுகத்தின் கைபட்டால் பட்ட மரமும் துளிர்த்துவிடும்



யாழ். குடாநாட்டின் மேற்கே அமைந்த மூளாயூரில் 1924.04.13 ஆம் திகதி பிறந்தவர் அமரர் கதிரவேலு ஆறுமுகம். இவர் ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், உயர்தரக் கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்றார்.

படிக்கின்ற காலத்தில் ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ற முதன்மை மாணவராகவும் நல்ல விளையாட்டு வீரராகவும், தமிழ், சங்கீதம், கலை போன்றவற்றில் திறமை மிக்கவராகவும் திகழ்ந்து மாணவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கினார்.

மாணவப் பருவத்தில் படிப்போடு மட்டும் நின்றுவிடாது தாய் தந்தையருக்கு உதவும் விதமாக விவசாயத் தொழிலிலும் ஈடுபட்டார். ''ஆறுமுகத்தின் கைபட்டால் பட்ட மரமும் துளிர்த்துவிடும்'' தன்மையானதொரு கைராசிக்காரர்.

தமிழ் அறிஞர் க.பொ.இரத்தினம், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போன்றோர்களிடம் கல்வி பயின்று தமிழ் பண்டிதரானார். பின்னர் மூளாய் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் நியமனம் பெற்றார்.

### நீத்தார் நயப்புரை

நவாலி அட்டகிரிப் பகுதியில் கல்விச் சாலை இல்லாக் குறையை நீக்கும் பொருட்டு **Hindu Board** இராசரத்தினம் மற்றும் சிலரோடு சேர்ந்து ஓலைக்கொட்டிலொன்று போட்டு ''நவாலி அட்டகிரி'' சைவ வித்தியாசாலையை ஸ்தாபித்து கல்வி ஒளி வீசச் செய்தார். அங்கு ஆசிரியராக இணைந்த அவர் அதிபராகப் பதவியுயர்வு பெற்று அனைவரதும் நன்மதிப்பையும் பெற்றார்.

கண்டி புசல்லாவ சரஸ்வதி மகா வித்தியாலயம், வவுனியா கொந்தக்காரன்குளம் அரசினர் பாடசாலை, மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை, வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை என்பவற்றில் அதிபராகக் கடமையாற்றி தன்னுடைய 37 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

தமது பிள்ளைகள் அனைவரையும் பட்டதாரிகளாக்கி பொறியியலாளர், மருத்துவர், ஆசிரியர், கணக்காளர், முகாமைத்துவ உதவியாளர் ஆகிய உயர் பதவிகளைப் பெறச் செய்தார்.

பண்டிதராய்,புலவராய், கவிஞராய்,பேச்சாளராய் சோதிட விற்பன்னராய், தீர்க்கதரிசியாய், அரசியல் ஞானியாய், தமிழ்ப் பற்றாளனாய், ஆயிரமாயிரம் மாணவர்களின் நல்லாசானாய், கல்வியின் அதிபதியாய் விளங்கி 88 வயதில் அமரர் க.ஆறுமுகம் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**ந.சிவராணி ஆசிரியை**
**யாழ்ப்பாணம்**

## வள்ளுவத்தில் காலூன்றிய கவிஞர்கள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

''இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமையவர்''

என்பது வள்ளுவர் வாய்மொழியாகும்.

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்''

என்று வள்ளுவர் அழுத்தமாகக் கூறியுள்ளார். இக் குறள்பாக்களின் தாக்கத்தை

''கடிக்கும்வல் லரவும் கேட்கும்
மந்திரம் களிக்கின் றோயை
அடுக்கும் ஈதடாதென்று ஆன்ற
ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர்இல்லை;உள்ளார்
எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது
முடிவின்றி முடிவதுண்டோ?''



என்ற கம்பன் வரிகள் பெற்றுள்ளன.

**சிவப்பிரகாசரும் சீர்பெரும் குறளும்**

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றிய பெரியாரான சிவப்பிரகாசர் நூல்களில் திருக்குறள் பெறுகின்ற இடம் எத்தகையது என்பதை ஓரிரு மேற்கோள்களால் ஈண்டுக் காணலாம்.

(தொடரும்)

**சங்கரவள்ளி நாயகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப் பதர்கள்

இரண்டு பாடல் வரிகள், நான்கு நகைச்சுவைத் துணுக்குகள், ஒரு சில குட்டிக் கதைகள் தெரிந்திருந்தால் இப்போதெல்லாம் ஒருவர் சமயச் சொற்பொழிவாளர் ஆகிவிடலாம். இந்தத் தகுதிகளும் இல்லாமலேயே காவித்துணியும் கழுத்து மாலைகளும் இருந்தால் நீங்கள் சாமியாராகிச் சரித்திரம் படைக்கலாம்.

முன்பெல்லாம் ''என் பையன் சாமியார் ஆகிவிட்டான்'' என்று வருத்தத்தோடு சொல்வார்கள். இப்போது 'சாமியார் ஆகிவிட்டான்' என்றால், ''பரவாயில்லையே... ரொம்ப வசதியாகிவிட்டான் என்று சொல்லுங்க'' என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமை இருக்கிறது.

வள்ளலாரையும் தாயுமானவரையும் ஒப்பித்தால், இராம கிருஷ்ணரை மேற்கோள் காட்டிப் பேசினால் ஒருவர் சமயச் சொற்பொழிவாளர் ஆகலாம். சமயஞானி ஆகமுடியாது. சமய வியாபாரம் செய்யும் சாமர்த்தியசாலிகள் எல்லோரும் காரும் பணமும் சேர்க்க முடியும். ஆனால் கடவுளின் காலடி சேர்வார்களா? இது சந்தேகமே!

சமய ஞானம் என்பது சாமர்த்தியத்தின் குழந்தை அல்ல. அது இருதயத்தின் மலர்ச்சி. மலர்ந்ததும் மலரில் இருந்து பிறக்கிற மணம் மாதிரி... மொட்டு ஒன்றை கையால் பிரித்து மலர்ந்த மாதிரி ஆக்கிவிடலாம் . கவனம்! அப்போது அதிலிருந்து எந்த வாசனையும் வராது. ஆனால் காற்றும் காலமும் காதலித்து மலரைத் தொட்டுத் தழுவினால், அதன் தளை அவிழ்ந்தால் 'கமகம' என்று மணம் பிறக்கும்.

மணம் பிறக்கும்போது இதழ் விரிகிறது. ஆனால் இதழ்களை விரித்து வைத்திருப்பதாலேயே மணம் பிறக்க வேண்டிய கட்டாயம் இல்லை. இன்றைய சாமியார்கள் பலர் ஞானி மாதிரி. ஆனால் ஞானி அல்லர். கணினி கிராபிக் துணையுடன் அவர்களைச் சுற்றி ஒளிவட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அவர்கள் அருளாளர்கள் அல்லர்; அருளாளர் மாதிரி. ஞானி மாதிரி; ஆனால் ஞானி அல்லர். பெரியோர்கள் மாதிரி; ஆனால் பெரியோர்கள் அல்லர்.

பசி தீரச் சாப்பிட்டவனுக்கும் பசி தீரச் சாப்பிட்ட மாதிரி நடிப்பவனுக்கும் வித்தியாசம் உண்டா? இல்லையா? உடற்பயிற்சி செய்பவனுக்கும் செய்கிற மாதிரி காட்டிக் கொள்பவனுக்கும் வேறுபாடு தெரியுமா? தெரியாதா? தெரியும். இன்றைக்குப் பலர் தெய்வம் மாதிரி... ஆனால் தெய்வங்கள் அல்ல.

உள் அனுபவம் விளையாமல் இறைநிலைத் தோற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது அவ்வளவு நல்லதல்ல. அவமானப்பட வேண்டிய விடயம்.

இறைநிலை அனுபவம் இல்லாதவர்கள் இறைவனாக முடியாது! ஏன் அவ்வளவு தூரம்? கருணையும் அன்பும் நெஞ்சில் இல்லாதவர்கள் யேசுவின் படத்தைக் கூட ரசிக்க முடியாது- உணர முடியாது- போதுமா? ஒரு நிகழ்ச்சி சொல்கிறேன்.

லியானார்டோ டாவின்ஸி என்கிற உலகப் புகழ் பெற்ற ஓவியர் யேசுவின் வாழ்வில் பல நிகழ்ச்சிகளைப் படங்களாக வரைந்து கொண்டிருந்தார். யேசுவின் கடைசிச் சாப்பாடு என்கிற (Last Supper) ஓவியம் தீட்டியபோது அவருக்கு ஒரு வித்தியாசமான அனுபவம்.

அவருக்கும் இன்னொருவருக்கும் இடையில் சண்டை மூண்டு விட்டது. அவனைக் கடுமையாகத் திட்டிவிட்டார். டாவின்ஸி கோபம் நெஞ்சில் கொந்தளித்தது! கொப்பளித்தது! அவர் மனம் அமைதி இழந்தது.

அத்தகைய சாந்தம் மரித்த கோபத்தீயுடன் யேசுவின் கடைசிச் சாப்பாடு படத்தைத் தொடர்ந்து வரைய முற்பட்டார் டாவின்ஸி. யேசு பெருமானின் திருவுருவத்தை அவர் வரைய முற்பட்ட போது யேசுவின் முகம் வசப்படவில்லை. வரைந்த முகமோ அவருக்குத் திருப்தி தரவில்லை. தனது ஓவியத்திறமை முழுவதையும் பயன்படுத்தி முயன்றார். தோற்றார். முகம் திருப்திகரமாக வரவே இல்லை. அழித்து அழித்துப் பலமுறை வரைந்தும் அவருக்குத் தோல்வியே. வருந்தினார். ஆனால் உடனே திருந்தினார். தோற்றார். தோல்வியை ஏற்றார். அதனால் தோற்றவர் வென்றார்.

சுயஆய்வு செய்தார். கருணையே உருவமாகப் பிறரை எப்போதும் மன்னிக்கச் சொன்ன யேசுவை, மன்னிக்கும் பண்பில்லாத கோபம் கொண்ட மனத்துடன் தாம் வரைய முற்பட்டது தவறு என்று உணர்ந்தார்.

சண்டையில் தான் வைது வாடவைத்த அந்த மனிதனை நெருங்கினார். பழங்களும் இனிப்பும் கொடுத்து மன்னிக்க வேண்டினார். அவன் மீது அன்பைப் பொழிந்து மனம் நிறைவுற்றார். அவன் மலர்ந்த முகம் கண்டு அகம் மலர வந்து ஓவியத்தைத் தொடர்ந்தார்.

நிலவு பொழியும் யேசுவின் திருமுகமும் கருணை வீசும் கற்பகக் கண்களும் உடனே அவர் தூரிகைக்கு வசப்பட்டன. அன்பின் அனுபவமே யேசுவை வசப்படுத்தும்.



உள்ளே அரிசி இல்லாத நெல், நெல் அல்ல, பதர். உள்ளே அனுபவம் இல்லாத சாமியர்கள் மற்றும் சொற்பொழிவாளர்களின் சொல், சொல் அல்ல. அவை ஞானப் பதர்கள்!

சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## தனியார் பஸ்ஸில் நெருக்கடி இல்லாமல் பயணம் செய்யலாமா?

யாழ்.- தென்மராட்சி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்காரர்கள் பயணிகளுக்குரிய பயண வசதிகளைச் செய்கிறார்களோ இல்லையோ அவர்களிடம் அளவுக்கு அதிகமாகப் பணம் பறிக்கும் செயலில் மட்டுமே குறியாக இருக்கிறார்கள்.

நான் தினமும் தனியார் பஸ்ஸில் யாழ்ப் பாணத்துக்குச் சென்று வருகிறேன். உரிய முறையில் அரச போக்குவரத்துச் சேவை இல்லாததால் அதனைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

தனியார் பஸ்ஸில் பயணித்தால் நிர்ணயிக்கப்பட்ட பணத்தொகையை விட அதிகளவிலேயே ஒவ்வொரு இடத்தில் இருந்தும் சென்று வரும் ஒவ்வொருவரிடமும் வசூலிக்கின்றனர்.

மீசாலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல மேலதிகமாக 5 ரூபாய் அறவிடுகின்றனர். கைதடியிலிருந்து சென்று வரும் பயணிகளுக்கு 23 ரூபா அறவிடப்படவேண்டும். ஆனால் 25 ரூபா வீதம் வசூலிக்கின்றனர்.

கைதடியிலிருந்து செல்ல 23 ரூபாதானே எனக் கூறினால் இல்லை 25 ரூபா என்று சொல்கின்றனர். இல்லையில்லை 23 ரூபாதான் என்று சண்டை பிடித்தாலும் சில்லறைப்பணம் வைத்திருந்தும் அதனை இல்லையென்கிறார்கள்.

எம்மிடம் பணம் பறிப்பதில்தான் குறியாக இருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்களது பஸ்ஸில் நிம்மதியாகச் சென்று வர முடிகிறதா என்றால் அதுவும் முடியாது கிழங்கு அடுக்கினது போல நசித்து ஒவ்வொரு பஸ் தரிப்பிடத்திலும் உள்ளே போ என்று மிருகங்களைப் போல பயணிகளை நடத்துகின்றனர். உள்ளே மூச்சு விடக் கூட முடியாதவாறு நெரிபட வேண்டியிருக்கிறது.

மிதிபலகையில் நின்றால் பொலிஸ் பிடிப்பார்கள் என்று சொல்லிச்சொல்லி ஒவ்வொரு பஸ்தரிப்பிடத்திலும் பயணிகளை ஏற்றி அடைத்து விடுவார்கள். உள்ளே பயணிகளுடன் சில நடத்துநர்கள் தர்க்கத்திலும் ஈடுபடுகின்றனர்.

இத்தனைக்கும் அந்த சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகள் என்னதான் நேரம் பிந்தினாலும் உள்ளே பயணிகள் எவ்வளவு தான் நெரிபட்டாலும் ஆமை வேகத்திலேயே பஸ்ஸை ஓட்டிக்கொண்டு இருப்பார்கள். சில பயணிகள் சாரதிகளைத் திட்டினாலும்கூட செவிடர்கள் போலவே செயற்படுவார்கள்.

நேரம் பிந்தி பஸ் யாழ்ப்பாணத்துக்கு சென்றடைவது பற்றியோ அதிக பணம் அறவிடுவது பற்றியோ தனியார் சிற்றூர்த்திச் சங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை. ஏனைய இடங்களுக்கான சேவையில் ஒரு நிமிடம் பிந்தினாலும் குற்றப் பணம் அறவிடப்படும். இங்கு சங்கம் பெயரளவில்தான் செயற்படுகிறது.

கேட்டால் யாராவது முறைப்பாடு செய்தால் தானே நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறிவிட்டு சங்கம் இருந்துவிடும். இவற்றைப் பற்றிய எந்த ஆராய்வையும் செய்வதில்லை இதை யார்தான் தட்டிக் கேட்பார்களோ ?

க.வேலுப்பிள்ளை, மீசாலை

## மின்சார நடைமுறையில் மாற்றம் வருமா?

மின்சாரக் கட்டணம் மீற்றருக்கு 20 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக மின் பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்ததுடன் குறித்த மூன்று மாதகாலப் பகுதிக்குள்ளேயே அதிகளவு பாவனையாளர்களுக்கு 'சிவப்பு பற்றுச் சீட்டு' மின்சார சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகள் தற்பொழுது மின்சாரத்தில் தங்கியிருப்பதால் பாவனையின் அளவைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு பொது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த மூன்று மாத காலப் பகுதிக்குள்ளேயே பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் மின்சாரக் கட்டணம் மின்சார சபைக்கு செலுத்த வேண்டியுள்ளதால் மின்சாரம் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குரிய 'சிவப்புப் ப்பற்றுச் சீட்டு' மின்சார சபையினால் வழங்கப்படுகின்றது.

பொதுமக்களின் மின்சார தேவை மற்றும் அதிகரித்த கட்டணத்தை கருத்தில் கொண்டு சிவப்பு பற்றுச் சீட்டுக்கான கால எல்லையை நீடிப்பதுடன் அதிகரித்த பெறுமதியுடன் இந்த பற்றுச் சீட்டு வழங்கப்பட வேண்டும். தொடர்ச்சியாக இந்த சிவப்பு பற்றுச் சீட்டு நடைமுறை இருக்குமானால் பொது மக்கள் பலர் மின்சாரப் பாவனையை இழக்க நேரிடும். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

-நலன்விரும்பி
யாழ்ப்பாணம்.

## பியர் போத்தல் ஒரு பரிசுப் பொருளா?

இன்று இராணுவத்தினரின் ஏற்பாட்டில் அவர்களது பிரிவுக்குட்பட்ட இடங்களில் தமிழ் சிங்கள புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருவதை நாம் அனைவரும் அறிகின்றோம்.

இந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் எம் இரு இனங்களுக்கிடையேயான ஒற்றுமையின் வெளிப்பாடாக அமைய வேண்டும் என்ற மேலான கருத்து இராணுவத் தரப்பினிடம் இருக்கின்றது. இருப்பினும் எமது உறவுகள் அந்த நிகழ்ச்சிகளினூடாக கலாசார சீரழிவுகளை நோக்கி உந்தித் தள்ளப்படுவதை எவரும் மறுக்கமுடியாது.

இதனை எவரும் கண்டு கொள் ளாதவர்களாகவும், கண்டு கொண்டதை தெளிவுபடுத்தி ஒரு சீர்த்திருத்தத்தை எமது சமுதாயத்தில் ஏற்படுத்தாதவர்களாகவும் இருக்கிறார்களா ?

உண்மையில் அவர்களால் வைக்கப்படுகின்ற விளையாட்டு நிகழ்வுகள் வரவேற்கத்தக்கவை. அதேசமயம் அழகு ராணிப் போட்டி நிகழ்வை நடத்துகின்றனர். அங்கே அழகிகளாக வருகின்ற எங்கள் தமிழ்ப் பெண்கள் தம்முடைய பண்பாட்டை மீறாமல் உடை அணிகின்றனர். சிங்களப் பெண்களே தமது பண்பாட்டு உடை என்று தொப்புள் தெரியும் விதத்தில் அவர்களுடைய லுங்கியையும் மேல் சட்டையையும் அணிவது எமது சமுதாயச் சீர்கேட்டை ஊதிப்பெருப்பிக்கும் புதிய யுத்தியா?

விளையாட்டில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கொடுக்கப்படும் பரிசுப் பொருள்களாக பியர் போத்தலும் இருக்கும் என்பதை மகிழ்ச்சியாக தெரிவிக்கும் இராணுவத் தரப்பின் நோக்கம் என்ன? உண்மையில் இவைகள் எல்லாம் பரிசு பொருள்களா? கைத் தொலைபேசிகளால் இன்று எமது சமூகம் என்ன பாடுபடுகிறது ? பியர், கைத்தொலை பேசி இவை வெற்றிக்கான பரிசுகளா? அல்லது எமது இனத்தை சீர் கெடுக்கும் விதைகளா? யார் இதைத் தட்டிக் கேட்பது.


நிகழ்வில் பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள், சமூக ஆர்வலர்கள் எல்லோரும் இந்த நிகழ்வை கைதட்டி ரசிக்கின்றனர். சிந்திக்க மறுப்பது ஏன்?

உண்மையில் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் அதிகாரிகள் இது தொடர்பாக கண்மூடி மௌனிகளாக இருப்பது ஏன். தங்களுடைய பொறுப்பற்ற தன்மை எமது இனத்தை மீட்குமா? அல்லது சீர்கேட்டின் விதைகளை விதைக்கும் உந்து சக்திகளை தடுத்து நிறுத்துமா?

-சிவசக்தி, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை காலத்தை சமாளிக்க...



வெயில் காலங்களில் ஓட்டை விழுந்துள்ள ஓசோன் மண்டலத்தின் வழியாக அதிகமான அல்ட்ரா வைலட் கதிர்கள் வெளியேறும். இதனால் கண்கள் பாதிக்கப் படும். இதனைத் தவிர்க்க கூலிங் கிளாஸ் அணிவது நல்லது.

உடல் சூட்டையும், தோல் நோயையும் தவிர்க்க அதிக இளநீர் அருந்துவதுடன், நுங்கு, வெள்ளரி, தர்ப்பூசணி அதிகம் சாப்பிடவேண்டும்.

வியர்வை நாற்றத்தைப் போக்க குளிக்கும்போது எலுமிச்சம் பழத்தை அரிந்து, அதனுடன் சிறிது உப்பு தடவி கழுத்து, அக்குள் உள்ளிட்ட பகுதிகளில் தேய்த்து வந்தால் வியர்வை நாற்றம் வராது.

கோடைக் காலத்தில் வரும் அக்கி அம்மை நோய்க்கு வெள்ளரி மகத்தானது.

காஸ் நிரம்பியுள்ள குளிர்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து இந்தக் காலங்களில் கிடைக்கும் பழ வகைகளை அதிகம் சாப்பிடுவது அவசியம்.

ரோஜாப்பூ, குல்கந்து (தேனில் ஊற வைத்த ரோஜா இதழ்) சாப்பிட்டால் உஷ்ணம் குறைந்து உடல் குளிர்ச்சி ஏற்படும். வட்டமாக அரிந்த வெள்ளரியை கண்கள் மீது வைத்துக் கொண்டு உறங்கினால் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்.

மருதாணியையும், கரிசலாங்கண்ணி இலையையும் சேர்த்துக் காய்ச்சப்பட்ட தேங்காய் எண்ணெயை இரவில் தலைக்குத் தேய்த்து மறுநாள் காலை வில்வங்காய் கலந்த சிகைக்காய்ப் பொடி தேய்த்துக் குளிப்பது கோடைக் காலத்துக்கு உகந்தது.

குளிக்கும்போது தேய்ப்பதற்கு என்று ஆயுர்வேத மருந்துக் கடைகளில் தனியாகப் பொடி விற்கப்படுகிறது. இதனை வாங்கி சோப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தி வந்தால் முகத்திலும், உடலிலும் எண்ணெய் வழியாமல் நிற்கும்.

# வெயில் கால நோயிலிருந்து குழந்தைகளைக் காக்க



தகுந்த காலங்களில் தடுப்பூசி போடாத குழந்தைகள், வெயில் காலங்களில் அம்மைத் தொற்றுக்கு ஆளாகிறார்கள். அதனால் பெற்றோர்கள் குழந்தைக்கான தடுப்பூசிகளிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

வெயில் காலங்களில், ஈரத்தன்மையுள்ள பொருள்களில் கிருமிகள் மிக வேகமாக வளரும் என்பதால், பழம், காய்கறி நறுக்கிய கத்திகள், சமைக்கும் பாத்திரங்களை ஒவ்வொரு முறையும் சுத்தம் செய்து பயன்படுத்த வேண்டும்.

வெயில் தாக்கம் அதிகமாக இருக்கும் நேரங்களில், குழந்தைகள் வெளியில் விளையாடுவதை தடுத்து, கரம், செஸ் போன்றவற்றை வீட்டில் அமர்ந்து விளையா டச் சொல்லலாம்.

வியர்குருவை தவிர்க்க ஒரு நாளில் இருமுறை குளிப்பதும், விளையாடிய பின்பு கை கால்களை நன்கு சோப் போட்டு கழுவுவதும் உடல் தூய்மையை அதிகரித்து நோய் தாக்கத்தை குறைக்கிறது.

வெளியில் செல்லும்போதோ அல்லது விளையாடும்போதோ தலையில் தொப்பியும், குழந்தைகளின் கண்களைப் பாதுகாக்க, கண்ணாடி (வெப்பத் தடுப்பு) அணியச் செய்வதும் அவசியம்.

வெயில் காலங்களில் குறிப்பாக, ஆண் குழந்தைகளுக்கு சிறுநீர் கடுப்பு நோய் ஏற்பட வாய்ப்புண்டு. காரணம் விளையாடும் குஷியில் சிறுநீர் கழிக்கக்கூட மறந்துவிடுவார்கள். அதனால், அவர்களை இந்த விஷயத்திலும் கண்காணிக்க வேண்டியது பெற்றோரின் கடமை.


உணவுகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்து பின்னர் அதை எடுத்து பயன்படுத்தும் பழக்கம் உள்ளவர்களாக இருந்தால், அந்த உணவு வகைகளை நன்றாக சூடாக்கிப் பயன்படுத்துவது ஆரோக்கியத்திற்கும் வயிற்றுக்கும் நல்லது. இதனால் வயிற்றுப் போக்கு பிரச்சினைகளை தடுக்கலாம். அதுவும் வெயில் காலத்தில் வயிற்றுபோக்கு பிரச்சினைகள் வந்துவிட்டால், குழந்தைகளின் உடம்பில் நீர்ச்சத்து குறைந்து விரைவில் சோர்ந்து விடுவார்கள்.

வெளியில் செல்லும் போது, வியாபார நோக்கத்தை மையமாகக் கொண்ட சுகாதாரமற்ற முறையில் இருக்கும் சில கடைகளை தவிர்த்து, எலுமிச் சைச் சாறு, தோடம்பழச்சாறு என்பவற்றை வீட்டிலேயே தயாரித்து எடுத்துச் செல்வது நல்லது. தண்ணீரை மாற்றி மாற்றி குடிப்பதால் ஏற்படும் தொண்டை சம்பந்தப்பட்ட நோய்களைத் தவிர்க்கலாம்.

வெயில் காலத்தில் குழந்தைகள் அணியும் ஆடைக்கும் முக்கியத்துவம் தந்து, அரிப்பு ஏற்படுத்தாத, வியர்வையை உறிஞ்சக்கூடிய பருத்தி ஆடைகளை அணிவிக்கலாம்.

சாதாரண பவுடர்களுக்கு பதில் வியர்க்குருவைத் தடுக்கும் பவுடர்களைக் குழந்தைகளுக்குப் பயன்படுத்துவது நல்லது.

# முகப்பரு நீங்க...



அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். பெண்களில் சிலருக்குப் முகப் பருக்களால் ஏற்படும் பிரச்சினை அவர்க ளின் முக அழகை மட்டுமின்றி அகத்தின் அழகை யும் பாதிப்பதாக மாறிவிடுகிறது.

அத்தகையவர்களுக்குப் பருக்களைப் போக்க சில யோசனைகள்:

உணவில் கீரை மற்றும் காய்கறிகளை அதிகம் சேர்த்துக்கொள்ளுங்கள்.

முகத்தில் தோன்றும் பருக்களை ஒரு போதும் கிள்ளாதீர்கள். இது முகத்தில் வடுக்களை ஏற்படுத்துவதோடு பருக்களை மேலும் அதிகரிக்க வழி செய்கிறது.

பருக்களைப் போக்குகிறோம் என்று கடையில் கிடைக்கும் கண்ட கண்ட மருந்துகளை வாங்கிப் பூசாதீர்கள். மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்து வாங்கி மட்டுமே பூச வேண்டும்.

கொழுப்பு அதிகம் உள்ள பொருள்கள், அசைவம், எண்ணெய் பொருள்கள் போன்றவற்றை முடிந்த வரை குறைத்துக்கொள்ள வேண்டும்.

சவர்க்காரத்துக்குப் பதிலாகப் பச்சைப் பயற்றம் மாவைத் தேய்த்துக் குளிக்கலாம். குளிக்கும் நீரில் வேப்பிலைகளைப் போட்டுக் குளித்தாலும் கிருமிகளைத் தவிர்க்கலாம்.

வீட்டிலேயே பேஷியல் செய்து கொள்வது நல்லது. உங்கள் தோலுக்கு உகந்த பேஷியல் கிரீம் எதுவென்று மருத்துவரிடம் விசாரித்து அதைப் பயன்படுத்தலாம்.

எண்ணெய் வடியும் முகம் உள்ளவர்களுக்கே முகப்பரு வரும். அடிக்கடி குளிர்ந்த நீரால் முகத்தைத் துடைத்துக்கொள்வது நல்லது.

மலச்சிக்கல் இருந்தாலும் பருக்கள் வரும். அதனால் மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

தூசு நிறைந்த பகுதியில் வாகனத்தில் செல்ல நேர்ந்தால் முகத்தை மெல்லிய பருத்தித் துணியால் மூடிக்கொள்ளுங்கள்.

கஸ்தூரி மஞ்சள், நன்னாரி வேர், எலுமிச்சை தோல், ஒரேஞ் தோல், பயத்தம் மா, கடலை மா, சீயாக்காய் ஆகியவற்றைக் கலந்து அரைத்து வைத்துக் கொண்டு சோப்புக்குப் பதிலாகப் பயன்படுத்துவது நல்ல பலனை அளிக்கும்.

# எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் கவனிக்கவேண்டியவை



வெயில் காலத்தில் வெளியில் போவதென்பது கடினமான ஒன்றாகதான் இருக்கும். உங்களுக்கு எண்ணெய் பசை சருமமாக இருந்தால் கொளுத்தும் வெயில் உங்கள் எண்ணெய் பசையை மேலும் அதிகரிக்கச் செய்து உங்கள் முக அழகை கெடுத்துவிடும்.

கவலையை விடுங்கள் எண்ணெய் பசை நீங்கி அழகாக காட்சியளிக்க இதோ சில டிப்ஸ்

வெள்ளரிக்காயை தினமும் காலையில் முகத்தில் தேய்த்து வர முகத்தில் அதிகமாக எண்ணெய் வழிவதைத் தவிர்க்கலாம். வெள்ளரிச்சாற்றுடன், பால் பவுடர் கலந்து தடவினாலும், எண்ணெய் வழியாமல் முகம் பிரகாசமாகக் காணப்படும் இதைத் தொடர்ந்து ஒரு மாத காலமாவது பின்பற்ற வேண்டும்.

தக்காளிப் பழத்தை நன்கு பிழிந்து சாறாக எடுத்து முகத்தில் தடவி காய்ந்த பின், கழுவினால் எண்ணெய் வழிவது கட்டுப்படும். தக்காளியுடன், வெள்ளரிப்பழம் அல்லது ஓட்ஸ் சேர்த்து அரைத்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் கழித்தும் கழுவலாம்.

பால் மற்றும் முட்டையின் வெள்ளைக் கருவுடன், கரட் துருவலைக் கலந்து முகத்தில் தடவினால், அதிகமாக எண்ணெய் வழிவது குறையும்.

எண்ணெய் பசை சருமத்தினர், அடிக்கடி குளிர்ந்த தண்ணீரில் முகம் கழுவ வேண்டும். முகத்தை அலம்ப சோப்புக்குப் பதில் கடலை மாவைப் பயன்படுத்தலாம். இதனால், எண்ணெய் வழிவது குறைவதோடு, முகமும் பளபளப்பாக இருக்கும்.

எண்ணெய் பசைச் சருமம் உள்ளவர்கள் மோரை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், எண்ணெய் வழிவது குறையும். வெள்ளரிக்காய் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சந்தன தூள், பாதாம் பவுடர், தயிர், உருளைக்கிழங்கு சாறு ஆகியவற்றை சம அளவில் எடுத்து அவற்றை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், எண்ணெய் வழிவது குறையும்.

சோளத்தை நன்கு மாவாக அரைத்து, தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால், முகத்தின் எண்ணெய்ப் பசை நீங்கும். எண்ணெய்ப் பசை சருமத்தினர், வெயிலில் சென்றுவிட்டு வீட்டுக்கு வந்ததும், சிறிது தயிர், கடலைமா மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால் அதிகப்படியாக எண்ணெய் வழிவது குறைந்து முகம் பளபளக்கும்.

எலுமிச்சை சாறு, முட்டையின் வெள்ளைக்கரு, திராட்சைசாறு ஆகியவற்றை சம அளவு எடுத்துக் கொண்டு அவற்றை நன்றாக கலக்கி, முகத்தில் பூச வேண்டும். சிறிது நேரம் கழித்து முகத்தை தண்ணீரால் கழுவ வேண்டும்.

பப்பாளி கூழ், முல்தானி மட்டி, வேப்பிலை பொடி ஆகியவற்றை நன்றாக பசைபோல் குழைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவவேண்டும். இவ்வாறு வாரம் இரண்டு முறை செய்தால், முகத்தில் வழியும் அதிகப் படியான எண்ணெய்த் தன்மை குறையும்.

முகத்தில் எண்ணெய்ப் பசை நீங்கி பொலிவு பெற மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றினால் கொளுத் தும் வெயிலிலும் நீங்கள் அழகுராணிதான்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org